# மேனிலை முதலாம் ஆண்டு

# தமிழ்

XI

**Higher Secondary Course**
**Tamil**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2026

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# XI

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Designed by : SCERT
First Edition : 2026
Printed at : Centre for Advanced Printing and Training (C-apt), Thiruvananthapuram-695013
© Department of General Education, Government of Kerala.
ISBN 978-93-47213-04-5

## முகவுரை

உலகம் அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலமிது. 'செயற்கை நுண்ணறிவு' என்பதே எங்கும் பேசு பொருளாக உள்ளது. 'ஏ.ஐ.' என ஆங்கிலத்தில் சுருக்கமாக அறியப்படும் இந்த 'உருவாக்கப்பட்ட புத்தி' அனைத்துத் துறைகளுக்கும் ஒரு சவாலாகி விடுமோ என்ற அச்சமும் இல்லாமலில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மொழிக்கல்வியின் தேவையும் கேள்விக்குறியாகி உள்ளது. தேவைக்குத் தக்கவாறு படிக்கவும் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டால் போதாதா என்ற மனநிலை பலருக்கும் உள்ளது. மனிதகுல வரலாற்றில் அறிவியல் சார்ந்ததும் அல்லாததுமான அவனது கண்டுபிடிப்புகள் எண்ணிலடங்கா. அவை யாவற்றுள்ளும் மொழியின் உருவாக்கமே தலை சிறந்தது. காரணம், கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக அமைவது சிந்தனை அந்தச் சிந்தனை நிகழ்வுக்கு மொழி என்னும் கருவி தேவை.

மனித வாழ்க்கை நாளுக்குநாள் மாறிக்கொண்டும் வளர்ந்துகொண்டும் இருக்கிறது. ஒருவித இயந்திரத்தனமான வாழ்க்கையை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்; சமூக உணர்விலிருந்து தனிமனித உணர்வுக்கு மாறிக்கொண்டிருக்கிறோம். இத்தகையதொரு போக்கு நல்லதல்ல. மனிதன் மனிதனாக மனிதாபிமானத்துடன் வாழவேண்டும். அவ்வாறு வாழ வேண்டுமெனில் மொழியறிவும், அந்த மொழியில் தோன்றிய இலக்கியங்களின் வாசிப்பும் மிகவும் தேவை.

தமிழ் மொழியின் இனிமை, பழைமை, அமைப்பு, இலக்கண – இலக்கிய வளமை இவை குறித்த அடிப்படை அறிவு மாணவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். மேலும் சமூக நிலை, சுற்றுச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பு, வாழும் உலகின் இன்றைய போக்கு இவற்றை அறிந்து, இயன்றளவு அவற்றில் ஈடுபடுவதற்கான மனநிலையும் ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பாடங்களைப் படித்தும், செயல்பாடுகளைச் செய்தும் மொழியாற்றலை அடைக! சமூக உணர்வைப் பெறுக!

வாழ்த்துகள்

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - XI

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Hepsy Rose Mary, A.**
Associate Prof. Dept. of Tamil, University of Kerala, Kariavattom.

### Experts

**Dr. Devadas, D.**
Associate Professor of Tamil (Rtd.), Scott Christian College, (Autonomous), Nagercoil.

**Dr. Santhi, P.**
Professor, Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

**Dr. G. Santhoshkumar.**
Curriculum Committee Member, SCERT.

**Dr. Shini, S.**
Professor, Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Members

**Smt. Alli Pathumma, K.,** HSST (Tamil), Rtd., GHSS, Kumly, Idukki.
**Dr. Jancy Rani, R.,** Asst. Prof. (Tamil), All Saints College of Education, Kaliyakkavilai.
**Smt. Jasmine, J.,** HSST (Tamil), Rtd. Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.
**Dr. Jeevalatha, S.,** HSST (Tamil), BGHSS, Vannamadai, Palakkad.
**Dr. Jeyasankar, J.,** Assistant Professor in Tamil, Govt. College, Munnar.
**Dr. Karunanidhi, M.,** HSST (Tamil), Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.
**Sri. Manikantan, T.,** HSST (Tamil), Rtd., CPM Govt. HSS, Peerumad, Idukki.
**Dr. Marikkannan, A.,** HSST (Tamil), GHSS, Chenduvarai, Idukki.
**Smt. Nisha, J. V.,** Asst. Prof.(Tamil), Grace College of Education, Padanthalumoodu.
**Smt. Rafiya, A.,** HSST (Tamil), GVGHSS, Chittur, Palakkad.
**Smt. Santhi S.,** HSST (Tamil), CPM Govt. HSS, Peermade, Idukki.
**Sri. Sanny, I.,** HSST (Tamil), GMBHSS, Thycaud, Thiruvananthapuram.
**Dr. Selva kumar, R.,** Assistant Professor in Tamil, Govt. College, Munnar.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


1. காட்சிகள் ........ 7 - 26

முக்கனிகள் ........ 8 - 15

நாற்றிசைகள் ........ 16 - 21

திணைகள் ........ 22 - 29

2. அழகியல் ........ 30 - 51

காட்சிக்கலை ........ 31 - 36

நிகழ்த்துக்கலை ........ 37 - 43

திரைக்கலை ........ 44 - 51

3. தூய்மை ........ 52 - 78

உணவும் உடலும் ........ 53 - 62

நாடும் நகரமும் ........ 63 - 71

ஊரும் தெருவும் ........ 72 - 78

4. மின்னுலகு ........ 79 - 108

புதுவரவு ........ 80 - 89

புணர்வாழ்வு ........ 90 - 96

புத்துணர்வு ........ 97 - 108

அகராதி ........ 109 - 110

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

# அலகு 1
# காட்சிகள்



பிரபஞ்சத்தின் ஓர் அற்புத நன்கொடை இயற்கை. மனிதர்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே காணப்படுகிறது. மரங்கள், பறவைகள், நீர்நிலைகள் போன்ற இயற்கை வளங்களே மனிதர்களை வாழவைக்கின்றன. தன்னை இரசிப்பவர்களுக்கு இனிமையான விருந்தளிக்கும் இயற்கையைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். அத்தகைய இன்பமூட்டும் இயற்கையைக் கவிஞர்கள் இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் காட்சிப்படுத்தியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

# முக்கனிகள்



## மா

முக்கனிகள் என்று நாம் கூறுகின்றோம்
முக்கனிகள் மாபலா வாழையன்றோ?
முக்கனியுள் முதற்கனியே மா; மற் றந்த
முக்கனியுள் சிறந்ததுவும் அதுவே யாகும்.
இக்கனியே நம்மவரின் விருந்தில் எல்லாம்
ஏற்றமுறு நற்கனியாம்; கண்ணகிக்கு
இக்கனியை இடைக்குலத்து மகளிர் தந்த
எழிற்செய்தி சிலம்புநமக் கெடுத்துக் கூறும்.

மாவடுவை மெல்லியலார் எழிற்கண் ணுக்கும்
மாந்தளிரை அன்னவரின் சிற்றடிக்கும்
காவியத்தில் நாயகியின் தளிர்மே னிக்கும்
கவிஞரெலாம் ஒப்பாக்கிக் காட்டு கின்றார்;
கோவலர்கள் மாங்கனியைச் செங்க ரும்புக்
கோல்கொண்டு உதிர்த்துண்ணும் செய்தி தன்னைப்
பாவடிக்கும் குறுநூறு; அந்த நூலில்
பல்வேறு செய்தியுண்டு மாவைப் பற்றி!

மாம்பழத்தில் எத்தனையோ வகைகள் உண்டு;
வகைக்குவகை சுவைமாறும்; சிலபுளிக்கும் :
மாம்பழத்தில் பனம்பழம்போல் நாரி ருக்கும்
வகையினையும் காண்கின்றோம்: உண்பவர்க்குத்

தீம்பிழைக்கும் வகையுமுண்டு! நமதுவாழ்வில்
தினந்தோறும் நாம்காணும் மனித ருள்ளும்
மாம்பழத்தின் வகையைப்போல் தன்மை கொண்டார்
வாழ்கின்றார் ! அவர்களுந்தாம் மனிதர்! ஐயோ!

மாமரத்துக் கிளையினிலே மயில்கள் ஆடும்;
வடித்தெடுத்த கருநிறத்துக் குயில்கள் பாடும் ;
மாமரத்தில் கட்டெறும்பும் முகடும் கொட்டும்;
வாழ்க்கையிலே மகிழ்ச்சியொடு துன்பம் உண்டு
மாமரத்தைப் பார்த்திந்த உண்மை கண்டு
வாழ்வினைநாம் அமைத்திட்டால் வைய கத்தில்
மாமரம்போல் நற்சிறப்புப் பெற்று வாழ்வோம்!
மனத்திலிதை நிறுத்துங்கள்! நன்மை யுண்டு!

– கவிஞர் சாமிபழநியப்பன்

கவிஞர் சாமிபழநியப்பன் மரபுக்கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். இவர் பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்தவர், சுயமரியாதைக் கவிஞர் என்ற புகழுக்கு உரியவர். ஔவையார் இயற்றிய நீதி நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- 'மா' என்ற கவிதையினை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- மாம்பழ வகைகள் குறித்து எழுதுங்கள்.

## பழங்களும் பலன்களும்

பழங்கள் நாம் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு வழி வகுக்கின்றன. முக்கனிகளில் மா, பலா, வாழை மூன்றுமே திகட்டாத இனிப்பைக் கொண்டிருப்பவை. உடலுக்குச் சத்தும் கொடுக்கக்கூடியவை. முக்கனிகளில் இரண்டாவது கனியாகப் பலாப்பழம் உள்ளது. மிகுந்த இனிப்புச்சுவையுடையது. பலாப்பழத்தின் மேல் பகுதியானது மிகவும் கடினமாக இருந்தாலும் அதன் உள்பகுதி சுவை மிகுந்ததாகும். பலாப்பழத்தின் சுவை பிடிக்காதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். உலகின் சில இடங்களில் 'பழங்களின் அரசன்' என்று இது போற்றப்படுகிறது.

பலாச்சுளைகள் ஒவ்வொன்றும் நரம்புகள் போன்ற சடைகளின் இடையில் பதிந்திருக்கும். பலாப்பழத்தின் சுவை மரத்துக்கு மரம் வேறுபாடு உடையதாக இருக்கும். சில பலாப்பழச் சுளைகள் தேன் போன்று இனிப்பாகவும், சில பழங்கள் இனிப்பு குறைந்தவையாகவும் இருக்கும். மஞ்சள் நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் பலாப்பழச் சுளைகள் காணப்படும். பெரும்பாலும் பழத்தோட்டங்களில், பலாமரம் துணைப்பயிராகப் பயிரிடப்படுகிறது. இவை வீட்டுத்தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றன.

பலாப்பழத்தின் வேறு சில பெயர்கள்... சக்கை, பலவு, பலாசம் மற்றும் ஏகாரவல்லி என்பன.

### பலாப்பழத்தின் மருத்துவக் குணங்கள்

- பலாப்பழம் மூளைக்கும், உடலுக்கும் அதிக பலத்தைத் தரும். நரம்புகளை உறுதியாக்கும்.
- உடல் பலவீனமாக இருப்பவர்கள், உடல் மெலிந்திருப்பவர்கள் பலாச்சுளையைச் சாப்பிடும்போது, ஆரோக்கியமான உடல் பருமனை அடைவார்கள்.
- பலாப்பழம் சாப்பிடுவதால், எலும்பு தேய்மானத்தால் ஏற்படும் மூட்டு வலி பிரச்சினைகள் விரைவில் குணமாகும்.
- பலாப்பழம் இரத்தத்தை விருத்தி செய்யும். இரத்த சோகை ஏற்படுவதைத் தடுக்கும். ஆஸ்துமா பிரச்சினையில் இருந்து விரைவில் நிவாரணம் பெற உதவும்.
- பாக்டீரியாவினால் ஏற்படும் சிறுநீரகக் குழாய் தொற்றுநோய் குணமடையத் தினமும் 2 வேளை வீதம் பலாப்பழ ஜூஸ் தொடர்ந்து ஐந்து நாட்கள் உட்கொள்ள வேண்டும்.
- பலாப்பழத்தில் ஆன்டி–ஆக்ஸிடன்ட், பைட்டோ நியூட்ரியன்டுகள் மற்றும் ப்ளேவோனாய்டுகள் உள்ளன. இவை புற்றுநோயின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.
- பலாப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால், மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும். மேலும் இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், செரிமான மண்டலம் சீராகச் செயல்பட்டு, நச்சுக்கள் அனைத்தும் வெளியேறும்.
- உடலில் உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம் மற்றும் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு குறையும். சருமத்தை இளமையோடு வைத்திருக்க உதவும்.
- பலாப்பழம் சாப்பிடுவதால், தைராய்டு மற்றும் ஹார்மோன் உற்பத்தி அதிகரிக்கும். கண் பார்வைக்கு உதவும் விட்டமின் ஏ அதிக அளவில் உள்ளது. மற்றும் வைட்டமின் சி அதிகம் இருப்பதால், இவற்றை உட்கொள்ளும் போது, சளி மற்றும் நோய்த்தொற்றுகள் தாக்குவது தடுக்கப்படும்.

ஊரே மணக்கும் சுவைகொண்ட பலாப்பழம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் விற்பனைக்கு வரும். பலாப்பழத்தில் கறிப்பலா, ஆசினிப்பலா, கூழைப்பலா, வருக்கைப்பலா என வகைகள் உண்டு.

பலாப்பழம் இருக்கும் இடத்தில் வரும் இனிமையான வாசனையை மட்டும் நுகர்ந்து செல்லாமல், அதனை வாங்கிச் சாப்பிடவும் செய்யுங்கள். ஏனெனில் பலாப்பழம் வருடம் முழுவதும் கிடைக்காது. அதற்கென்று வரும் சீசனின்போது வாங்கிச் சாப்பிட்டால்தான் அதன் உண்மையான சுவையை ருசிக்க முடியும். பலாப்பழத்தை மற்ற பழங்களைப்போல வெறுமனே சாப்பிடுவதைவிடத் தேன், நெய், வெல்லம், பனங்கற்கண்டு என இவற்றில் ஏதாவது ஒன்றைச்சேர்த்துச் சாப்பிட்டால், முழுமையான பயன் கிடைப்பதோடு, உடல் நலனுக்கும் ஏற்றதாக அமைகிறது. பலாப்பழம் உடல் சூட்டை ஏற்படுத்தக்கூடியது என்று பலரும் ஒதுக்கிவிடுகிறார்கள்.

பலாப்பழங்களிலிருந்து பெறப்படும் சாறு ஐஸ்கிரீம், பழக்கூழ் மற்றும் பலவிதமான உணவு வகைகளில் பயன்படுகின்றன.

பலாப்பழம் மிகவும் சிறந்த பல மருத்துவ குணங்களை உள்ளடக்கியது. பழங்களிலேயே பலாப்பழம் இனிப்பான சுவையை

### எழுத்து

ஒரு மொழிக்கு அடிப்படையானவை எழுத்துகள். தமிழ் எழுத்துகளை மூன்றாக வகைப்படுத்துவர். அவை, உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்பன.

### உயிரெழுத்து

தமிழில் உயிரெழுத்துகள் பன்னிரண்டு (12). அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

இவற்றுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெடில் எழுத்துகள்.

### மெய்யெழுத்து

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள். மெய்யெழுத்துகளை அவை ஒலிக்கும் ஓசையின் அடிப்படையில் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாகப் பாகுபடுத்துவர்.

க், ச், ட், த், ப், ற் – வல்லினம்

ங், ஞ், ண், ந், ம், ன் – மெல்லினம்

ய், ர், ல், வ், ழ், ள் – இடையினம்

### உயிர்மெய்யெழுத்து

உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகளுடன் இணைந்து வருவதை உயிர்மெய்யெழுத்துகள் என்பர்.

உயிர்மெய்யெழுத்துகள் –

உயிர் எழுத்துகள் (12) × மெய் எழுத்துகள் (18) = 216

இவை தவிர தமிழில் ஆய்த எழுத்து ஒன்றும் உண்டு – ஃ

தமிழில் மொத்த எழுத்துகள் : 247

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துகள் | – | 12 |
| மெய் எழுத்துகள் | – | 18 |
| உயிர்மெய் எழுத்துகள் | – | 216 |
| ஆய்த எழுத்து | – | 1 |
| | | 247 |

மட்டும் கொண்டிருப்பதில்லை. அதனுள் ஏகப்பட்ட அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களான வைட்டமின் ஏ, வைட்டமின் சி, கால்சியம், பொட்டாசியம், இரும்புச்சத்து, தையமின், ரிபோஃப்ளேவின், நியாசின், மக்னீசியம் மற்றும் பல சத்துகள் நிறைந்துள்ளன. இப்பழத்தை எவ்வித அச்சமும் இல்லாமல் ருசித்துச் சாப்பிடலாம். இது உடலுக்கு அதிக பலத்தைத் தரும். அதுமட்டுமின்றி, இது உடல் அழகைப் பாதுகாக்கவும் செய்கிறது.

– மீனாசேகர்

இக்கட்டுரை 'விகடகவி' என்னும் இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- பலாக்கனியை உண்பதால் ஏற்படும் நன்மைகளைத் தொகுத்து எழுதுங்கள்.

## முக்கனியில் எக்கனி (விவாதமேடை)

**பள்ளியில் ஆண்டு விழா..**

முக்கனி மரங்களில் சிறந்தது எது? விவாதமேடை!

பங்கு பெறுவோர்: மாணவ மாணவிகள் (மூர்த்தி, அனுஷா, ஆகாஷ்)

நடுவர் : பாப்பையா

அறிவிப்பாளர் ராஜா: முக்கனி மரங்களில் முதலில் மாவின் சிறப்பைப் பற்றி மாணவன் மூர்த்தி பேசுவார்.

மூர்த்தி : எல்லோருக்கும் வணக்கம். கைலாசத்தில் விநாயகருக்கும் முருகனுக்கும் ஒரு கலகத்தை நாரதர் ஏற்படுத்திய கனி மாம்பழம். காரைக்கால் அம்மையாரைத் துறவு பூண வைத்ததும் மாம்பழம். பிஞ்சில் அதற்கு வடு, முற்றியதும் காய்.. பழுத்தால் பழம் என மூன்று நிலைகளிலும் அதற்குப் பயன் உண்டு. மாவிலை மங்கலத் தோரணம் ஆகும். பூரணக் கும்பத்தில் தேங்காயைச் சுற்றி வைப்பது மாவிலைகளே. மாமரப்பலகைகள் சேதமின்றி கிடைக்கும் மரவேலைகளுக்கு. வெளிநாட்டுச் செலாவணி ஈட்டித் தரும் ஒரு பழம்... விமானத்தில் பறக்கின்றன கோவாவின் அல்போன்ஸா பழங்கள். உலக மாம்பழ உற்பத்தியில் நம் நாடு முதலிடம் வகிக்கிறது. 15 மில்லியன் மெட்ரிக் டன்கள் நம் நாட்டில் விளைகின்றன உலக மொத்த உற்பத்தியான 42 மில்லியன் மெட்ரிக் டன்னில்... மாம்பழத்தில் 13 வைட்டமின்கள் உள்ளன. கால்சியம், இரும்புச் சத்து, பொட்டாசியம், மாங்கனீசு, துத்தநாகம், சோடியம், பாஸ்பரஸ், மெக்னீஷியம் என எட்டு உலோக மூலகங்களின் சத்துகள் உள்ளன.

பாப்பையா : இத்தனை சத்து இருக்கா!

மூர்த்தி : அது மட்டுமா மாங்கிஃபெரின் என்ற ஸாந்தனாய்டு சத்து உள்ள ஒரே பழம் மாம்பழம்தான். மாமன்னர் அக்பர் ஒரு லட்சம் மாங்கன்றுகளைத் தர்பங்காவில் நட்டதாகச் சரித்திரம் சொல்கிறது. இன்றும் டிவிகளில் மாம்பழ ரசங்களுக்கு மட்டுமே விளம்பரம் செய்யப்படுகிறது.

பாப்பையா : வருஷம் முழுக்க கிடைக்குமாமே அந்த மாம்பழப் பானம்!

மூர்த்தி : ரவிந்திரநாத் தாகூர் மாம்பழ ரசிகர்.

ஆமெர் மொஞ்சாரி எனக் கவிதைகள் படைத்துள்ளார். மகாகவி காளிதாசரும் மாம்பழங்களைப் பாடியுள்ளார்.

பாப்பையா : நம்ம ஊர்ல மாம்பழக் கவிராயரும் இருக்காரே..

மூர்த்தி : இமாம் பசந்த் மாம்பழம்தான் பழங்களின் அரசன் எனக் கொண்டாடப் படுகிறது.. அதன் சுவைக்கும் மணத்துக்கும் ஈடு இணை ஏது? மா வத்தல் மருந்து, அதன் கொட்டையில் உள்ள பருப்பும் மருந்து. ஆகையால் முக்கனிகளில் சிறந்தது "மா" வே ..!

பாப்பையா : எனக்கு வாயில் எச்சில் ஊற வைச்சிட்டார் மாணவன் மூர்த்தி. திருவாங்கம் தாத்தாச்சாரியார் தோட்டத்து இமாம் பசந்த் பழம் கிட்டே நிக்க முடியுமான்னு கேட்டு முடிச்சிருக்கார். பார்ப்போம்.. அடுத்து வர்றவங்க என்ன பண்ணுறாங்கன்னு.

ராஜா : இப்போது மாணவி அனுஷா, பலாதான் உயர்ந்தது எனப் பேச வருகிறார்.

அனுஷா : அனைவருக்கும் வணக்கம். பண்ருட்டி போய் யாராவது பலாப்பழம் வாங்கி இருக்கீங்களா.

பாப்பையா : அடடா! ரயிலில் வரும்போது விழுப்புரம் தாண்டினா சுளை வருமே ஆஹா..

அனுஷா : அதன் வண்ணம் என்ன! மணம் என்ன! ஒரு பலாப்பழம் இருந்தால் அந்த இடமே மணக்கும். கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலான்னு பாடினார் பாரதிதாசனார். பலா தானே ருசி மிக்கது. பழங்களில் பெரியது இதுதான்.

பாப்பையா : ஆமாம் பெரிய பானை அளவுகூட இருக்கும். வேரில் ஒட்டிக் கிடக்கும். என்ன எடை. 40 கிலோவரை பார்த்திருக்கேன்.

அனுஷா : போர்ச்சுக்கீசியர்கள் கேரள நாட்டில் இந்தப் பழத்தின் சுவையை அறிந்து வியந்தனர். பலா மரங்களை 6000 ஆண்டுகளாக இந்தியாவில் பயிரிட்டதற்கான சரித்திரச் சான்றுகள் உள்ளன.

பாப்பையா : எதுக்கும் சரித்திரச் சான்று வேணுமய்யா.. இதோ சொல்லிட்டாங்க பாருங்க.

அனுஷா : கேரளத்தில் பலாச்சுளைகளை வெல்லத்துடன் சேர்த்துப் பதப்படுத்திப் பல மாதங்கள் சாப்பிடப் பாகம் பண்ணி வைப்பார்கள். தாய்லாந்து, வியட்னாம் நாடுகளில் பயிரிடப்படும் பலா பல நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது பதப் படுத்தப்பட்டு. வியட்நாமில் பலாப்பழ சூப் மிகவும் பிரசித்தம். அந்த மூசுப் பிஞ்சில் மசாலா சேர்த்து கோலா வறுவல் மற்றும் குழம்பு வைத்தால் சுவைக்கும்.

பாப்பையா : ஆஹா அற்புதம்..சைவ உணவின் ருசி உச்சமய்யா அது...

அனுஷா : பலா மூசு சமையல் நார்ச்சத்து மிக்கதால் உடல் நலனுக்கு உகந்தது. பலாச் சுளையில் 11 வைட்டமின்களும் எட்டு உலோகச் சத்துக்களும் உள்ளன. 100 கிராம் சுளையில் இரண்டு கிராம் புரோட்டின் உள்ள ஒரே பழம் பலா.

பாப்பையா : கேட்டுக்குங்க..

அசைவ உணவில் உள்ள சத்தும் சுவையும் பலாவில் இருக்கப்பா.. இதைவிட உசத்தி என்னான்னு கேட்கறாங்க.

அனுஷா : மஞ்சள் நிற பலாமரத்தின் கட்டைப் பலகை மகிமை சொல்லி மாளாது. உறுதி மிக்கது.. வீணை, மிருதங்கம், கஞ்சிரா செய்ய பலா மரம்தான் வேண்டும்.

பாப்பையா : கேட்டீங்களா.. வீணையும் மிருதங்கமும் மங்கல நிற மஞ்சள் பலா மரத்தில் செஞ்சதப்பா. அது இசை சம்பந்தப்பட்ட மரமப்பா, புண்ணிய மரமப்பா.

அனுஷா : பழுத்துக் கொட்டிய இலைகளையும் ஆடுகள் விரும்பி உண்ணும். பலாக் கொட்டைகள் சமையலில் ருசி தரும். எல்லாக் குழம்புகளிலும் போடலாம், சுட்டும் தின்னலாம். பலா ஒரு நிலா எனச் சொல்லி முடிக்கிறேன் வணக்கம்!

பாப்பையா : நம் நாடு மட்டுமல்ல.. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், வியட்நாம் எல்லாம் பலா மகிமை பிரசித்தம் எனச் சொல்லிட்டாங்க அனுஷா.. என்னா தகவல்கள்.. திக்குமுக்காட வச்சிட்டாங்க.. பலா பெருமையை... வீணை தொனியில்... மிருதங்க ஜதியில்!

ராஜா : அடுத்து மாணவர் ஆகாஷ் வாழை பற்றி பேசுவார்.

ஆகாஷ் : அவையோருக்கு வணக்கம். (தன் பையில் இருந்து ஒரு வாழைப் பழத்தை எடுத்து நடுவரிடம் நீட்டி) ஐயா இதைச் சாப்பிட உங்களுக்கு எத்தனை நாழி பிடிக்கும்

பாப்பையா : நாழியா? இதோ உரிச்சேன் சாப்பிட்டேன். முடிஞ்சுது கதை!

ஆகாஷ் : மற்ற பழங்களை அப்படி எளிதில் சாப்பிட முடியுமா? எல்லா சுப காரியங்களிலும் தலைமை வகிப்பது வாழைப்பழச் சீப்பு தானே.. வசதி இல்லாத ஏழைகளும் இரண்டு வாழைப் பழங்களை இறைவனுக்கு நைவேத்தியம் செய்து விடுவார்கள். எளியவர்களின் பழம் வாழை!

பாப்பையா : இறைவன் எளியவர்களுக்கு எளியவன். பக்தி செலுத்த இரண்டு வாழைப் பழம் போதுமப்பா. சாப்பிட எளிது. கஷ்டமில்லாததப்பா சுலபமானது.. அடடா!

ஆகாஷ் : அழுகிற குழந்தைக்கு ஏற்றது வாழைப்பழம் என்பார்கள். குழந்தையின் சிறந்த உணவு அது. 107 நாடுகளில் வாழை பயிராகிறது. வாழைப் பழத்தில் 75 சதவீதம் தண்ணீர்தான். நீர்ச்சத்து மிக்க பழம் தாகத்துக்கு உகந்தது.

பாப்பையா : வெயில் நேரத்தில் ஜூஸ் வேண்டாங்க. ரெண்டை உரிச்சுத் தள்ளுங்க. தாகம் அடங்கிடும்ன்னு சொல்றார். காசு செலவில்லீங்க.. சிக்கனமானதுங்க.

ஆகாஷ் : வாழைமரம் மங்கல நிகழ்வுக்கு வாசற்படி! குலைதள்ளிய வாழை நல் நிமித்தம்! கண்ணுக்கு அழகு.. வாழைப் பூ உள் மொட்டு குடல் அழற்சிக்கு மருந்து! வாழை நார் பூ தொடுக்க உதவும். வாழைப் பட்டையில் மூடிவைத்த வெற்றிலை ஒரு வாரம் வாடாது....., பூமாலைகள் காயாது! வாழைத்தண்டு சிறுநீரகக் கற்களுக்கு மருந்து!

பாப்பையா : லட்சக் கணக்கில் செலவு வேண்டாம். பத்து ரூபாயில் ஒரு தண்டு வாங்குங்க போதும். பொரியல் செஞ்சு சாப்பிட்டுப் பாருங்க. நீர்க்கடுப்புப் போயிடுமுங்க.

ஆகாஷ் : நுனி வாழை இலை விருந்துக்கு அழகு!

பாப்பையா : சூடா பாயசத்தை இலையில் விட்டு அப்பளத்தை நொறுக்கி உள்ளங்கையில் வழிச்சு ஒரு உறி உறிஞ்சு பாருங்க.. அந்த வாழை இலை வெந்த மணத்தோட ஆஹா என்னா ருசி.. வருமா.. கிடைக்குமா.. வேறே எதிலும்?

ஆகாஷ் : கி.மு 8000 ஆண்டுக்கு முன்னர் வாழை பயிரிடப்பட்டதாய்ச் சரித்திர வல்லுநர்கள் கருதுகிறார்கள்! கி.மு முதலாம் நூற்றாண்டிலேயே மடகாஸ்கரில் வாழை இருந்ததற்கான சான்றைச் சரித்திர ஆசிரியர்கள் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். எகிப்தில் பத்தாம் நூற்றாண்டு இலக்கியங்களில் வாழைப்பழக் குறிப்பு உள்ளது. வாழைப்பழ ஏற்றுமதியில் ஆண்டுக்கு 25 மில்லியன் மெட்ரிக் டன் அனுப்பி நம் நாடு முதனிலை வகிக்கிறது.

பாப்பையா : நாம சாப்பிட்டது போகவா?

ஆகாஷ் : எட்டு வைட்டமின்களும் ஏழு உலோகச் சத்துக்களும் வாழைப்பழத்தில் உள்ளன. பல்லை உறுதி ஆக்கும் ஃபுளோரைடு சத்தும் உள்ளது. 100 கிராம் பழத்தில் 358 மில்லிகிராம் பொட்டாசியம் உள்ள ஒரே பழம் வாழை. ஜப்பானில் வாழை நாரில் இருந்து ஒருவித மெல்லிய துணி தயாரிக்கிறார்கள். அது பாரம்பரிய கிமானோ, கமுஷிமோ உடையில் பயன்படுகிறது.

பாப்பையா : இந்தத் தீபாவளிக்கு அந்தத் துணியிலதான் சட்டை தெச்சுக்கணும்!

ஆகாஷ் : நேபாளத்தில் வாழை நாரில் விரிப்புகள் நெய்கிறார்கள். வாழை நாரில் பேப்பர் செய்கிறார்கள். பஞ்சாமிர்தம் செய்ய வாழைப் பழமே முதன்மை. ஒரு வாழை போதும்! வாழையடி வாழையாகத் தழைத்துவிடும்! செலவு குறைவு! பயன் அதிகம்! காட்சிக்கு இனிமை! பயன்களோ இலைமுதல் அடிவரை! ஈடு இணை உண்டோ இதற்கு. வணக்கம்!

பாப்பையா தீர்ப்பு : அருமையா பேசினாங்க.. வாசனைக்கு, அன்னியச் செலாவணிக்கு மாம்பழம்! ருசிக்கு பலா! எளிமை மிகுந்த வாழைன்னு! ஆனால் ஏழை முதல் பணக்காரர் வரை எளிதில் அணுக முடிந்தவரே சிறந்த தலைவர்! இல்லையா? அதை வைத்துப் பார்க்கையில் வாழைப்பழத்துக்கு நிகர் உண்டா.. ஓட வேண்டாம் தேட வேண்டாம். மிக அருகில் கைக்கெட்டிய தூரத்தில் கிடைக்கும் ஒரே பழம்.. வாங்க எளிது, சாப்பிடவும் எளிது. எனவே வாழையே தலைசிறந்தது எனத் தீர்ப்பளிக்கிறேன்.

– என்.எஸ். வி. குருமூர்த்தி

தினமணி நாளிதழில் சிறுவர் மணி என்னும் பகுதியில் வெளியான விவாத மேடை

## செயல்பாடுகள்

- வாழையின் வரலாறு குறித்து எழுதுங்கள்.
- 'வாழையடி வாழை' என்ற பழமொழிக்கு விளக்கக் குறிப்புத் தயாரியுங்கள்.
- முக்கனிகளின் சிறப்புகள் குறித்து குறிப்பு எழுதுங்கள்.

# நாற்றிசைகள்



## தமிழ்த் தென்றல்

தென்னாட்டிலே தென்றல் என்றொரு பொருள் உண்டு. தனியே அதற்கொரு சுகம் உண்டு. வசந்த காலத்தில் தெற்கேயிருந்து அசைந்து வரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர். வடக்கேயிருந்து வரும் குளிர்க் காற்றை வாடை என்றார்கள்; தெற்கேயிருந்து வரும் இளங்காற்றைத் தென்றல் என்றார்கள்; வாடை என்ற சொல்லிலே வன்மை உண்டு: தமிழகத்தார் வாடையை வெறுப்பர்; தென்றலில் மகிழ்ந்து திளைப்பர்.

இயற்கை அன்னை இனிய கோலங்கொண்டு விளங்கும் இளவேனிற் காலத்தில், மெல்லியத் தென்றலைத் தேராகவும் இனிய கரும்பை வில்லாகவும் குயிலைத் தூதாகவும் கொண்டு மன்மதன் ஆட்சி புரிகின்றான் என்று கவிஞர் பாடி மகிழ்வர்.

இத்தகைய தென்றல், பிறப்பு வகையிலும் சிறப்பு வாய்ந்தது. நறுமணங் கமழும் சந்தனச் சோலை சூழ்ந்த செந்தமிழ் மலையே அதன் பிறப்பிடம் என்பர்.

"திங்கள்முடி சூடுமலை, தென்றல் விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை, தமிழ்முனிவர் வாழுமலை"

என்று அம்மலையைப் புகழ்ந்து பாடினாள் ஒரு குறவஞ்சி. மெல்லிய முகிலைத் துகிலாக உடுத்து, வெள்ளிய மதியை முடியிலே அணிந்து விளங்கும் பொதிகைத் தாயின் மடியிலே தவழ்ந்து விளையாடும் இளங்குழந்தையாக அவ்வஞ்சிக்குத் தென்றல் காட்சியளிக்கிறது.

'திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி'க்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளியபொழுது, பொதிகைத் தென்றல் அவரை வரவேற்று இன்ப சுகம் தந்தது. தண்ணறுஞ் சோலைகளிலும் தாழம் பூக்களிலும் நுழைந்து, நறுமணம் கவர்ந்து வந்த பொதிகைத் தென்றலைத் தேவாரப் பாட்டில் இசைத்துப் பாராட்டினார் அவ்விளங்கவிஞர்.

"துன்றுதண் பொழில் நுழைந்து எழுவிய கேதகைப்
போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வேலி உறை
செல்வர் தாமே"

என்பது அவர் திருப்பாட்டு. பொதிகையிலே தவழ்ந்த குழவித் தென்றல் நெல்லையம் பதியிலே நடந்து உலாவக் கண்டு இன்புற்றார் அக்கவிஞர்.

மதுரை மாநகரின் அருகே கண்ணகியும் கோவலனும் நடந்து சென்றபொழுது தென்றல் அவர்களை எதிர்கொண்டு அழைத்தது. அதன் பிறப்பையும் வளர்ப்பையும் எடுத்து உரைக்கின்றார் இளங்கோவடிகள்:

"மலயத்து ஓங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்"

என்பது அவர் புகழுரை; முத்தமிழ் முனிவன் வாழும் மயிலையிலே பிறந்து, சங்கத் தமிழ் வழங்கும் மதுரையிலே வளர்ந்த தென்றலைத் தமிழ்த் தென்றலாகவே கருதி இன்புறுகின்றார் கவிஞர்; புலவர் பாடும் புகழுடைய தென்றலைப் போற்றி மகிழ்கின்றார்.

மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத பேரின்ப சுகத்தை ஒல்லும் வகையால் உணர்த்தலுற்றார் அருட்கவிஞர் ஒருவர்; இளவேனிற் காலம்! சித்திரை மாதம்! முழுமதி எங்கும் ஒளி வீசுகின்றது! தண்ணீர் நிறைந்த ஒரு தாமரைக் குளத்திலே அவ்வொளி தவழ்கின்றது. இவ்வியற்கைக் காட்சியைக் கண்டு இன்புற்றிருக்கின்றான் ஒருவன்.

அப்போது தென்றல் அசைந்து வருகின்றது. அம்மெல்லிய காற்றிலே நல்ல வீணையின் ஒலி மிதந்து வந்து செவிக்கு விருந்தளிக்கின்றது. இதனைக் கவிதையிலே காட்டுகின்றார் கவிஞர்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது திருநாவுக்கரசர் இசைத்த பாட்டு. ஈசன் அளிக்கும் இன்ப சுகம் வசந்த காலத்தில் இசைத்த இயற்கை இன்பம் போன்றது என்று அருளினார் அவ்வருட் கவிஞர்.

புகழ் பூத்த பொதிய மலையிற் பிறக்கும் தென்றலைப் போன்று, பொருள் பூத்த விருதுநகரிலே பிறக்கின்றது 'தமிழ்த் தென்றல்'. இலக்கிய மறுமலர்ச்சிச்

சோலையில் புகுந்து தமிழ் மணத்தையெல்லாம் தமிழ்த் தென்றல் வாரி வழங்கும் என்று தமிழகம் எதிர்பார்க்கின்றது . தென்றல் வீசும் காலத்தில் பிரிந்தவர் பொருந்துவர்; பிணக்கமுற்றவர் இணக்கமுறுவர்; ஊடி நின்றவர் கூடி மகிழ்வர் என்பது தமிழர் கொள்கை.

"ஊடினீர் எல்லாம் உருவிலான் தன் ஆணை
கூடுமின் என்று குயில் சாற்றும்"

என்பதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனவே தமிழ்த் தென்றல் தமிழர் இனத்திலே பிரிந்தவரைப் பொருத்தும்; வேறுபட்டவரை ஒன்றுபடுத்தும்; தமிழ்க் குலத்தை அழிக்கின்ற வேற்றுமைகளை ஒழிக்கும்; தமிழருக்கு இன்பநெறி காட்டும் என்று நம்புகின்றோம்.

– ரா.பி. சேதுப்பிள்ளை

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 1896 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராஜவல்லிபுரம் என்ற இடத்தில் பிறந்தார். தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும் உரைநடை எழுதுவதிலும் வல்லவர். வேலும் வில்லும், தமிழ் விருது, சிலப்பதிகார நூல் நயம், ஆற்றங்கரையினிலே, ஊரும் பேரும், தமிழ்நாட்டு நவமணிகள் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவரின் தமிழின்பம் என்ற நூலுக்கு 1955 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. இங்குத் தரப்பட்டுள்ள கட்டுரை தமிழின்பம் நூலில் இடம்பெற்றது.

## செயல்பாடுகள்

- தென்றல் காற்றின் சிறப்புகள் பற்றி ரா.பி. சேதுப்பிள்ளையின் கட்டுரையில் கூறப்பட்டுள்ள செய்திகளை விளக்கி எழுதவும்.
- ஈசனின் திருவடிகளைத் திருநாவுக்கரசர் எவ்வாறு போற்றுகிறார்?
- ரா.பி.சேதுப்பிள்ளையைச் 'சொல்லின் செல்வர்' என்பர். அக்கூற்றினை இக்கட்டுரை வழிநின்று விளக்குக.

## காற்று

ஹே, காற்றே,

எங்களைக் கடந்து போகிற நீ ஒரு முறை இனிமையாகவும், மென்மையாகவும் பாடுகிறாய். இன்னொரு முறை புலம்புகிறாய்; பெருமூச்சு விடுகிறாய். உன்னைக் கேட்க முடிகிறது; பார்க்க முடியவில்லை. உனது தீண்டலை உணர முடிகிறது; வடிவத்தை அறிய இயலவில்லை. எங்களின் உணர்வுகளைச் சுற்றிச் சூழ்ந்துள்ள, ஆனால் மூழ்கடிக்காத அன்பின் சமுத்திரம்போல் நீ இருக்கிறாய்.

மலைகளோடு நீ ஏறிப்போகிறாய்; பள்ளத்தாக்குகளோடு இறங்கி விடுகிறாய்; வயல்களிலும், புல்தரைகளிலும் கலந்து போகிறாய். உனது ஏற்றத்தில் பலன் தெரிகிறது; இறக்கத்தில் மென்மை தெரிகிறது; கலந்து போதலில் தயை தெரிகிறது. ஒடுக்கப்பட்டவர்கள் மீது இரக்கமும், அகந்தையும் சக்தியும் படைத்தவர்களிடம் கடுமையும் காட்டுகிற கருணைமிக்க அரசன் போல் நீ இருக்கிறாய்.

இலையுதிர் காலத்தில் பள்ளத்தாக்குகளில் நீ புலம்பித் திரிகிறாய். மரங்கள் உனது தேம்பலை எதிரொலிக்கின்றன. மழைக்காலத்தில் நீ உனது விலங்குகளை உடைத்தெறிகிறாய். இயற்கையின் எல்லா அம்சங்களும் உன்னுடன் சேர்ந்து கலகம் செய்கின்றன.

கோடை நாட்களில் நீ இறந்து போனாயோ? அல்லது திராட்சைத் தோட்டத்துக் கனிகளின் இதயங்களில், களத்து மேட்டுக் கோதுமைக் கதிர்களிலும் நீ உறங்கிப் போனாயோ?

உனது பாடல்களை நீரின் முகத்திலேயே எழுதுகிறாய்; அதன் பின் அழித்து விடுகிறாய். கவிஞனும் படைப்பின்போது இப்படியே செய்கிறான்.

தெற்கிலிருந்து நீ காதலைப்போல் கதகதப்பாய் வருகிறாய்; வடக்கிலிருந்து மரணத்தைப் போல் கடுங் குளிருடன் வருகிறாய்; கிழக்கிலிருந்து ஆத்ம ஸ்பரிசம் போல் மென்மையாக வருகிறாய்; மேற்கிலிருந்து ஆத்திரமும், கோபமும் போல் ஆக்ரோஷமாய் வருகிறாய்.

பாலைவனத்தில் வெறிபிடித்துத் திரிகிறாய்; கள்ளங்கபடமற்ற ஒட்டகக் கூட்டங்களைக் காலடியில் போட்டு மிதிக்கிறாய்; மணல் குன்றில் அவற்றைப் புதைக்கிறாய்.

எங்களின் இதயங்களை, பெருமூச்சுகளை, சுவாசித்தல்களை, புன்னகைகளை எங்கே நீ எடுத்துப் போகிறாய்?

நிசப்தமான இரவில், இதயங்கள் உன்னிடம் தம் இரகசியங்களை வெளிப்படுத்துகின்றன. விடியலில் நீ தீண்டிய பிறகே கண்கள் திறக்கின்றன. ஆயினும் இதயம் உணர்வதையும், கண்கள் பார்ப்பதையும் பற்றிக் கவலைப்படுவதில்லை.

ஹே. காற்றே.
கேட்கிறவர்க்கெல்லாம் உயிரே...
நீ கேட்கிறாயா.?

–கலீல் ஜிப்ரான்
தமிழில்: என். ஆர். தாசன்

கலீல் ஜிப்ரான் (1883–1931) மிகச்சிறந்த லெபனீஸ் – அமெரிக்க எழுத்தாளர் ஆவார். தீர்க்கதரிசி என்னும் நூலின் ஆசிரியர். இங்கு இடம்பெற்றுள்ள காற்று என்னும் கட்டுரைப் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்தவர் என். ஆர். தாசன். இவர் 'கு அழகிரிசாமியின் எழுத்துகள்' முதலாகப் பல நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- 'இயற்கையின் வரம் காற்று; அது உயிர்களின் மூச்சு' என்ற கருத்தை விளக்குங்கள்.
- காற்றின் சிறப்புகள் பற்றி கலீல் ஜிப்ரான் தெரிவிக்கின்ற செய்திகளை விளக்கி எழுதுங்கள்.
- வீசும் காற்றில் நீங்கள் மகிழ்ந்ததுண்டா? காற்று உங்களுக்குத் தந்த வாழ்க்கை அனுபவத்தைச் சுவைபட எழுதுங்கள்.

## தென்றல்

### மென்காற்றும் வன்காற்றும்

அண்டங்கள் கோடி கோடி
அனைத்தையும் தன்ன கத்தே
கொண்டஓர் பெரும் புறத்தில்
கூத்திடு கின்ற காற்றே!
திண்குன்றைத் தூள் தூளாகச்
செய்யினும் செய்வாய்; நீஓர்
துண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்!

### தென்னாடு பெற்ற செல்வம்

உன்னிடம் அமைந் திருக்கும்
உண்மையின் விரிவில், மக்கள்
சின்னதோர் பகுதி யேனும்
தெரிந்தார்கள் இல்லை யேனும்
தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன்இன் பத்தைத்
தென் னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்?

### தென்றலின் நலம்

குளிர்நறுஞ் சந்தனஞ் சார்
பொதிகையில் குளிர்ந்தும், ஆங்கே
ஒளிர்நறு மலரின் ஊடே
மணத்தினை உண்டும், வண்டின்
கிளர்நறும் பண்ணில் நல்ல
கேள்வியை அடைந்தும் நாளும்,
வளர்கின்றாய் தென்ற லேஉன்
வரவினை வாழ்த்தா ருண்டா?

### அசைவின் பயன்

உன்அரும் உருவம் காணேன்
ஆயினும் உன்றன் ஒவ்வோர்
சின்னநல் அசைவும் என்னைச்
சிலிர்த்திடச் செய்யும்! பெற்ற
அன்னையைக் கண்டோர், அன்னை
அன்பினைக் கண்ணிற் காணார்,
என்னினும் உயிர்க் கூட்டத்தை
இணைத்திடல் அன்பே அன்றோ?

**தென்றலின் குறும்பு**

உலைத்தீயை ஊது கின்றாய்;
உலைத்தீயில் உருகும் கொல்லன்
மலைத்தோளில் உனது தோளும்,
மார்பினில் உன்பூ மார்பும்
சலிக்காது தழுவத் தந்து
குளிர்ச்சியைத் தருவாய்! பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும், விலக்கார் உன்னை!

**குழந்தையும் தென்றலும்.**

இழந்திட்டால் உயிர்வாழாத
என்னாசை மலர்மு கத்துக்
குழந்தையின் நெற்றி மீது
குழலினை அசைப்பாய் அன்பின்
கொழுந்தென்று நினைத்துக் கண்ணிற்
குளிர் செய்து மேனியெங்கும்
வழிந்தோடிக் கிலுகிலுப்பை
தன்னையும் அசைப்பாய் வாழி.

– பாவேந்தர் பாரதிதாசன்

பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் (29–4–1891 – 21–4–1964). இவர் புதுச்சேரியில் பிறந்தார். மகாகவி பாரதியாரின் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தன்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு போன்ற நூல்களின் ஆசிரியர். புரட்சிக்கவி என்றும் அன்போடு அழைக்கப்படுகிறார். இவருடைய 'பிசிராந்தையார்' என்னும் நாடக நூலிற்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளது.

## செயல்பாடுகள்

- பாரதிதாசனின் தென்றல் கவிதையின் நயம் பாராட்டி எழுதுங்கள்.

# திணைகள்



## ஐந்திணைகள்

மேகங்கள் கீழ்க்கடல் நீரை மொண்டு உண்டு மேற்கே சென்று யானைகளும் நடுங்க மலைகளின்மீது இரவும் பகலும் விடாமல் மழை பொழிகின்றன. எங்கும் வெள்ளக் காடு. மலையிலிருந்து அருவி ஓடி வருகிறது. யானைகளெல்லாம் அஞ்சும்படி அது ஒலிக்கின்றது. அருவி கீழே வந்து கீழ்க்கடலை நோக்கி ஆறாக ஓடுகிறது. போகும் வழியில் உள்ள குளங்களையெல்லாம் நிரப்பிச் செல்கிறது.

இப்படி எங்கும் நீர்வளம் மிகுவதனாலே கழனிகளில் நெற்பயிர் விளைந்து, கதிர்கள் முற்றித் தோன்ற நிற்கின்றது. யானை புகுந்தால் அது மறையும்படியாகச் செழித்து வளர்ந்திருக்கிறது. அங்கங்கே உள்ள சிறிய குளங்களில் தாமரை பூத்திருக்கிறது. நெய்தலும் நீல மலரும் ஆம்பலும் வளர்கின்றன.

இந்த இடங்களிலுள்ள மீன்களை வலைஞர் பிடிக்கிறார்கள். பிடித்துக் குவிக்கிறார்கள். அவர்கள் போடும் ஓசை ஒரு பக்கம் ஒலிக்கிறது. கரும்பு ஆலைகளின் ஓசை ஒரு சார் கேட்கிறது. களை பறிப்பவர்கள் செய்யும் ஆரவாரம் ஒருபுறம். சேற்றிலே தங்கிய எருதின் அயர்ச்சியை மாற்ற உழவர்கள் செய்யும் ஆரவாரம் ஒரு பக்கம். நெல் முற்றிய கழனியில் அறுவடை செய்பவர்கள் கொட்டும் பறையோசை ஒரு சார். அருகே உள்ள திருப்பரங்குன்றத்தில் விழாக் கொண்டாடும் முழக்கம் ஒரு திசை. இப்படி எழும் ஓசைகளெல்லாம் வானத்திலே சென்று இசைக்கின்றன.

பாணர்கள் வாழும் பகுதிகள் அங்கங்கே உள்ளன. இத்தகைய சிறப்புகளுடன் மருத நிலம் ஒரு சார் விளங்குகிறது.

முல்லை நிலம் ஒரு பக்கம் இருக்கிறது. அதில் சிறிய தினை முற்ற, அதை அறுக்கிறார்கள். எள்ளுக் காய்கள் முற்றி விளைகின்றன. வரகு கதிர்விட்டு நிற்கிறது. ஆழ்ந்த குழிகளிலே மணிகள் ஒளி விடுகின்றன. வளர்ந்த காட்டில் பொன்துகள்கள் கொழிக்கின்றன. மான்கள் பிணையோடு துள்ளுகின்றன. கொன்றை மரத்தின் கீழே உள்ள பாறையில் பரப்பினாற் போல மலர்கள் உதிர்கின்றன. நீலநிறம் பெற்று வளர்ந்த பயிர்களின் மேலே முசுண்டைப் பூவும் முல்லைப் பூவும் உதிர்கின்றன. தெளிந்த நீரையுடைய பள்ளங்களில் நீலமணியைப் போன்ற நெய்தலும் தொய்யிற் கொடியும் மலர்கின்றன. இப்படி மலரழகு பெற்று விளங்குகிறது முல்லை நிலம்.

குறிஞ்சி நிலத்தைக் காண்போம். சந்தன மரங்கள் காடாக வளர்ந்திருந்தன. மலைச் சாரலில், அவற்றை வெட்டித் தோரை நெல்லை விதைத்திருக்கிறார்கள் குறிஞ்சி நில மக்கள். வெள்ளைக் கடுகையும் பயிர் செய்திருக்கிறார்கள். ஐவன நெல்லும் வெண்ணெல்லும் விளைந்திருக்கின்றன. பாறைகளில் இஞ்சியையும் மஞ்சளையும் மிளகையும் வேறு பண்டங்களையும் குவித்திருக்கிறார்கள்.

இந்த நிலத்திலும் பலவகை ஓசைகள் செவியிலே விழுகின்றன. தினை விளையும் மலைச் சாரல்களில் குறமகளிர் கிளிகளை ஓட்டும் ஒலி இது. அவரைக்கொடியை மேயும் காட்டுப் பசுவை வேடர்கள் ஓட்டுகிறார்கள். அந்த ஓசைதான் அது. பரணின் மேலே காவல் இருக்கும் மனிதன் குழியைத் தோண்டி மேலே மூடி வைத்திருக்கிறான். அதில் காட்டுப் பன்றி விழுந்துவிட, அதைக் கொன்று ஆரவாரம் செய்கிறான். அந்த ஒலியை இதோ கேட்கிறோம். வேங்கை மரத்திலுள்ள மலர்களை மகளிர் புலிபுலியென்று சொல்லிக்கொண்டே பறிக்கிறார்கள். அவர்களுடைய ஒலியையும் கேட்கிறோம். காட்டுப் பன்றியைக் கொன்ற புலி முழங்குகிறது. இத்தனை வகையான ஓசைகளும் அருவியின் ஓசையோடே மாறி மாறி ஒலிக்கின்றன. மலைகளையுடைய குறிஞ்சி நிலம் இத்தகையக் காட்சியை அளிக்கிறது.

சில இடத்தில் பாலை நிலமும் இருக்கிறது. தமிழ் நாட்டில் கோடை மிகுதியானபோது நீரற்று நிற்கும் நிலம் பாலையாகிவிடும். இயற்கையாகப் பாலை என்று ஒரு நிலம் இல்லை. பாலையில் மூங்கில்கள் உராய்வதனால் பிறந்த பெரு நெருப்பு, தூறுகளையெல்லாம் எரிக்கிறது. அதனால் வலியிழந்த யானைகள் மேய ஒன்றும் இல்லாமல் வேறு இடத்தை நோக்கிச் செல்கின்றன. அருவிகள் வற்றிப்போன அழகில்லாத மலைகள் நிற்கின்றன. எங்கே பார்த்தாலும் ஊகம் புல். அவையும் உலர்ந்து வைக்கோலைப் போலத் தோன்றுகின்றன. மேல் காற்று வீசும்போது அது மலையின்

பிளப்புகளிலும் குகைகளிலும் புகுந்துப் புறப்படுகிறது. அப்போது கடலில் ஆரவாரம் போன்ற ஓசை எழுகிறது.

இத்தகைய இடங்களில் வழி நடப்போரிடம் ஏதேனும் இருந்தால் அதைப் பறிக்கும் ஆறலைக் கள்வர் வருவார்கள். அவர்களால் வழிச் செல்வாருக்குத் தீங்கு நேராமல் காவல் புரியும் இளம்பருவ ஆடவர்கள் அங்கங்கே இருக்கிறார்கள். இலை வேய்ந்த குடிசையில் மான்தோலைப் படுக்கையாகக் கொண்டவர்கள் அவர்கள்; தழை விரவின கண்ணியைச் சூடி இருக்கிறார்கள். கடுமையான சொல்லையுடையவர்கள் அவர்கள்.

கதிரவன் கடுமையாகக் கதிர்களை வீசுகிறான். நிழல் என்பதே இல்லாத இடம் இது ; வேனில் அரசாட்சி செய்யும் பாலை நிலம்.

கடற்கரையுடைய நெய்தல் நிலத்தில் நம் கண்ணிலே படுகின்ற பண்டங்கள் எத்தனை எத்தனை! கடலிலிருந்து எடுத்த முத்து; வாளரத்தால் சங்கையறுத்துச் செய்த வளை, பரதவர் கொண்டு வந்த பலவகைத் தானியங்கள், வெள்ளை உப்பு, இனிய புளி, ஒடத்தையுடையவர்கள் அறுத்த மீன் துண்டங்கள், வேற்று நாட்டிலிருந்து மரக்கலத்தில் வந்த குதிரைகள் ஆகிய இவை நாள்தோறும் வந்து மிகுதியாக நிறைகின்றன. இவ்வாறு நாட்டில் ஐந்து வகையான நிலங்களும் அழகுபெற்று விளங்குகின்றன.

– கி. வா. ஜகந்நாதன்

கி.வா. ஜகந்தாதன் 1906 ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி கரூர் மாவட்டத்தில் பிறந்தார். இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் அதிசயப் பெண், அதியமான் நெடுமானஞ்சி, அன்பின் உருவம் அபிராமி அந்தாதி, அமுத இலக்கியக் கதைகள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவர் வாகீச கலாநிதி, செந்தமிழ்ச் செல்வர், திருநெறி தவமணி போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் வரலாற்று நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ஐவகை நிலம் பற்றிய செய்திகளைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.

## மனோன்மணீயம்



தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்,
எனப்பலர் கருது மிச்சிறு வாய்க்கால்

செய்தொழி லெத்தனை விசித்திரம்! ஐயோ!
அலைகடல் மலையா மலை அலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறநெறென்று உரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்

தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென்று இல்லை; யாவையு மீர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை யெனஓர்ந் துருட்டிக்

கொண்டு சென்று இட்டு மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியுங், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்

கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்
ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,
ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,
மதகிடைச் சாடியும், வாய்க்கா லோடியும்
பற்பல பாடியான் பட்டங் கீட்டியது

அற்பமே யாயினும் ஆதர வாய்க்கொள்;
இன்னமு மீதோ ஏகுவன்." எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவ ணடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர் ?

நிரந்தரம் ! ஐயோ! நொந்தனை! நில்! நில்!
இரைந்ததென்? அழுவையோ? ஆயி னேகுதி
நீரே! நீரே! என்னே உன் நிலைமை?
யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?
நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போல் உளவேல் பினைப்பேறு என்னை?

– பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை

பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை. 1855 ஆம் ஆண்டு கேரளத்தில் ஆலப்புழை என்னும் இடத்தில் பிறந்தார். திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார். லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி (The Secret way) என்னும் ஆங்கில நூலைத் தழுவி இவர் எழுதிய கவிதை நாடகமே மனோன்மணீயம். இந்நாடக நூலிலிருந்து எடுக்கப்பட்டது இப்பாடப்பகுதி.

### செயல்பாடுகள்

- பூமிக்கு உயிர்க்கூடாக இருப்பது எது? ஏன்?
- வாய்க்காலின் நிரந்தர உழைப்பு குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- 'முந்நீர்' விளக்கம் தருக.
- கவிதை கூறும் கருத்துகளைக் கலந்துரையாடித் தொகுத்து எழுதுங்கள்.

## சோக வனம்

கற்பாறைகளின் இடுக்குகளிலும்கூட தன் வேர் பதித்து, நீருறிஞ்சி, மண் நீக்கி, காற்றைச் சுவாசிக்கும் ஆத்ம வெறியில் தலை நீட்ட, சுட்டெரிக்கும் அக்னி ஜுவாலையின் சூரியத் தகிப்பில் உயிர் பெற்று, இரண்டு இளம் கிளிகளும் மகிழ்ந்திருந்தன. காற்றசைவிலும் வனங்களின் ஏகாந்த மௌனத்திலும் இலைகள் சலசலக்கும் தாலாட்டிலும் நறுமணம் வீசும் காட்டுப் பூக்களின் சௌந்தர்ய வாசனையில், நாசிகளின் மென்னுணர் நரம்புகள் புடைக்க, கிளைவிட்டுக் கிளை தாவி, காற்றில் உதிரும் பூக்களெனப் பறந்து உல்லாசமாய் ஆனந்தக் கூத்தாடிக் களித்திருந்தன அந்த இளஞ்சோடிக் கிளிகள்.

தன் வம்சத்தின் பாரம்பரிய நியதியை மீற முடியாமல் கிளைகளின் மேல் கூடு கட்டி வாழும் பறவைகளையும், கிளைகளிலிருந்து தொங்கும் கூடு கட்டி வாழும் பறவைகளையும் உதாசீனப்படுத்திவிட்டு, மரப்பொந்துகள் தேடி வனங்களின் மூலை முடுக்குகள் எல்லாம் தேடி அலைந்தன. மலைக் குகைகளின் கல் பொந்துகள் மாதிரித்தான் மரப்பொந்துகள் உண்டாயிற்று போலும். தான் ஜனித்த தாய் வீட்டை நினைத்துக் காற்றில் அடையாளமிட்டிருந்த திசையில் பறந்து இடந்தேடியடைந்தன. தன் தாய் வீட்டை அந்த இடத்தில் காணாமல் விக்கித்து நின்றன. தன் வீடு இருந்ததற்கான அடையாளத்தையே காணவில்லை. திசைமாறி விட்டோமோ என்று திகைத்து அடையாளங்கள் தேடினால் அடையாளங்களாகவே நின்ற மரங்களையும் காணவில்லை. ஆகா... எவ்வளவு பெரிய இலவமரம் தன் தாய்வீடாயிருந்தது. எவ்வளவு உயரம், எத்தனை பொந்துகள். பக்கத்திலே கூடாரமாய் கிளை பரப்பி வெயில் முகமே காணாமல், எந்த நேரமும் நீருக்குள் இருக்கிற மாதிரியான குளிர்ச்சியில் அசைந்தாடி பறவைகள் எல்லாவற்றையும் 'வா, வா' என்று கையசைத்துக் கூப்பிடும் நிலவாகை மரத்தையும் காணவில்லை.

சந்தன வாசனை எங்கே போயிற்று? அடர்ந்த எட்டியும் கோங்கும் பிள்ளை மருதமும் இருந்த இடம் எது? ஆயிரம் கைகள் விரித்தாற்போல் நின்ற தேக்கு எங்கே போயிற்று? தன் தாய் வீட்டில் வாசற்படிபோல் பொந்தின் அடியில் இருந்த பெரிய கணுவில் நின்றுகொண்டு இரையூட்டிய தன் தாயின் அலகும் தங்களின் அலகும் எவ்வளவு கச்சிதமாய் பொருந்தி மூடும். இரைகளை அலகு மாற்றிய பின், விருட்டெனப் பறந்து காற்றில் கலக்க எத்தனை தோதாயிருந்தது.

அம்மரத்தின் கணு முற்றிப் பழுத்து வெடித்த பலாவின் மணத்தை இந்த நாசி உணரவே வழியில்லையே. உயிர்ப்பித்த பூமியா அத்தனை மரங்களையும் உள் வாங்கிக் கொண்டு ஏப்பம் விட்டது? கடுகளவு விதையையும் பெரிய மரமாக்கி வனமாக்கும் மண் நிச்சயமாய் விழுங்கியிருக்காது. மண் விழுங்கும் சருகுகள் கூட உரமாகி, உயிர் பெற்று, மரமாய்த்தானே வெளிவருகிறது.

அப்படியெனில் இந்த மரங்கள் எங்கே போய் ஒளிந்து கொண்டன? பெருநெருப்பில் கருகியிருந்தால் தடயம் எங்கே? சாம்பலையும்கூட உரமாக்கிச் செடிகளுக்கு அளித்து பூ, பிஞ்சு, காய், பழம், விதையென சக்கரச் சுழற்சியின் விதிக்கு மண் தானே ஆதாரம்? அப்படியிருக்க மண் நிச்சயமாய் விழுங்கியிருக்க முடியாது."

கனிந்து காம்பறுந்து தரையில் விழும் விதை சுமந்த பழங்களைக் கையேந்தி வாங்கிக் கொள்ளும் மண்போல், தன் உடலுக்குள் சூல் கொண்ட பழங்களைப் பத்திரமாய் இறக்கி வைக்க இடம் தேடியலைந்தன கிளிகள். மழை மேகங்களைச் சுமந்துகொண்டு வனமெல்லாம் அலையும் காற்றைப் போல் அலைந்தன கிளிகள். வயசாகி, கிழடு தட்டி, நரை திரண்டு முடியுதிர்ந்து வழுக்கையாகி. சுருக்கங்கள் கண்டு பொந்துகளாகிப் போன மரங்கள் வனமெங்கும் தேடியும் கண்ணில் படவே இல்லை.

கனத்த வயிற்றின் சூல் விரட்ட, வனத்தை மறந்த பெண் கிளி சிறகடித்துப் பறந்தது வெகு தூரம். சோகத்தில் முகஞ்சுளித்த ஆண் கிளியின் இயலாமை, மரப்பொந்து கண்ணில் படவேயில்லை. கிழடு தட்டி வைரம் பாய்ந்த பொந்துகள் உள்ள மூத்த மரங்களைக் காணவேயில்லை. மரங்களற்றுச் செடிகளாகிப் போன வனங்கள். பல்வேறு மலர்களின் சௌந்தர்ய நிறங்களும் மணங்களும் அற்ற வனம். பழங்களின் வாசனைகள் இல்லாத வனம். கூட்டங் கூட்டமாய்த் திரியும் காட்டு மிருகங்களற்ற வனம்.

வெகு நேரம் பறந்து, இறக்கை ஓய்ந்து, வெட்ட வெளியில் ஒற்றையாய் நின்ற மொட்டைப் பனைமரத்தின் உச்சியில் அமர்ந்து எட்டிப் பார்த்தன. செத்த பனஞ்சிராய்கள் உள் விழுந்த ஆழப் பொந்து. பெண் கிளி உள்ளே போய் முடங்கிக் கொண்டது. மொட்டைப் பனையின் உச்சியிலிருந்து ஆண் கிளி கழுத்துருட்டிப் பார்த்தது. கண்ணெட்டும் தூரம் வரை வெட்டவெளி.

மொட்டைப் பனையை ஒட்டிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை. ஓயாமல் கேட்கும் வாகன இரைச்சலும் ஹாரன் சத்தமும். பக்கத்திலேயே சாலையோரக் கேண்டீன், வாகனங்கள் கக்கிச் செல்லும் டீசல், பெட்ரோல் புகை நாற்றத்தைச் சுவாசித்து முகம் சுளித்து ஆண்கிளி பறந்துவந்த களைப்பு தீர, தாகம் தணிக்கப் பறந்து வெளியில் சென்றது.

ஆண் கிளி, மலையருவிகள் கொட்டிய சிற்றோடைகளில் நெளிவாய், சுவை கொண்டு பாய்ந்து வரும் கண்ணாடித் தண்ணீர் தேடி அலைந்தது. தூரத்தில் தெரிந்த குளத்தில் தாழப் பறந்து உற்றுப் பார்த்தது. ஒர்க் ஷாப் கழிவுகள் சேர்ந்து எண்ணெய்ப் படலம் மிதக்கும் கருமை நிறத் தண்ணீரின் நாற்றம் பிடிக்காமல் பறந்து போனது. சாலையோரக் கேண்டீனிலிருந்து வெளியேறிக் கிடங்கில் பெருகிக் கிடந்த மீன் செதில்கள் மிதக்கும் தண்ணீரில் ஒரு கொக்கு தவமிருக்கக் கண்டதும் பறந்து போனது. தூரத்தில், நடுக்காட்டில் பம்புசெட் கிணற்றின் உப்புத் தண்ணீர் வாய்க்காலில் தொண்டை நனைத்துப் பறந்து வந்தது.

மொட்டைப் பனையின் உச்சியில் உட்கார்ந்து எட்டிப் பார்த்த ஆண் கிளியின் முகத்தில் இளஞ்சூட்டின் வெக்கை படிந்தது. ஆண் கிளி புரிந்துக் கொண்டது. சாலையோரக் கேண்டீனில் வாங்கி சாப்பிட்டுவிட்டுப் பஸ்ஸின் ஜன்னல் வழியே எறிந்த பொட்டலங்களில் ஒட்டியிருந்த பிரியாணித் துகள்களையும் புளியோதரைப் பருக்கைகளையும் கொண்டுபோய் இரையாகக் கொடுத்தது. சில நேரம் ஆண் கிளி முட்டைகளுக்குக் காவல் காக்க, பெண்கிளி வந்து கேன்டீனில் சாப்பிட்டுவிட்டுப் போனது. ஒருநாள் யாரோ எறிந்த எச்சிலையில் சிவப்பாய் பழங்கள் கிடக்க, கிளி சந்தோஷித்து ஆவலாய் கொத்தித் தின்னப் போனபோதுதான் தெரிந்தது, அந்தப் பழம் வேறெந்த உயிர்ப்பிராணிகளுமே தின்னாத, மனிதர்கள் மட்டுமே தின்கிற தக்காளிப் பழமென்று. ஏமாற்றமடைந்த கிளி ஒரு குழந்தை கோபத்தில் விட்டெறிந்த காய்ந்த ரொட்டித் துண்டைத் தூக்கிக் கொண்டு பறந்தது.

இரவில் எந்நேரமும் கண்களைக் கூச வைக்கும் வாகனங்களின் வெளிச்சங்களும் இடைவிடாது கேட்கும் இரைச்சல்களும் பேயாய் அலறும் ஹாரன் சத்தங்களும் கேண்டீன்களில் அலறும் ஸ்பீக்கரின் ஓலங்களும் தூக்கத்தை மறக்கடித்தன. காய்ந்த பனஞ் சிராய்களின் உறுத்தல் வேறு. ஆனாலும் ரொம்பவும் பயமுறுத்தியது ஓயாமல் ஒலிக்கும் ஹாரன்களின் சத்தம்தான். வனத்தில் எப்போதாவது யானையோ, சிங்கமோ, புலியோ அல்லது இடியோ, மின்னலோ பெரிய சத்தத்தையும் பயத்தையும் உண்டுபண்ணும்.

கிளிகளுக்கு ஒரு நாள் சில வித்தியாசமான சத்தங்கள் கேட்கவும் இரு கிளிகளும் ஆவலாய் பனைமேல் நின்று எட்டிப் பார்த்தன. தூரத்தில் சில மயில்களும் இன்னும் சில குயில்களும் ஒரு புறாக் கூட்டமும் இருக்கக் கண்டு சந்தோஷமாய் பொந்துக்குள் போய் முடங்கிக் கொண்டன. படை படையாய்ச் சென்ற சிட்டுக் குருவிக் கூட்டம் மொட்டைப் பனையை ஒட்டிப் பறந்தது.

மரங்கள் குறைந்து செடிகள் நிறைந்திருந்த வனம் இப்போது செடிகள் குறைந்து கொடிகள் நிறைந்த வனமாய்க் காட்சியளித்தன. கிளிகளின் வித்தியாசமான ஹாரன் அலறலில் வனம் நடுங்கியது. அருகருகே வசிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட சிங்கங்களும் புலிகளும் சிலிர்த்துக் கொண்டன. ஒன்றிரெண்டாய் உயிர் வாழும் யானைகள், தும்பிக்கைகள் தூக்கி மிரண்டு நின்றன. வானத்திலிருந்து ஓயாமல் கேட்கும் ஹாரன் சத்தம் வனமெங்கும் எதிரொலித்தது தன் வம்சத்தின் சாபம் என்றெண்ணிய தாய்க்கிளிகளும் ஓடிப் பதுங்கிக் கொண்டன.

வரவர வனத்தின் சௌந்தர்யம் குறைந்து விகாரம் குடி கொண்டது. கடைசியாய் படைபடையாய்ப் பறந்து வந்த சிட்டுக்குருவிகள் ஊசிப் பட்டாசுகளாய் வெடித்துச் சிதறிச் சத்தமெழுப்பி மரக்கிளைகளுக்குள் மறைந்து கொண்டன. தன் செவிப்பறைகள் கிழிந்து ஊமையாகிப் போன வனம், நாளாவட்டத்தில் சுண்ணாம்புக் காளவாசலாய் மாறி அக்னியாய்த் தகித்தது.

வனத்தைத் தேடியலையும் எஞ்சிய பறவைகள் எழுப்பும் பலவிதமான ஹாரன் சத்தங்கள் மட்டும் விடாமல் கேட்டுக் கொண்டேயிருக்கின்றன வனங்களையும் கடந்து.

– சோ. தர்மன்

கரிசல் எழுத்தாளர்களில் ஒருவரான சோ. தர்மன் கோவில்பட்டியின் அருகில் உள்ள உருளைக்குடியில் 1953 இல் பிறந்தார். 'சூல்' என்னும் நாவலுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற இவர் கூகை என்ற நாவலையும் வாழையடி, சோகவனம் முதலான சிறுகதைத் தொகுப்புகளையும் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- 'சோகவனம்' கதை கூறும் மையக் கருத்தினை விளக்கி எழுதுங்கள்.
- கதையில் இடம்பெறும் இயற்கைப் பின்னணி குறித்து எழுதுங்கள்.
- சோகவனம் கதைக்கு விமரிசனக் குறிப்பு எழுதுங்கள்.
- 'இயற்கையும் மனித வாழ்க்கையும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துங்கள்.
- 'இயற்கை மனிதனுக்குக் கிடைத்த கொடை' என்னும் தலைப்பில் தொலைக்காட்சியில் உரை நிகழ்த்தத் தொலைக்காட்சி உரை தயாரியுங்கள்.

# அலகு 2

# அழகியல்



கலைகள் பண்பாட்டின் அடையாளமாகும். காண்போருக்கு மகிழ்ச்சியை அளிக்கும் கலைகள் பலவகை ஆகும். மனிதனின் நாகரிக வளர்ச்சியின் காரணமாகக் கலைகளின் வடிவங்களில், மாறுதல் ஏற்பட்டதால், பாரம்பரியக் கலைகள் பின்னடைவைச் சந்திக்கின்றன. என்றாலும் பண்பாட்டின் எச்சமாக விளங்கும் கலைகளையும் கலைஞர்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது முக்கியக் கடமையாகும்.

# காட்சிக்கலை



## தெய்வ மாக்கலை

அரண்ய மத்தியில் அமைந்த ஆயனர் வீட்டின் உட்புறம் கண்கொள்ளாக் காட்சியளித்தது.

வெளித் தாழ்வாரத்தையும் முன் வாசற்படியையும் தாண்டி உள்ளே சென்றதும், நாலுபுறமும் அகன்ற கூடங்களும், நடுவில் விசாலமான முற்றமாக அமைந்த பெரிய மண்டபமும் காணப்பட்டன. முற்றத்துக்கு மேலே மண்டபம் எடுப்பாகத் தூக்கிக் கட்டப்பட்டிருந்தது. கூடங்களின் ஓரங்களில் சிற்ப வேலைப்பாடு அமைந்த தூண்கள் நின்றன. அவை மேல் மண்டபத்தைத் தாங்குவதற்காக நின்றனவோ அல்லது அலங்காரத்துக்காக நின்றனவோ என்று சொல்ல முடியாமல் இருந்தது.

நாலுபுறத்துச் சுவர்களிலும் விதவிதமான வர்ணங்களில் அழகழகான சித்திரங்கள் காணப்பட்டன. அந்தச் சித்திரங்களில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் நாதாந்த நடனம், தாண்டவ நடனம், குஞ்சித நடனம், ஊர்த்துவ நடனம் ஆகிய நடனத் தோற்றங்கள் அதிகமாக இருந்தன. அம்மாதிரியே ஓர் அழகிய இளம் பெண்ணின் பலவகை அபிநய நடனத் தோற்றங்களும் அதிகமாகக் காட்சியளித்தன.

முற்றத்தில் பெரிய கருங்கற்களும் உடைந்த கருங்கற்களும் பாதி வேலை செய்யப் பெற்ற கருங்கற்களும் கிடந்தன. ஒரு பக்கத்துக் கூடத்தில் வேலை பூரணமாகி ஜீவகளையுடன் விளங்கிய சிலைகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சித்திரங்களில் தோன்றிய அதே இளம் பெண்ணின்

மோகன வடிவம்தான் அந்தச் சிலைகளிலும் விளங்கின. ஒவ்வொரு சிலையும் பரத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் நூற்றெட்டு அபிநயத் தோற்றங்களில் ஒன்றைக் குறிப்பிடுவதாயிருந்தது.

ஆனால், நாம் குறிப்பிடும் சமயத்தில் அந்தச் சிற்ப மண்டபத்துக்குள் பிரவேசிப்பவர்கள் மேற்கூறிய சிற்ப அதிசயங்களையெல்லாம் கவனம் செலுத்திப் பார்த்திருக்க முடியாது. அவர்களுடைய கருத்தையும் கண்களையும் அம்மண்டபத்தின் ஒரு பக்கத்துக் கூடத்தில் தோன்றிய காட்சி பூரணமாகக் கவர்ந்திருக்கும்.

சித்திரங்களிலும் சிலைகளிலும் தோற்றமளித்த இளம் பெண்ணானவள் அங்கே சுயமாகவே தோன்றி, கால்சதங்கை 'கலீர் கலீர்' என்று சப்திக்க நடனமாடிக்கொண்டிருந்தாள். அவளுக்கெதிரே சற்றுத் தூரத்தில் ஆயனச் சிற்பியார் உட்கார்ந்து கண்கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

பார்த்துக்கொண்டிருந்தவர் திடீரென்று, 'நில்!' என்றார். அந்தக் கணமே சிவகாமியும் ஆட்டத்தை நிறுத்தி, அப்போது நின்ற நிலையிலேயே அசையாமல் நின்றாள்.

ஆயனர் கையில் கல்லுளியை எடுத்தார். அவர் அருகில் ஏறக்குறைய வேலை பரிபூரணமான ஒரு சிலை கிடந்தது. அதன் கண் புருவத்தின் அருகே ஆயனர் கல்லுளியை வைத்து, இலேசாகத் தட்டினார். மறுபடியும் சிவகாமியை நிமிர்ந்து பார்த்து, 'சற்று இரு! அம்மா!' என்று கூறி, மேலும் அச்சிலையின் புருவங்களில் சிறிது வேலை செய்தார். பிறகு, 'போதும்! குழந்தாய்! இங்கே வந்து உட்கார்!' என்றார். அற்புதமான சிலையொன்று வடிவம் கொண்டது.

– கல்கி

கல்கி 1899 – ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. இவர் சிறுகதை, புதினங்கள், கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவரது 'தியாக பூமி' என்ற புதினம் திரைப்படமாக்கப்பட்டது. பொன்னியின் செல்வன் இவரது பிரம்மாண்டப் படைப்பு. அலை ஓசை என்ற நாவலுக்கு 1956 இல் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. சிவகாமியின் சபதம் என்ற நாவலின் ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- மாணவர்கள் தொகுத்த, ஓவியங்களைத் திரட்டி ஓவியக் கண்காட்சி நடத்துங்கள்.
- 'ஓவியங்களும் கதை கூறும்' என்னும் தலைப்பில் இதழில் வெளியிடுவதற்கான சிறு கட்டுரை தயாரியுங்கள்.
- கட்டுரையில் இடம்பெறும் வடமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான தமிழ்ச் சொற்கள் எழுதுங்கள்.

## ஓவியம்

ஓவியங்கள் செந்–தமிழ்
ஓலைக்காவியங்கள்
உள்ளத்து உணர்வுகளின்
உன்னதக் கோலங்கள்

கண்கண்ட கவிதைகளைக்
கவர்ந்திடும் வண்ணமிட்டு
கலை நயம் கலந்து
காட்சியாக விரியவிடும்

எண்ணற்ற சிந்தனையை மன
எண்ணத்தில் தீட்டி விடும்
மாசற்ற புதுமை மொழி
மண்ணுலகில் மகிமை வரி

பட்டறிந்த பண்டிதனும்
பாரறியா பாமரனும்
பார்த்து அறியும் இனிய
பன்னாட்டுத் தொடர்பு மொழி

எதுகை மோனையில்லை
எடுகோள் எதுவுமில்லை
தூரிகை தூவிவிடும்
தூய்மையான கவிதை

இலக்கியன் என்பவர் பாடலாசிரியர், எழுத்தாளர் கவிஞர். தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் திரைப்படப்பாடல்கள் எழுதி வருகிறார். மேலும் திரைப்படங்களுக்குக் கதை மற்றும் திரைக்கதை எழுதும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். அவர் 'யாழ்' என்னும் மின்னிதழில் எழுதியதே இக்கவிதை.

– இலக்கியன்

### செயல்பாடுகள்

- 'ஓவியம்' என்னும் கவிதையை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- 'ஓவியமும் ஒரு மொழியே' எனக் கவிஞர் இலக்கியன் கூறுவதற்கான காரணங்களை எழுதுங்கள்.

## ஒரு நேர்காணல்

**உங்களுக்குக் கலையில் ஈடுபாடு வந்தது எப்படி?**

நான் வளர்ந்த சூழலே அற்புதமானது. நாங்க இருந்த ஏரியாவுலே சிற்பங்கள் செய்யிற கலைஞர்கள் இருந்தாங்க. அவங்க மண்ணைக் குழைச்சு சிற்பமா மாத்துறதை நேரம் கிடைக்கும்போதெல்லாம் பார்ப்பேன். பிறகு மதுரை அழகர் கோயில், மீனாட்சிக் கோயில் மற்றும் நாயக்கர் மகால் ஆகிய இடங்களில் இருக்கிற சிற்பங்களை அடிக்கடி பார்க்க முடியும்.

மதுரை அழகர் கோயில் திருவிழாவும் ஒரு முக்கியமான இன்ஸ்பிரேஷன். மதுரையைச் சுத்தி 50, 60 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற எல்லா

நாட்டுப்புறக் கலைஞர்களும் திருவிழாவுக்கு வருவாங்க. இதையெல்லாம் வேடிக்கை பார்க்கிறது எனக்கு மிகப் பெரிய கொண்டாட்டமா இருந்துச்சி.

அப்ப காந்தி மியூசியத்துலே வாரம் ஓர் இலவச சினிமா போடுவாங்க. அதனால் வேர்ல்டு கிளாசிக்ஸ் எல்லாம் பார்க்க வாய்ப்புக் கிடைச்சது.

அப்போது பாரதி புத்தகாலயத்தை நடத்திக்கிட்டு இருந்த சுவாமிநாதன் அப்பாவோட பால்ய நண்பர். அப்பா என்னை வாரத்துக்கு மூணு தடவையாவது அங்க கூட்டிக்கிட்டுப் போவாரு. ஒரு தடவை போனா, குறைஞ்சது மூணு மணி நேரமாவது இருப்போம். ரொம்ப சின்ன வயசிலேயே உலக இலக்கியங்களோட அறிமுகம் கிடைச்சது.

ரீகல் தியேட்டர்லே நல்ல இங்கிலீஸ் படம் வந்தா, பரீட்சை இருந்தாக் கூட அப்பா அதைப் பார்க்கச் சொல்வாரு. Bridge on the river Kiwai–னு ஒரு படம் வந்திருக்கு. புஸ்தகத்துலே படிச்ச பாலைவனத்தை அதிலே பார்க்கலாம்ன்னு சொல்லிக் கூட்டிட்டுப் போனாரு. டாலி, பிக்காஸோ, டிராட்ஸ்கி இவங்களோட ஓவியங்கள் அப்பா மூலம்தான் எனக்கு அறிமுகமாச்சு. இதெல்லாம் நான் எட்டாம் வகுப்புப் படிச்சபோதே கிடைச்சதுங்கிறதுதான் ரொம்ப முக்கியம். இவையெல்லாம்தான் என் கலைப்பாதையின் படிக்கட்டுகள்.

**நீங்க ஓவியத்துறைக்கு வருவதற்கு மதுரையில் பார்த்த சிற்பங்கள் ஒரு முக்கிய காரணம்னு சொல்றீங்க. ஆனால், தமிழக மரபில் சிற்பங்களுக்கும், கட்டடக் கலைக்கும் இருக்கிற முக்கியத்துவம் ஓவியங்களுக்கு இல்லையே ஏன்?**

தமிழகத்தில் ஓவியம் என்பது சிற்பத்தோடு இணைந்தேதான் இருந்தது. தனி ஓவியம்னு இல்லை. கி.பி 4 ஆம் நூற்றாண்டில் அதாவது பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் சிற்பங்கள் மீது ஓவியங்கள் வரையப்பட்டிருக்கு. காலப்போக்குல ஓவியங்கள் நிறமிழந்து போனது. இப்பயும் வெயில்படாம கோயிலுக்குள் இருக்கிற சிற்பங்கள் மீது ஓவியப் பூச்சு இருப்பதைப் பார்க்க முடியும்.

**ஒவ்வொரு ஓவியருக்கும் ஒரு தனித்தன்மை இருக்கு. நெதர்லாந்து ஓவியர் ரெம்பரெண்ட்–னு சொன்னா, லைட்டிங்கை ரொம்பவும் வீச்சோட தன் ஓவியங்களைப் பயன்படுத்தினவர், பிரான்சில் டேவிட் தன்னோட ஓவியங்கள் மூலமா புரட்சியை மக்கள் மனதில் தூண்டி விட்டவர்னு சொல்லலாம். இந்த மாதிரி இருக்கிற ஆளுமைகளில் உங்களை ரொம்பவும் கவர்ந்தவர் யார்? யாரோட ஓவியங்களைத் திரும்பத் திரும்ப ரசிக்கிறீங்க?**

அப்படி ஒரே ஒருத்தரை மட்டும் சொல்ல முடியாது. ஏன்னா என்னைப் பாதிச்சவங்க நிறைய பேரு இருக்காங்க. ஓவியர்கள் மட்டுமில்லாம, என்னைச் சுற்றியிருக்கிற எல்லாமே என்னை இன்ஃபுளுவன்ஸ்

பண்ணுது. அது அழகர்கோயில் திருவிழாவாக இருக்கலாம், இல்லை நம்முடைய மரபுக்கலைகளாக இருக்கலாம்.

குறிப்பாக ஓவியர்கள்னு சொல்லனும்னா ஆரம்ப காலகட்டத்தில் கிளாசிக் பெயிண்டர்ஸ் எல்லோரையும் விரும்பிப் பார்த்தேன். பின்னாடி நவீன ஓவியங்களுக்கு வந்தபோது. எனக்கு உருவங்களை வரைவதில் அதிக ஆர்வம் இருப்பதால், அந்த மாதிரி வரையறவங்களை அதிகம் ரசிக்கிறேன். காமிக் புத்தக ஓவியர்கள் மீதும் எனக்குப் பெரிய ஈடுபாடு இருக்கு. அதோடு கிராபிக்ஸ் டிசைனிங்கில் முக்கியமான எல்லோரையும் க்ளோசா வாட்ச் பண்றேன். அதிலே ஜேன் லேனியான் (போலாந்து), மில்டன் கிளேசர் (அமெரிக்கா), ஹேன்ட்ஸ் எடில்மன் (ஜெர்மனி) முதலானவங்களை ரொம்பவும் ரசிக்கிறேன்.

காமிக் புத்தகங்களில் வரையாம, நவீன ஓவியம்னு சொல்லவும் முடியாத, அதே நேரத்தில் ரொம்ப பவர்புல்லா பத்திரிகைகளில் வரையற ஸால்ட் ஸ்டீபக், ரால்ட்ஸ்டீமன், ரொனால்ட் ஷெர்லி ஆகியோரையும் எனக்குப் புடிக்கும்

இந்த வகையில்தான் ரசிக்கிறேன்னு கிடையாது எல்லாத்தையும் ரசிக்கிறேன். ஏன்னா என்னோட வொர்க் ஸ்டைலே அப்படித்தான் இருக்குது

எனக்குப் போட்டோகிராபி பிடிக்கும். ஒரு போட்டோ எடுத்து, அதைப் பிரிண்ட் பண்ணுவேன். அதுமேல கையால் வரைவேன். வரைஞ்ச ஓவியத்தைக் கம்ப்யூட்டருக்குக் கொண்டுபோய், கிராபிக்ஸ் பண்ணுவேன். என்னோட படங்கள் எல்லாமே ஒரு கலப்பு ஓவியம். அதிலே போட்டோ இருக்கும். ஓவியம் இருக்கும், கிராபிக்ஸ் இருக்கும். அதனால் ரசனையும் கலந்துதான் இருக்கும்.

**ஓவியர்களைக் கொண்டாடுற தேசங்களுக்குப் போயிட்டு வந்த பிறகு, ஓவியங்களுக்குப் பெரிய மரியாதை இல்லாத நம்ம நாட்டுச் சூழலை எப்படிப் பார்க்கிறீங்க?**

கொஞ்சம் வருஷங்களுக்கு முன்னாடி வரைக்கும் நம் நாட்டுலே நிலைமை ரொம்ப மோசமாத்தான் இருந்தது. சென்னையிலே மிஞ்சிப் போனா ரெண்டு அல்லது முணு கேலரிதான் இருக்கும். ரொம்பவும் கஷ்டப்பட்டாதான் கூட்டம் சேர்க்க முடியும். ஆனா இப்ப நிலைமை மாறியிருக்கு. நல்ல தரத்தோட 30 கேலரிகள் இருக்கு. கண்காட்சி நடத்துனா கூட்டமும் வருது. அதோட நல்லா ரசிக்கிறாங்க.

ஓவியம் ஒரு தொழிலா வளர்ந்துட்டு இருக்கு. ஓவியம் சார்ந்த அறிவு எல்லோருக்கும் தேவைப்படுது. ஒரு இணையதள வடிவமைப்பாளருக்கு டிசைனிங் பண்ணும்போது கலர் சென்ஸ் தேவைப்படுது. முன்னே நான் காலேஜ் படிச்சிக்கிட்டு இருந்தபோது அனிமேஷன் பத்தி பேசறதுக்கு எனக்குத் துணையா யாருமே இல்லை. இப்ப நிறைய பேருக்கு அனிமேஷன் பத்தி நல்ல ஐடியா இருக்குது. இந்த நிலையில் இன்னும் முன்னேற்றம் ஏற்படும்னு தோணுது.

**மீண்டும் மீண்டும் வரையத் தூண்டுகிற மாதிரியான ஒரு பொருள் ஒவ்வொரு ஓவியருக்கும் இருக்கும். உங்களை அது மாதிரி விடாமல் வரையத் தூண்டும் பொருள் எது?**

எனக்கு அசைவுகளை வரைவதில் அலாதி ஆர்வம். என் படங்கள் எல்லாம் ஏதோ ஒரு மூவ்மெண்ட்டைப் பேசுறதாத்தான் இருக்கும். அதனால்தான் என்னுடைய ஓவியங்களில் மனிதர்களும், விலங்குகளும் அதிகமாக இருக்கிறார்கள். அசைவுகளின் மீது இருக்கும் ஆர்வத்தால்தான், நான் அனிமேஷனுக்குப் போனேன். அதனால்தான் ரொம்ப சீக்கிரமாவே கம்ப்யூட்டரைப் பயன்படுத்தவும் ஆரம்பிச்சேன்.

**நீங்க எப்படி அறியப்படணும்னு விரும்புறீங்க?**

நான் வெறும் ஓவியர் கிடையாது. அடுத்த தலைமுறை ஆர்டிஸ்ட்களுக்கு நான்தான் முன்னோடி. ஏன்னா இனி வர்ற ஆர்டிஸ்ட்டுக்கு எல்லாம் தெரியணும். பிலிம் கிராமர், பெயிண்டிங், போட்டோகிராபி, அனிமேஷன் இதெல்லாம் தெரிஞ்சிக்கணும். இதெல்லாம் தெரிஞ்சிக்கிறதுக்கு எனக்கு வாய்ப்பு கிடைச்சது. அதே நேரத்தில் நான் நகர்ந்துக்கிட்டிருந்த பாதைக்குப் பக்கமா காலமும் நகர்ந்து வந்தது.

ஓவியத்திலிருந்துதான் போட்டோகிராபி பிரிஞ்சுது. அதுலேயிருந்து அனிமேஷன் வந்தது. இப்போ இது எல்லாத்தையும் கம்ப்யூட்டர் ஒண்ணாக்கிருச்சு. இப்ப எல்லா ஊடகமும் கலந்து ஒரு ஊடகமா மாறிடுச்சு. இந்தப் பாதையிலே நான் முதல் ஆள்னு நான் என்னைக் கருதுறேன். அடுத்த தலைமுறை ஆர்டிஸ்ட் எப்படி தயாராகணுமோ அப்படித்தான் நான் தயாராகிக்கிட்டு வந்தேன். நான் தயாராகி வந்த இடத்துக்குத்தான் உலகம் வந்திருக்கிறதா நினைக்கிறேன்.

– டிராஸ்கி மருதுவை நேர்காண்டவர்கள்: மினர்வா, நந்தன்

டிராஸ்கி மருது 1953 இல் மதுரையில் பிறந்தார். 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறந்த ஓவியர் விருதினையும் 2007 ஆம் ஆண்டு கலைமாமணி விருதினையும் பெற்றுள்ளார். 2014 நவம்பர் மாதம் முதல் தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கார்டூனாயணம், கோடுகளும் வார்த்தைகளும் குழந்தைகளுக்கான ஓவியங்கள் போன்றவை இவரது ஓவியங்களின் தொகுப்பு நூல்களாகும்.

## செயல்பாடுகள்

- 'ஓவியமும் நவீன ஊடகங்களும்' என்னும் தலைப்பில் மின்னிதழில் பதிவு செய்து வெளியிடுவதற்கான கட்டுரையைத் தயாரியுங்கள்.
- பாடப்பகுதியில் வந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதி அகரவரிசைப்படுத்துங்கள்.
- இயற்கை தொடர்பான ஓவியப் போட்டி நடத்தி, கண்காட்சிப்படுத்துங்கள்.

# நிகழ்த்துக்கலை



## பாவைக்கூத்து

உயிரற்ற பாவைகளை உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி மனிதரால் நிகழ்த்தப்படும் கூத்து பாவைக்கூத்து என்றழைக்கப்படுகிறது. இது தோற்பாவைக் கூத்து, மரப்பாவைக் கூத்து என்று இரு வகைப்படும். இவற்றின் பெயர்கள் பாவைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுகிறது. இவையேயன்றி கையுறைப் பாவைக்கூத்தும் உண்டு.

**தோல்பாவைக்கூத்து**

தஞ்சையிலும் தஞ்சைக்குத் தெற்கே உள்ள மாவட்டங்களிலும் 'தோல்பாவைக்கூத்து' என்றும், தஞ்சைக்கு வடக்கே உள்ள மாவட்டங்களில் 'தோல் பொம்மலாட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது.

தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் தஞ்சையில் மிக அருகிய நிலையில் உள்ளனர். இவர்கள் மராட்டியைத் தாய்மொழியாகக் கொண்ட 'ராவ்' என்னும் வகுப்பினர். இவர்கள் குடும்பத்துடன் ஊர் ஊராகச் சென்று தோற்பாவைக்கூத்தினை நிகழ்த்தி வருகின்றனர். குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் நிகழ்ச்சியில் வெவ்வேறு பொறுப்புகளை ஏற்கின்றனர். இவர்கள் வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று ஊர்ப் பொது இடத்தில் வட்ட வடிவிலான திறந்தவெளிக் கூடாரம் போட்டு, அதில் பொம்மலாட்ட மேடை அமைத்து, விளம்பரப்படுத்தி, கட்டணம் வசூல் செய்து நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

மிருதங்கம், பெட்டி, தாளம்/ சால்ரா, பக்கப்பாட்டு, பொம்மையை ஆட்டி கதை வசனம் பேசுபவர், பொம்மைகளை எடுத்துத்தருபவர் என தோற்பாவைக்கூத்து நிகழ்த்துவதற்கு ஆறுபேர் தேவைப்படுகின்றனர்.

தோற்பாவைக் கூத்து நிகழ்த்துபவர் எண்ணிக்கை, குழுவுக்குக் குழு வேறுபடுகிறது. தோற்பாவை நிழற்கூத்து தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா ஆகிய இந்தியாவின் தென் மாநிலங்களில் மட்டுமே காணப்படுகின்றது. கேரளாவில் இக்கலை பாவக்களி, தோற்பாவைக்கூத்து, பாவக்கதகளி, ஒலப்பாவக்கூத்து என்று சுட்டப்படுகிறது. ஆந்திராவில் 'தொகலு பொம்மலாட்டா' என்றும், கர்நாடகத்தில் 'தொகலு/பொம்பே ஆடா' அல்லது 'சக்கல கொம்பே ஆடா' என்றும் ஒரிசாவில் 'ராவன்சாயா' என்றும் சுட்டப்படுகிறது.

தோற்பாவைக் கூத்தின் பூர்வீகமாகச் சீனா இருந்திருக்கலாம் என்ற முடிவிற்கு மு. இராமசுவாமி வருகிறார். ஆனால் வெங்கட்சாமிநாதன் தோற்பாவைக் கூத்து தோன்றிய இடம் ஒன்றல்ல இரண்டு என்று கூறுகிறார்.

தோற்பாவை நிழற்கூத்து பெரும்பாலும் குடும்பக் கலையாக இருப்பதால் வழிவழியாகத் தந்தைக்குப் பின் மகன் என்ற நிலையில் கற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய நிலையில் போற்றுவாரற்று மறைந்துவரும் கலையாகத் தோற்பாவைக் கூத்து உள்ளது. பன்னிரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் குறைந்தவர்களே இக்கலையை நிகழ்த்தி வருவதாகத் தெரிகிறது.

– ஆறு. இராமநாதன்

ஆறு. இராமநாதன் 1950 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் மஞ்சக்கொல்லை என்னுமிடத்தில் பிறந்தார். இவர் எழுத்தாளர், தொகுப்பாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர் ஆகிய நிலைகளில் பணியாற்றி வருகிறார். மேலும் ரதிப்பிரியா, கு.ந.ராமையா ஆகிய பெயர்களிலும் எழுதியுள்ளார். அறுபத்து மூவர் கதைகள், குண்டு மல்லிகை, விக்கிரமாதித்தன் கதைகள், கிளியோபாட்ரா போன்ற பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாவைக் கூத்துக் கலைஞர் ஒருவரை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- 'கூத்து' என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்பைத் தயாரியுங்கள்.

## தோல்பாவைக்கூத்து

மானத்தை
அடகு வைத்து வாழ்ந்து
அதை மீட்க முடியாமல்
ஆத்மாவை விற்று
நிழல்களாகிவிட்ட நிஜங்கள்
நிறைய...
வெட்டிப் பிளந்தாலும்
பிடரி பிடித்துத் துரத்தினாலும்
வாய் பேசாதவை அவை...
உயிர் வாழ்வதற்காக
வாழ்க்கையைப் பறிகொடுத்தவை அவை..
நிழல்களைப் போர்த்திக் கொள்ளலாம்.
நிழல்களுக்குள் புகுந்து வெளிவரலாம்.
நிழல்களைச் செருப்புக்காலால் மிதிக்கலாம்.
நிழல்கள் அப்பாவிகள்
ஒன்றும் செய்யச் சக்தியற்றவை.
வேண்டாதபோது
எந்த விநாடியும்
வெளிச்சம் கொண்டு
சுத்தமாய்த் துடைத்துவிடலாம்.
நிழலுக்கு வேர்கள் இல்லை
ஊன்றி நிற்கக் கால்கள் இல்லை
தரையோடு தரையாய்
படுத்துக் கிடக்கும்
வெளிச்சம் வெளியேறியதும்
அவை வந்துவிடும்
யாசகம் கேட்பதற்கு...
நிழல்களுக்குப் பஞ்சமே இல்லை
நிறையக் கிடைக்கும்
அற்ப காசுக்கு..
இந்த நிழல்கள் ஆண்மையற்றவை
பெற முடியாப் பெண்மையற்றவை.
என்றாலும் இவை
தமக்குப் பின்னே வாரிசுகளாய்த்
தம் நிழல்களை விட்டுச் செல்லத்
தவியாய்த் தவிக்கின்றன!

– கவிஞர் புவியரசு

எஸ். ஜெகநாதன் என்னும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் புவியரசு 1930 இல் உடுமலைபேட்டையிலுள்ள புதூரில் பிறந்தவர். இவர் 80 க்கும் மேற்பட்ட படைப்புகளைத் தந்துள்ளார். ஷேக்ஸ்பியர், உமர்கய்யாம், ஓஷோ, தாகூர் போன்றோரின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவரது மொழிப்பெயர்ப்பு நூலான புரட்சிக்காரன் என்ற நூலுக்கு 2007 இல் சாகித்திய அகாதெமியின் விருது கிடைத்தது.

### செயல்பாடுகள்

- பாடலுக்கு விமர்சனக் குறிப்பு தயாரிக்கவும்.
- இக்கவிதையில் வெளிப்படும் மனிதனின் நிஜ வாழ்க்கையை விளக்கி எழுதுங்கள்.
- இக்கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகளைச் சுட்டிக்காட்டி, அதற்கான காரணத்தைக் கூறுங்கள்.

### வாக்கியம் / தொடர்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடந்து வந்து ஒரு கருத்தை வெளிப்படுத்துமானால் அது வாக்கியம் அல்லது தொடர் எனப்படும்.

எ.டு. : கமலா நடனம் ஆடினாள்.

### எழுவாய்/ பயனிலை/ செயப்படுபொருள்

ஒரு முழுமையான வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் மூன்று கூறுகள் இடம்பெற்றிருக்கும்.

எ.டு.: தேன்மொழி பாடம் படித்தாள்

தேன்மொழி – எழுவாய்

படித்தாள் – பயனிலை

பாடம் – செயப்படுபொருள்

செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியங்கள் அமையலாம்.

எ.டு.: தேன்மொழி படித்தாள்.

### வாக்கிய அமைப்புகள்

வாக்கியங்களைப் பொருள் அல்லது கருத்து அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் செயல்/வினை அடிப்படையிலும் வகைப் படுத்தலாம்.

**கருத்தை அடிப்படையாகக் கொண்டவை**

வாக்கியங்களைக் கருத்து அடிப்படையில் செய்தி வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், வினா வாக்கியம்

## நிழலும் நிஜமும்

நான் நாடோடியாகத்தான் பிறந்தேன். எங்களது மூதாதையர்கள் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். 18 தலைமுறைகளுக்கு முன்பாக மராட்டிய மன்னன் சரபோஜி தஞ்சாவூரை ஆட்சி செய்தார். அப்போது தோல்பாவைக்கூத்து உள்ளிட்ட கலைகளை நிகழ்த்துவதற்காகக் கலைஞர்களை இங்கே அழைத்துக்கொண்டார். சரபோஜி மன்னனின் மறைவுக்குப் பிறகு, தோல்பாவைக்கூத்துக் கலைஞர்கள் நாடோடிகளாகப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

நல்லதங்காள் கதை மற்றும் ஹரிச்சந்திரன் கதையைத் தோல்பாவைக் கூத்து மூலம் நிகழ்த்திக் காட்டுவதை வைத்து வாழ்வாதாரத்தை அமைத்துக்கொண்டனர். ஒரு கிராமத்திற்குச் செல்லும் தோல்பாவைக் கூத்துக் கலைஞர்கள், 10 நாட்கள் அந்த ஊரில் தங்கி, தொடர்ந்து தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சியை நடத்துவார்கள். தொடர்ந்து அவர்கள் வேறு கிராமத்திற்குக் கிளம்பிச் செல்வார்கள். எனது தாத்தா சுப்பாராவ் மூலமாகத்தான் தோல்பாவைக்கூத்துக் கலையை நான் கற்றுக்கொண்டேன்.

தஞ்சாவூரிலிருந்து நாடோடிகளாகக் கிளம்பிய சாமி ராவ் என்பவர்தான் எனது முதல் தலைமுறை. அவரைத்தொடர்ந்து கிருஷ்ணா ராவ், கோபால்

கட்டளை வாக்கியம் என நான்காகப் பகுக்கலாம்.

**செய்தி வாக்கியம்**

கூறவந்த கருத்தை அல்லது செய்தியைத் தெளிவாகக் கூறுவது.

எ.டு.: கண்ணன் நல்ல மாணவன்.

இந்தியா கால்பந்து போட்டியில் வெற்றிபெற்றது.

**வினா வாக்கியம்**

ஒருவரிடம் ஒன்றை வினவுதல் (கேட்டல்)

எ.டு.: சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

நீ எப்போது வந்தாய்?

**கட்டளை வாக்கியம்**

முன்னால் நிற்பவரை நோக்கி ஒரு செயலைச் செய்யச் சொல்லுதல் அல்லது கட்டளை இடுதல்.

கண்ணா! நல்ல நூற்களைப் படி.

நீ போய் அதை எடுத்துக்கொண்டு வா.

**உணர்ச்சி வாக்கியம்**

உணர்ச்சி, ஆச்சரியம் அல்லது அச்சத்தை வெளிப்படுத்துகிற வாக்கியங்களே உணர்ச்சி வாக்கியங்கள்.

எ.டு.: ஐயோ! வலிக்கிறதே!
ஆகா! ஓவியம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

ஐயோ ! நாய் ஓடி வருகிறதே !

ராவ், சுப்பாராவ் (எனது தாத்தா), பாலகிருஷ்ணன் ராவ் (எனது அப்பா). தற்போது நான் என்று கிட்டதட்ட 6 தலைமுறைகளாகத் தோல்பாவைக் கூத்துக் கலையைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறோம். எனது இளமைப் பருவம்வரை எங்களுக்கு வீடு என்று ஒன்று கிடையாது. அந்தக் காலத்தில் கூண்டு வண்டி என்று அழைக்கப்படும் ஒரு குதிரையால் இயங்கும் வண்டிதான் எங்களுக்கு வீடு. அந்த வண்டியில் ஒரு கிராமத்திற்குச் சென்றால் அங்கே கூடாரம் அமைத்துத் தோல்பாவைக்கூத்தை நிகழ்த்துவோம். எனது 10 வயதுவரை நான் நாடோடியாகத்தான் வாழ்ந்தேன்.

நாடோடியாக வாழ்ந்ததால் நான் பள்ளிக்குச் சென்றது கிடையாது. எந்தத் தேதியில் பிறந்தேன் என்பதுகூட எனக்குத் தெரியாது. எனது 19 வயதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருமலை என்ற கிராமத்தில் வீடு அமைத்து வாழத் தொடங்கினோம். 21 வயதில் எனக்குத் திருமணம் ஆனது. தொடர்ந்து அப்பாவின் மரணம் நிகழ்ந்ததால், 2 வருடங்கள் தோல்பாவைக் கூத்துக் கலையை நான் நிகழ்த்துவதை விட்டுவிட்டேன். பலூன் வியாபாரம் செய்தேன். அதிலிருந்து போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பதால் மீண்டும் தோல்பாவைக்கூத்துக் கலையைத் தொடர்ந்து செய்யத் தொடங்கினேன்.

மண்டிகர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் தோல்பாவைக் கூத்துக் கலையை நிகழ்த்துகிறார்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து இந்தக் கலையை நிகழ்த்துவோம். தோல்பாவைக்கூத்து நிகழ்த்தும்போது, எனது அப்பா எப்படிக் கதாபாத்திரங்களுக்கு ஏற்றவாறு குரலை மாற்றுவார், படங்களை அசைப்பார் என்பதைச் சிறுவயதிலிருந்து பார்த்து வளர்ந்ததால், இயல்பாகவே எனக்கு இந்தக் கலை பழகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு குடும்பத்தில் உள்ள ஆண் ஒட்டுமொத்த தோல்பாவைக் கூத்துக் கலையை நிகழ்த்தினால், அவரது மனைவி பக்கவாத்தியங்களை இசைப்பார். மகன் அல்லது மகள் ஸ்ருதிப் பெட்டியைக் கவனித்துக்கொள்வார்கள். இப்படித்தான் இந்தக் கலையை எங்கள் முன்னோர்கள் நிகழ்த்தி வந்திருக்கின்றனர். வில்லுப் பாட்டு, கணியான் கூத்து, மேளம் ஆகிய கலைகள் கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. ஆனால் தோல்பாவைக்கூத்து அப்படிப்பட்டதல்ல. இது மக்களின் பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட கலை.

சம்பந்தபட்ட கிராமங்களுக்குத் தோல்பாவைக்கூத்துக் கலைஞர்கள், குதிரை வண்டியில் கிளம்புவார்கள். கிராமத்தின் தலையாரியைப் பார்த்து எவ்வளவு நாட்கள் கூத்து நடைபெறும் என்பதைக் கூறுவார்கள். எனது தாத்தா கூத்து நிகழ்த்திய காலத்தில் டிக்கெட் கட்டணம் வசூலித்துத் தோல்பாவைக்கூத்து நடைபெற்றது. சினிமா உருவாக்கத்திற்கு முக்கியக் காரணமாக இருந்ததே தோல்பாவைக்கூத்துதான்.

எனது தாத்தா காலத்தில் தோல்பாவைக்கூத்து நிகழ்த்தப் பயன்படுத்தும் தோலால் செய்யப்பட்ட படங்களுக்கு வண்ணங்கள் தீட்ட இயற்கையாகக் கிடைக்கும் தாவரங்களைப் பயன்படுத்தினார்கள். வாடாச்சி இலையைப் பயன்படுத்திப் பச்சை நிறம் உருவாக்கப்பட்டது. சிவப்பு நிறத்திற்குச் சப்பாத்திக் கள்ளியைப் பயன்படுத்தி உள்ளனர். மஞ்சளை உரசி எடுத்தும், பூவரச மொட்டையும் மஞ்சள் நிறம் கிடைக்க பயன்படுத்தி உள்ளனர். மண்ணெண்ணெய் விளக்கிற்கு மேல் பானையை வைத்தால், கிடைக்கும் கரியைக் கருப்பு நிறத்திற்காகப் பயன்படுத்தி உள்ளனர்.

தோல்பாவைக்கூத்தின்போது பயன்படுத்தும் படங்களை ஆட்டுத் தோலில் செய்கிறோம். எனது பூட்டன், தாத்தா காலத்தில், கிட்டதட்ட 100 வருடங்களுக்கு முன்பு பயன்படுத்திய படங்களை இப்போதும் வைத்திருக்கிறேன். ஆட்டுத்தோலில் இருக்கும் ஜவ்வை நாங்கள் நீக்கிவிடுவோம். இந்தத் தோலில் தேவையான வடிவத்தில் படங்களைச் செய்வோம். இப்படி ஆட்டுத் தோலில் செய்வதால் படங்கள் கிழியாமல் பல ஆண்டுகள் அப்படியே இருக்கும். தோல்பாவைக்கூத்துக்குப் பயன்படுத்தும் திரைக்கு, 8 முழம் வேஷ்டி போதுமானது.

தோல்பாவைக்கூத்தைக் காண டிக்கெட் வசூலித்த காலத்தில் (சுமார் 20 வருடங்களுக்கு முன்பு) கிராமம் முழுவதும் கொட்டு அடித்துக்கொண்டு

செல்வோம். அப்படித்தான் தோல்பாவைக்கூத்து நடைபெறும் விவரத்தை மக்களுக்கு அறிவிப்போம். அதுபோல வரைந்த போஸ்டர்களைக் கையில் எடுத்துச்செல்வோம்.

கூத்து நடைபெறும்போது, படங்களை அசைத்துக்கொண்டே அதற்குக் குரல் கொடுப்பேன். கதாபாத்திரத்திற்கு ஏற்றவாறு குரலை மாற்ற வேண்டும். உதாரணமாகக் குழந்தைக் கதாபாத்திரத்திற்குக் குழந்தைபோலவும், நடுத்தர வயது ஆண் என்றால் அவரது குரல் போலவும், வயதான பாட்டியின் குரலைப்போல கிட்டதட்ட 30 வகையான குரல்களில் பேசிக் கூத்தை நடத்துவேன்.

நான் சிறு வயதாக இருக்கும்போது, பெட்டரோ மாஸ் லைட் வெளிச்சத்தில் தோல்பாவைக்கூத்து நடத்தப்பட்டது. அதற்கு முன்பாகப் பின்னங் கொட்டை எண்ணெய்யில் திரி தூண்டி எரியும் விளக்கின் வெளிச்சத்தில் தோல்பாவைக்கூத்து நடைபெற்றது.

கேரளத்தில் நடைபெறும் தோல்பாவைக்கூத்தில் எண்ணெயில் எரியும் விளக்குகளை வைத்துதான் இன்றும் கூத்து நடைபெறுகிறது. 25 சிறிய விளக்குகளை வைத்துத் தோல்பாவைக்கூத்து அங்கு நடைபெறும்.

தமிழகத்தில் நடைபெறும் தோல்பாவைக்கூத்தில் பெட்டரோ மாஸ் லைட்டுக்குப் பிறகு வெளிச்சத்திற்காகக் குண்டு பல்பு பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு ஹாலோஜன் பல்பும், தற்போது எல்.இ.டி பல்பும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கலையை நம்பித்தான் எனது ஒட்டுமொத்த குடும்பமும் வாழ்கிறது. இதன் மூலம் நிலையான வருமானம் வருவதில்லை. நிகழ்ச்சிக்கு அழைப்பவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதைத்தான் நான் பெற்றுக்கொள்கிறேன்.

–பா. முத்து சந்திரன்

கலைஞர் பா. முத்து சந்திரன் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையைச் சார்ந்தவர். இவரது அனுபவம் தோல்பாவைக்கூத்துக் கலை தொடர்பான ஆழமான பார்வையைத் தருகிறது. இவர் கலைமாமணி விருது பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- தோல்பாவைக்கூத்துக் கலைஞர் முத்து சந்திரனின் கலை ஆர்வத்தைப் பாராட்டிக் கடிதம் எழுதுங்கள்.
- தோல்பாவைக்கூத்தின் கலைநுட்பங்கள் குறித்து விளக்கக் குறிப்பு தயாரியுங்கள்.
- நலிந்து வரும் தோல்பாவைக்கூத்துக் கலையைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தித் தலையங்கம் தயாரிக்கவும்.

# திரைக்கலை



## ஊடகங்கள்

கருத்தைச் சொல்லிடணும் புரியும் படியாக
பாமர மக்கள்கூட அறியும் படியாக
சேர்ந்து இருக்கணும் நற்செய்தி தருவதில்
விலகி இருக்கணும் அதிகாரத்திடம் விழுவதில்

தேவையான செய்திகள் முதலிடம் பிடிக்கணும்
தேவையில்லா குப்பைகள் தீயிலிட்டு அழிக்கணும்
வாய்மையின் தாள்பணிந்து வெற்றிபெற்றுக் காட்டணும்
நேர்மையின் மொழிபேசி நீதிநிலை நாட்டணும்

இளைஞர்கள் நம்பிக்கையாய் ஊடகங்கள் மாறணும்
கலைஞர்கள் வெற்றிபெற கைகொடுத்து உதவணும்
இயற்கைப் பேரிடரில் இணைத்தாய் மக்கள்சக்தி
அதன்பின்தானே உன்மேல் பலருக்குப் பக்தி

ஊடகம் நீ நினைத்தால் புரட்சியும் வெடிக்கவைப்பாய்
ஊடகம் நீ நினைத்தால் வறட்சியும் ஒளிந்துகொள்ளும்
ஊடகம் நீ நினைத்தால் கோடிமரம் உயிர்பெறுமே
ஊடகம் நீ நினைத்தால் கோட்டைகளும் தகர்ந்திடுமே

ஆக்கத்தைக் கொள்கையாக்கி மக்களை ஆண்டுவந்தால்
ஊக்கமாய் கைகொடுப்பர்
நேசமாய் சார்ந்துசெல்வர் ஊடகம் இல்லையெனில்
உலகிங்கு இல்லையே ஊடகம் இவ்வுலகின் மக்களின் சுவாசமே

– அ. வேளாங்கண்ணி

அ. வேளாங்கண்ணி என்பவர் கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாளர் என்று பன்முகத்திறன் கொண்டவர். பெண்ணியச் சிந்தனைகளையும் சமூக எதார்த்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதி வருகிறார்.

### செயல்பாடுகள்

- ஊடகம் எவ்வாறெல்லாம் மாறவேண்டும் என ஆசிரியர் எடுத்துரைக்கிறார்? குறிப்பு எழுதுங்கள்.

## பாரதிராஜா

பாரதிராஜா தமிழ்த் திரையுலகின் கிராமத்து அதிசயம். பாமரனிலிருந்து படித்தவர் வரை எல்லோருடைய மனதிலும் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தி இருப்பவர். நமது பண்பாட்டோடும் கலாச்சார முறைகளோடும் இவர் அணுகும் கிராமிய முறைகள் இவருடைய திரைப்படங்கள் மூலம் அப்படியே எதிரொலிப்பவை. திரைப்படங்கள் நாயகர்களின் வசனத் திறமை, சண்டைத் திறமையையும் நாயகிகளின் நாட்டியத்திறமை, நடிப்புத் திறமைகளையும் மட்டுமே அதிகளவு சொல்லிக் கொண்டிருந்த நிலைகளை மாற்றிய அதிநுட்ப மனிதர்களில் இவரும் ஒருவர். இவருடைய படங்கள் கிராமியச் சூழ்நிலைகளை உள்வாங்கியிருந்ததால் ஒரு கிராமத்தின் நிகழ்வுகளை அப்படியே அப்பட்டமாகப் பிரதிபலிக்கும். இவருடைய படங்களில் நடிகர், நடிகைகள் மட்டுமின்றி, குளக்கரை, வயல்வெளி, புல்வெளி ஆகியவைகளும் நடித்து அசத்தும்.

ஈழத்தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர் கார்த்திகேசு சிவத்தம்பி, திரைப்படத்தில் மக்களின் நிலைகளைப் பெரிய அளவில் முறைப்படி கூறிய ஒரே இயக்குநர் பாரதிராஜா மட்டும்தான் என்று கூறியிருக்கிறார். 16 வயதினிலே திரைப்படம் பெயருக்கேற்றாற்போல் இப்பொழுதும் இளமை, இனிமை, குன்றாமல் ஜொலிக்கும் படம். அப்படம் வெளிவந்த காலத்தில் அன்றையத் திரையுலக முன்னோடிகள் இவரை ஆச்சரியத்தோடு பார்த்தனர். ஒரு குக்கிராமத்தின் நிகழ்வுகளைக் கிராமிய அழகில் சொன்ன முதல் தரமான முதல் கிராமத்துப்படம். சப்பாணி, பரட்டை, மயிலு கதாபாத்திரங்களோடு பின்னிப் பிணைக்கப்பட்டுக் கிராமிய வசனங்களோடு வெளிவந்த முதல் ஒலிச்சித்திரமான '16 வயதினிலே'. தமிழகமெங்கும் ஒலித்த இனிமையான நாட்களை யாராலும் மறக்க முடியாது.

தொடர்ந்து அவர் தந்த கிராமத்துத் திரைப்படங்கள் திரையுலகில் ஒரு புதிய பரிமாணத்தை உண்டுபண்ணின. 'கிழக்கே போகும் ரயில்' சாதிப் பிரச்சினைகளைச் சாடியது. கிராமத்துக் கதைகளிலும் இலக்கியச் சுவையைத் திரைப்படங்கள் வாயிலாகத் தரமுடியும் என்று 'புதிய வார்ப்புகள்', 'நிறம் மாறாத பூக்கள்' மூலம் நிரூபித்துக் காட்டினார். வேலையில்லாப் பட்டதாரிகளின் அவலங்களை 'நிழல்கள்' படத்தில் சொன்னார். காதல் என்பது உணர்வுள்ள உலக ஜீவராசிகள் அனைவருக்குமே வரும் என்பதைப் பார்வையிழந்த கதாபாத்திரம் வாயிலாகக் 'காதல் ஓவியம்' படத்தில் சொன்னார்.

'மண் வாசனை' திரைப்படத்தின் மூலம் மருமகளுக்கும் தாய்மாமனுக்கும் உள்ள உறவை அற்புதமாகக் காட்டினார். இந்த அற்புதமான உறவைக் கிராமிய நெஞ்சங்களில் அற்புதமாகப் பதித்த ஒரே இயக்குநர் இவர் மட்டும்தான். இவர் அளவுக்கு வேறு யாரும் இதைச் சாதித்ததில்லை என்று உறுதியாகக் கூறலாம். 'புதுமைப் பெண்'ணின் மூலம் பாரதியின் புரட்சியை ஆதரித்தார். 'முதல் மரியாதையில்' வயது வித்தியாசக் காதலைக் காட்டினார். முரட்டு மனிதனைக்கூட காதல் திருத்திவிடும் என்பதைக் 'கடலோரக் கவிதைகள்' படத்தில் கவிதையாகச் சொன்னார்.

ஆடு, மாடுகளை மேய்க்கும் மனிதனைக்கூட சென்றடையும் இசை ஞானியின் இசையைப் போல, பாரதிராஜாவின் படங்களும் அவர்களுடைய நெஞ்சங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இப்படி ஒவ்வொரு பாமரனையும் பாதிக்கும் அளவிற்கு இவருடைய கிராமத்து ஆக்கங்கள் எளிமையில் வீரியம் பெற்றிருக்கின்றன. கிராமத்தின் அழகை அள்ளிக்கொண்டு வரும் படங்களில் வயல்வெளிகளின் புறத் தோற்றம் இயற்கை மாறாமல் படம் பிடிக்கப்பட்டிருக்கும். கிராமத்துப் பஞ்சாயத்துக்களின் கம்பீரம், அம்மக்களின் ஒழுக்க நெறிகளை உரசிப்பார்ப்பதாக இருக்கும். ஒவ்வொரு பாத்திரப்படைப்பும் வித்தியாசமான பார்வையோடு உலாவும். அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும் சூழ்நிலையை உண்டாக்கிக் காட்டும்போது ஓர் அழுத்தமான கம்பீரத்தை அங்கே திணித்திருப்பார்.

அவைகள் படம் முழுவதும் ஓர் உயிரோட்டமுள்ள எல்லைக்குட்பட்டே திரிவதால், நம் நெஞ்சங்களில் அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்தும்.

இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும்கூட, நமது வருங்கால சந்ததியினர் நமது இன்றைய திரைப்படங்களை ஆராய்ச்சி செய்தால் நமது கலாச்சாரம், பண்பாடு பற்றிய உண்மையான நிகழ்ச்சிகளும், சம்பவங்களும் தகவல்களாகக் கிடைத்தால்தான் நாம் மானிட வர்க்கத்திற்கு இத்துறை மூலம் தொண்டு செய்திருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ள முடியும். இதற்காகப் பாரதிராஜா போன்ற எண்ணற்ற படைப்பாளிகளை இனிமேலாவது நம் திரையுலகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

– நெல்லை தமிழ்பாண்டியன், சினிமா எக்ஸ்பிரஸ்

முனைவர். அ. பிச்சை அவர்கள் எழுதிய 'தொண்ணூறுகளில் தமிழ் சினிமா' (1990–2000) என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரையின் ஆசிரியர் நெல்லை தமிழ்பாண்டியன் ஆவார்.

## செயல்பாடுகள்

- 'திரைக்கலை, மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது' – விளக்கக் குறிப்புத் தயாரியுங்கள்.
- 'தமிழ்த் திரைப்பட வரலாற்றில் பாரதிராஜா ஒரு திருப்புமுனை' – விவாதக் குறிப்புத் தயாரியுங்கள்.

## தமிழ் சினிமாவிற்கு ஓர் ஆஸ்கார்

மூன்று ஆண்டுகளுக்கு முன் முதுமலை சரணாலயத்திலுள்ள தெப்பக்காடு யானை முகாமிற்குச் சென்றிருந்தேன். யானைகளுக்கு உணவு தயாரிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்த வளாகத்தின் ஓரத்தில் ஒரு புதிய அடைப்பிடம் ஒன்று எழுந்துள்ளதைக் கவனித்து அங்கே சென்றேன். (இம்மாதிரி யானை அடைப்பிடம் க்ரால் kraal என்று குறிப்பிடப்படுகின்றது). அங்கே படுத்துக்கிடந்த ஒரு யானைக்குட்டியின் அருகே ஒரு பழங்குடிப் பெண்மணி அமர்ந்திருந்தார். அந்தக் குட்டியின் தாய் யானை இறந்துவிட்டதாகவும் அதைக் கவனித்துக்கொள்ள, தான் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் சொன்னார். சில வருடங்களுக்குப் பின், இந்தியாவின் முதல் ஆஸ்கார் விருது பெற்ற படத்தில் இவர் தோன்றி உலகப்புகழ் பெறுவார் என்று அன்று நான் அறிந்திருக்கவில்லை.

பெள்ளி என்ற பெயர் கொண்டவருக்கும் பொம்மன் என்றவருக்கும் இந்த யானைக்குட்டியை வளர்க்கும் பணி கொடுக்கப்பட்டிருக்கின்றது. காட்டானைத் திரளைவிட்டு பிரிந்து குட்டி அல்லது தாய் யானை இறந்துவிட்டதால் அனாதையாகும் குட்டிகளை வளர்ப்பது சிரமம் என்றும் அதில் பல செத்துப்போகின்றன என்றும் வனத்துறையினர் சொல்கின்றனர். இதனால் குட்டியானை ரகுவைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்த இருவரையும் பணிக்கு அமர்த்துகின்றார்கள். இந்த இரு பழங்குடியினருக்கும் குட்டி யானைக்கும் உருவாகும் பிணைப்பு, இவர்களின் வாழ்க்கை, இவை யானையின் வாழ்விடமான மேற்குத்தொடர்ச்சி மலைக்காட்டின் பின் புலத்தில் சொல்லப்படுகின்றது. இதுதான் The Elephant Whisperers என்ற ஆவணப்படத்தின் சாரம்.

இந்தக் குறும்படத்தின் குவிமையம் யானை. வரலாற்றிற்கு முன்பிருந்தே இந்தக் காட்டுயிர் இவ்வுலகில் வாழ்ந்திருக்கின்றது. நம் நாட்டில் பல இடங்களிலிருந்து இதன் தொல்லெச்சப் படிவங்கள் (fossils) அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் முதன் முதலில் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட காட்டுயிர் யானை. 1879 லேயே யானையைச் சுடக்கூடாது என்ற சட்டம் அமல்படுத்தப்பட்டது என்றாலும் காட்டானைகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்துகொண்டே வந்தது. 1992 ஆம் ஆண்டு, இந்திய அரசு Project Elephant என்ற செயல்திட்டத்தைக் கொண்டு வந்தது. இன்றைய கணிப்பின்படி, உலகில் 50,000 ஆசிய யானைகள் உள்ளன. அதிகமான ஆசிய யானைகளைக் கொண்ட நாடு இந்தியாதான். இங்கு 27,000 காட்டுயானைகளும் 3,500 வளர்ப்பு யானைகளும் இருக்கின்றன. அதிலும் மேற்குத்தொடர்ச்சி மலைகளில்தான் அவை அதிகமாக வாழ்கின்றன. அண்மையில் யானை நமது "பாரம்பரிய விலங்காக" (Heritage Animal) அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 2010 ஆம் ஆண்டு இந்திய அரசு கஜா அறிக்கையை (Gajah Report) வெளியிட்டது. யானையின் வாழிடம் சீரழிக்கப்பட்டும், சுருங்கியும்

**அமைப்பை அடிப்படையாக் கொண்டவை**

அமைப்பு அடிப்படையில் வாக்கியங்களைத் தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலவை வாக்கியம் என மூன்றாகப் பாகுபடுத்தலாம். இவற்றை முறையே தனித்தொடர், கூட்டுத்தொடர், கலவைத்தொடர் எனவும் குறிப்பிடுவதுண்டு.

**தனி வாக்கியம் /தனித்தொடர்**

ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ வந்து ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது.

எ.டு.: கண்ணன் படித்தான்– ஓர் எழுவாய்

கண்ணனும் அமுதாவும் படித்தனர் – இரு எழுவாய்கள்.

சேர, சோழ, பாண்டியர்கள் வெற்றி பெற்றனர் – மூன்று எழுவாய்கள்

**தொடர் வாக்கியம் /கூட்டுத்தொடர்**

ஓர் எழுவாய் ஒன்றிற்கு மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டு முடிவது.

எ.டு.: அமுதா போட்டியில் பங்கு பெற்றாள்; வெற்றி அடைந்தாள்; பரிசு வாங்கினாள்.

அமுதா என்ற எழுவாய் ஒரே வாக்கியத்தில் பெற்றாள், அடைந்தாள், வாங்கினாள் என மூன்று பயனிலைகளைக் கொண்டு முடிந்துள்ளது.

**கலவை வாக்கியம் / கலவைத்தொடர்**

ஒரு முதன்மை வாக்கியமும், அதனுடன் வேறு துணை வாக்கியங்களும் (எச்ச வாக்கியம்) கலந்து வருவது கலவை வாக்கியம்.

எ.டு.: 'பயனுள்ள நூல்களைப் படித்தும்
நல்லவர்களுடன் பழகியும்
வாழ்க்கையில் முன்னேற
அனைவரும் முயலவேண்டும்.'

இங்கு வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயலவேண்டும் என்பது முதன்மை வாக்கியம். பயனுள்ள நூல்களைப் படித்தும், நல்லவர்களுடன் பழகியும் ஆகியன எச்சத் தொடராக அமைந்த துணைவாக்கியங்கள்.

வருவதால், இந்த விலங்கைப் பாதுகாப்பது ஒரு சிரமமான பணியாக உள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

இந்தக் குறும்படத்திற்கு வேறு சில பரிமாணங்களும் உண்டு. அநாதையான ஒரு யானைக்குட்டியின் கதையைச் சொல்லும் போதே, காட்டுயிர் பேணலில் உள்ள சில பிரச்சினைகளை, நீளப்பிரசங்கம் ஒன்றும் செய்யாமல், இப்படம் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. அதில் ஒன்று காட்டுயிர் – மனிதர் உரசல். குட்டி ரகுவின் தாய் யானை ஒரு திருட்டு மின்சார வேலியினால் உயிரிழந்தது. இத்தகைய யானை மரணங்களைப் பற்றி நாளிதழ்களில் படிக்கின்றோம். அதுமட்டுமல்ல காட்டுயானைகளால் மனித மரணங்களும் ஏற்படுகின்றன. குட்டியைப் பராமரிக்கும் பெள்ளியின் கணவரை ஒரு வேங்கை அடித்துக் கொன்றுவிட்டது. இது நாடு முழுவதும் வனத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினை.

இரண்டாவது, இந்தப் படத்தில் காட்டில் வசிக்கும் பழங்குடியினர் – எதிர் கொள்ளும் வாழ்வியல் சிரமங்கள் காட்டப்படுகின்றன. சிறிய குடிசையில் வாழும் பெள்ளி தனது பேத்தியை மடியில் கிடத்தி, தனது கடந்த காலத்தைப் பற்றிச் சொல்லும் இடம், அவர்களது இடர்செறிந்த அன்றாட வாழ்க்கையின் சில காட்சிகளைக் காண்கின்றோம். ஒரு மலை முகட்டில் தொங்கிக்கொண்டிருக்கும்

**செயல் / வினையை அடிப்படையாகக் கொண்டவை**

வாக்கியங்களில் வினைகள் முற்றுகளாகவோ எச்சங்களாகவோ இடம்பெறும்.

எ.டு.: கண்ணன் வந்தான் – முற்று

கண்ணன் வந்து – எச்சம்

இவ்வாறு வரும் முற்றுகள், எச்சங்கள் அடிப்படையில் வாக்கியங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,

தன்வினை/பிறவினை வாக்கியங்கள்.

செய்வினை/செயப்பாட்டுவினை வாக்கியங்கள்.

உடன்பாட்டு/எதிர்மறை வினை வாக்கியங்கள்.

**தன்வினை/ பிறவினை**

ஒரு செயலைத் தானாகச் செய்வது தன்வினை. ஒரு செயலைத் தானாகச் செய்யாமல் பிறரைக் கொண்டு செய்யவைப்பது பிறவினை.

கண்ணன் ஓடினான், அவள் திருந்தினாள் – தன்வினை

கண்ணன் ஓடச்செய்தான், அவள் திருத்தினாள் – பிறவினை

இந்த வாக்கியங்களில் எழுவாய் (கண்ணன், அவள்) ஒரு செயலைத் தானாகச் செய்கிறது. இதில் எழுவாயும் பயனிலையும் மட்டுமே காணப்படும். செயப்படுபொருள் வராது.

**செய்வினை /செயப்பாட்டு வினை**

கண்ணன் நன்கொடை அளித்தான் –செய்வினை.

கண்ணனால் நன்கொடை அளிக்கப்பட்டது. நன்கொடை கண்ணனால் அளிக்கப்பட்டது. –செயப்பாட்டுவினை

செய்வினை வாக்கியங்கள் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்ற வரிசையில் அமையும்–செயப்பாட்டுவினை வாக்கியங்களில் செயப்படுபொருள் எழுவாயாக அமையும்.

**உடன்பாட்டு வினை/எதிர்மறை வினை**

உடன்பாட்டு நிலையில் உள்ளவை உடன்பாட்டு வினை வாக்கியங்கள். எதிர்மறையில் வருபவை எதிர்மறை வினை வாக்கியங்கள்.

கண்ணனை எல்லோருக்கும் தெரியும்.

உடன்பாடு

கண்ணனைத் தெரியாதவர்கள் இல்லை. –

எதிர்மறை

இங்கு ஒரு கருத்து இருநிலைகளில் கூறப்பட்டுள்ளது.

தேன்கூடுகளிலிருந்து தேன் சேகரிக்கும் காட்சி ஓர் எடுத்துக்காட்டு. கரணம் தப்பினால் மரணம்தான். இந்தியாவில் எடுக்கப்பட்ட பெருவாரியான காட்டுயிர் பற்றிய ஆவணப்படங்கள் காட்டில் மக்களே இல்லாதது போன்ற மாயையை உருவாக்குகின்றன. உண்மை என்னவென்றால் நம் நாட்டில் யானைகள் வாழிடத்தில் 80% பகுதியில் மனிதர்களும் வசிக்கின்றார்கள். இந்த 80% காட்டில், யானையும் மனிதர்களும் இருக்கின்றார்கள். இதில் பிரச்சினை என்னவென்றால் இம்மாதிரியான பார்வை, மனிதர்களற்ற காட்டைக் காட்டுவது, ஒருவிதமான காட்டுயிர் பேணல் முறையை, காட்டில், முக்கியமாகச் சரணாலயங்களில் மனிதர்கள் இருக்கக்கூடாது என்ற நிலையை ஆதரிக்கின்றது என்கிறார்கள். சில காட்டுயிரியியலாளர்கள் இதைக் "கோட்டைப் பாதுகாப்பு" (Fortress Conservation) என்று குறிப்பிடுகின்றார்கள். இது ஒரு விவாதத்தைத் துவக்கியிருக்கின்றது. ஊழிகாலமாகக் காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களை அங்கிருந்து வெளியேறச் சொல்கிறார்கள். எங்கே போவார்கள்? இவர்களுடைய இக்கட்டான நிலைமையைக் கண்ட இந்திய அரசு கொண்டு வந்ததுதான் வன உரிமைச் சட்டம் 2006. இந்தச் சட்டம் பற்றி ஓர் அரசுப் பதிவு சொல்கின்றது:

"பழங்குடியினருக்கும், வனத்திற்கும் உள்ள நெருங்கிய உறவை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் காட்டைச் சார்ந்திருக்கின்றார்கள். காட்டைப் பேணுதல் பற்றிய அவர்களது பாரம்பரியப் பட்டறிவை நாம் அங்கீகரிக்க வேண்டும்."

படிப்பதற்கு நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. பழங்குடியினரின் வாழ்வுரிமைப் பிரச்சினைகள் தொடர்கின்றன.

இந்தப் படத்தில், மேற்குத்தொடர்ச்சி மலையின் பல்லுயிரியம் அருமையாகக் காட்சிப்படுத்தப்படுகின்றது. மலபார் அணில் தொடங்கி, காட்டுமாடு, சாம்பர் மான், குட்டியை அணைக்கும் லாங்குர் மந்தி, ஆடி அசைந்து வரும் கரடி இவைகளைப் பார்க்கின்றோம். ஆம், வேங்கையும் உண்டு. முதுமலை புலி காப்பகமாயிற்றே. பாம்புக் கழுகைப் பார்க்கின்றோம். இன்று வெகு அரிதாயிருக்கும், முன்னர் பிணம்தின்னிக் கழுகு என்று குறிப்பிடப்பட்ட பாறு கழுகைக் காட்டுகின்றார்கள். அவ்வப்போது வரும் நிலப்பரப்புக் காட்சிகள் யானையின் வாழிடமான இலையுதிர் காட்டை அற்புதமாகக் காட்டுகிறது. அதோடு மருதமரங்களைக் கொண்ட காடு, ஒன்றன் பின் ஒன்றாகக் காட்சிப்படுத்துகின்றன. திரை முழுக்கத் தெரியும் இலையற்ற மலைத்தொடர்கள், மோயார் நீர்வீழ்ச்சி, காட்டு ஓடைகள், பருவ மழையை அறிவிக்கும் சூல்கொண்ட மேகங்கள், ஒரு தங்கத் தாம்பாளம் போல் தொடுவானத்தில் மறையும் சூரியன், விண்மீன்கள் நிறைந்த வானம் இவை யாவுமே மனதைத்தொடும் பிம்பங்கள். காட்டுயானைத்திரள் ஒன்று வனப்பாதையில் செல்லும் காட்சி மனதில் நிற்கின்றது. எல்லாக் காட்சிகளுமே சுற்றுப்புற ஒளியில்தான் படமாக்கப்பட்டுள்ளன. ட்ரோன் காமெரா நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வப்போது பின்னணியில் ஒலிக்கும் புல்லாங்குழல் இசை, காட்சிப் படிமங்களோடு ஒன்றிப்போகின்றது. (இசை பெல்ஜிய இளைஞர் ஸ்வென் ஃபால்கோன் Sven Faulcone).

காட்டுயிர் பற்றி, இயற்கையைப் பற்றி படமெடுப்பதில் சில சிரமங்கள் உண்டு. உயிரினங்களின் நடவடிக்கை இயக்குநர் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. ஒரு விலங்கை இயக்குநர் இப்படிச் செய், அப்படிச் செய் என்று சொல்ல முடியாது. கையில் ஒரு ஷூட்டிங் ஸ்கிரிப்டை வைத்துக்கொண்டு காட்டுயிர் பற்றி படம் எடுக்க முடியாது. ஒரு பொதுவான கதைக் கருவை மனதில் வைத்துத்தான் படம் எடுக்க முற்பட வேண்டும். கிடைத்ததை வைத்துப் படத்தை உருவாக்க வேண்டும். இங்குதான் எடிட்டரின் வேலை மிக முக்கியமாகின்றது. ஹிட்ச்காக் ஒரு முறை சொன்னார்: "திரைப்படமெடுக்கும்போது இயக்குநர்தான் கடவுள். ஆனால் ஆவணப்படம் எடுக்கும்போது கடவுள்தான் இயக்குநர்". அது மட்டுமல்ல நம் நாட்டில் காட்டில் படமெடுப்பதற்கு ஆயிரத்தெட்டு சட்டதிட்டங்கள் உண்டு. டிஸ்கவரி சேனல், நேஷ்னல் ஜியாக்ரஃபிக் போன்ற ஒளியலை வரிசைகளில் எப்போதும் ஆப்பிரிக்க காட்டுயிர் பற்றிய படங்களையே காட்டிக்கொண்டிருப்பதற்கு இதுதான் காரணம். காட்டுயிர் படம் எடுப்பவர்கள் இந்தியாவிற்கு வரத் தயங்குகின்றார்கள்.

### ஆஸ்கர் விருதுகள்.

ஆஸ்கர் விருது உலகின் மிகப்பெரிய சினிமா விருதுகளுள் ஒன்றாகப் பெரும்பாலானவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த விருதை வெல்வது என்பது மதிப்புமிக்கதாகக் கருதப்படுகிறது.

- ஆஸ்கர் அகாதெமி விருதுகள் என அழைக்கப்படும் இந்த விருது 1929 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- ஆஸ்கர் விழாவை அகாதெமி ஆஃப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் & சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இந்த அமைப்பு 1927 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது 36 பேர் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இருந்தார்கள். இப்போது ஆறாயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர்.
- நடிப்புக்காக அதிக ஆஸ்கர் விருதை வென்றவர் கத்தரின் ஹெப்பர்ன். சிறந்த நடிகைக்கான விருதை இவர் நான்கு முறை வென்றுள்ளார்.
- மூன்று திரைப்படங்கள் அதிகபட்சமாக 11 பிரிவுகளில் அகாதெமி விருதுகளை வென்றுள்ளன.
- அதிகமுறை ஆஸ்கர் விருது வென்ற பெண் எடித் ஹெட் கலிஃ எடித் என்பவர். இவர் எட்டு முறை சிறந்த உடை வடிவமைப்பாளருக்கான பிரிவில் விருது பெற்றுள்ளார்.
- ஆஸ்கர் விருது பெறுபவர்களுக்கு 45 நொடிகள் மட்டுமே மேடையில் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். நேர எல்லையைக் கடந்தால் மைக்ரோ ஃபோனிற்கு ஒலி இணைப்புத் துண்டிக்கப்படும்.
- ஆஸ்கர் வரலாற்றில் இரண்டு விருதுகள் வாங்கிய ஒரே இந்தியர் ஏ.ஆர். ரஹ்மான் மட்டுமே. இவர் விருது வென்றபோது ஆஸ்கர் மேடையில் தமிழ்மொழி முதல்முறையாக ஒலித்தது.

இப்படத்தின் தயாரிப்பாளர் குனீத் மோங்கா என்பவர் லஞ்ச் பாக்ஸ் (2013), மசான் (2015) போன்ற சிறப்பான படங்களைத் தயாரித்தவர். கான் திரைப்பட விழாவில் இந்தப்படங்கள் பங்கெடுத்திருக்கின்றன. ஊட்டியில் வாழும் இயக்குநர் கார்த்திகி கோன்சால்வஸுக்கு இதுவே முதல் படம். சினிமாவுடன் நல்ல பரிச்சயம் உள்ளவர் என்பது தெரிகின்றது. சினிமாவின் சாத்தியக்கூறுகளை உணர்ந்திருக்கின்றார். திரையின் மூலம், காட்சிப் படிமங்கள் மூலம், பார்வையாளர்களுக்கு ஒரு விழிப்புணர்வைத் தர முடியும் என்பதைக் காட்ட இப்படம் நல்ல எடுத்துக்காட்டு.

– சு. தியடோர் பாஸ்கரன்

பாடப்பகுதியில் உள்ள பகுதி சு. தியடோர் பாஸ்கரன் எழுதிய "திரையில் விரியும் சமூகம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் 1940 இல் தமிழ்நாட்டில் உள்ள தாராபுரத்தில் பிறந்தார். இவரின் The Eye of the Serpent என்ற தமிழ் சினிமா பற்றிய நூல் தங்கத் தாமரை விருதை 1997 இல் பெற்றது.

### செயல்பாடுகள்

- 'The elephant whispers' என்ற ஆவணப்படத்தின் கதைக் கருவினை எழுதுங்கள்.
- சுற்றுச்சூழல் தொடர்பான ஓர் ஆவணப்படம் தயாரிங்கள்.
- 'ஊடகம் இன்று உலக மக்களின் சுவாசமே!' விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.
- சமூக ஊடகங்கள் குறித்து குறிப்பு எழுதுங்கள்.

# அலகு 3

# தூய்மை



'புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. சுகாதாரமான வாழ்க்கைக்கு உடலும் உணவும் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும். ஆரோக்கியமான வாழ்விற்குத் தூய்மை மிக இன்றியமையாததாகும். தன்னலம் பேணி பிறர்நலம் காண விழைபவர்கள் நாட்டையும் நகரத்தையும் தூய்மையாக வைத்திருக்க முயலவேண்டும்.

# உணவும் உடலும்



## உணவே வா! வா!

'சோற்றால் அடித்த சுவரு – இந்தச் சோறில்லாட்டிப் போகுமே உசுரு!'

என்று நாட்டுப்பாடல் ஒன்று பாடப்பாடுகிறது.

மக்களுக்குச் சோறுதான் மாபெரும் பேறு. இந்த உணவுதான் உறக்கத்தில் கனவாகவும் புழக்கத்தில் நினைவாகவும் இருந்து மக்களை ஊக்குவிக்கின்றது, உற்சாகப்படுத்துகின்றது, பல சமயங்களில் வாட்டியும் விடுகின்றது.

வயிற்றுக்கு உணவில்லை என்றால் வறுமை நிலை. அதுவே சிறுமை நிலை. தாங்கள் விரும்பிய உணவை விரும்பியவாறே உண்ணுவோருக்குச் சமுதாயத்தில் ஒருவிதப் பெருமை நிலை. அவர்களுக்கே முதன்மை நிலை.

இல்லாமையும் இயலாமையும்தான் மனித குலத்தைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கிறது, வேறுபடுத்திக் கொண்டிருக்கிறது. காரணம் பொல்லாத இந்தப் பணம்தான். இப்படி உலகை ஆட்டுவிக்கின்ற உணவைத்தான் பிறந்த குழந்தை முதல் இறக்கும் மனிதர்வரை, எல்லோருமே விரும்புகின்றனர். வேட்டை நாய் போல விரட்டி விரட்டித் தேடி உண்ணுகின்றனர்.

ஏன்?

வயிறுதான் காரணம்...

ஐந்தறிவுவரை உள்ள மிருகங்களுக்கும் இந்தப் பசி இருக்கிறது. ஆறறிவு உள்ள மனிதர்களுக்கும் இந்தப் பசிவேகம் இருக்கத்தான் இருக்கிறது.

ஆனால், இவர்களுக்கு இடையேயுள்ள வேறுபாட்டைப் பாருங்கள். அறிவுபடுத்தும் அலங்கோலத்தைப் பாருங்கள்.

இந்த உலகில் உயிர் வாழும் ஜீவராசிகளுக்குள்ளே, மனிதன் மட்டுமே தனக்குத் தேவையான உணவை வளர்க்கிறான்; படைத்துக் கொள்கிறான்; பெருக்கி உண்கிறான்.

வாயில்லா ஜீவன்கள் என்று நாம் வருணிக்கின்றோமே, அந்த மிருகங்கள் தங்களுக்குத் தேவையான உணவை வளர்ப்பதில்லை. எங்கு எது தமக்குப் பயன்படுமோ, அந்த இடத்திற்குப் போய் அதனை மேய்ந்தோ, தின்றோ, மகிழ்ந்து போகிறது.

கிடைக்கும் உணவுக்கும் கிடைக்காத உணவுக்கும் மனித இனம் தலைகீழாய்த் திரிகிறது. தடுமாறி அலைகிறது.

இப்படி ஆவலுடன் பறக்கும் மனிதர்களைப் பார்த்து, நாம் ஏன் சாப்பிடுகிறோம் என்று கேட்டுப் பாருங்கள்.

நாம் ஏன் உண்கிறோம்?

சாப்பிட அலையும் மனிதர்களுக்குத் தாங்கள் ஏன் சாப்பிடுகிறோம் என்பதே புரியவில்லை, புரிவதில்லை.

வயிறு கேட்கிறது. அதை நிரப்புகிறோம் என்பார்கள் சிலர்.

சாப்பிடுவதற்கு ஆசையாக இருக்கிறது. அதனால் சாப்பிடுகிறோம் என்பார் சிலர்.

சாப்பிடும் பொழுது மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, புத்துணர்ச்சி ஏற்படுகிறது, அதனால்தான் சாப்பிடுகிறோம் என்பார்கள் சிலர்.

இன்னும் சிலர் உயிர் வாழ்வதற்காகச் சாப்பிடுகிறோம் என்பார்கள். இன்னும் சிலர் சாப்பிடுவதற்காகவே உயிர் வாழ்கிறோம் என்பார்கள்.

எதுதான் உண்மை?

'உயிர் வாழ்வதற்காகத்தான் உண்ணுகிறோம்.'

உண்பது ஒரு அத்தியாவசியமானதாக உள்ளது.

அப்படியென்றால், உணவு எப்படி உதவுகிறது என்ற கேள்வி எழுகிறதல்லவா?

உணவு உட்கொண்ட முறை

ஒரு நாளைக்கு எத்தனை முறை உண்ணலாம் என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்பவர்களும் உண்டு.

அதற்குப் பதில் அளிப்பது போல, அன்றே கூறிப் போயிருக்கின்றார்கள் நமது முன்னோர்கள்.

"ஒருவேளை உண்பவன் யோகி. இரு வேளை உண்பவன் போகி. மூன்று வேளை உண்பவன் ரோகி."

இயமம் நியமத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிகள் ஒரு வேளைமட்டும் உண்டு, இறைவனைப் பற்றிய தியானத்தில் இருப்பதால், அவர்களுக்குத் தேவையாயிருந்தது ஆன்ம பலம். அதனாலேயே பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்கள். இவர்களுக்கு உயிர் வாழ, கொஞ்சம் உணவு தேவைப்பட்டது. அவ்வளவுதான்.

இரண்டுவேளை உண்பவன் போகி, அதாவது இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் இரண்டுவேளை உண்டால் போதும் என்று ஏற்படுத்திய கொள்கை இது.

மூன்றுவேளை உண்பவன் ரோகி, ரோகத்திற்கு அதாவது நோய்க்கு ஆளாகுபவன் என்பது இதன் பொருள்.

மூன்றுவேளை உண்டாலே நோய் வரும் என்கிற பொழுது, காலையில் விழித்தது முதல் இரவு உறங்கும் வரை எதையாவது தின்றுகொண்டே இருக்கின்றார்களே இந்தக் காலத்தில். அது எப்படி! அதனால்தான் பெயர் இல்லா நோய்களெல்லாம் இன்று மக்களைப் பேயாய் ஆட்டிக்கொண்டு, பிரபலமாக விளங்குகின்றனவோ!

ஆகவேதான், உணவு முறையிலும், உண்ணும் முறையிலும் நமது முன்னோர்கள் ஒரு வரன்முறையைப் பின்பற்றி வந்தனர் போலும்.

ஒரு மேல்நாட்டுக்காரன், தமிழர் வீட்டு சமையலறைக்குள் நுழைந்து பார்த்த பொழுது, அங்கு வைக்கப்பட்டுள்ள மிளகு, சீரகம், சோம்பு போன்ற பொருட்களைப் பார்த்துவிட்டு, இதென்ன! எல்லாப் பண்டங்களும் மருந்து விவகாரங்களாகவே இருக்கின்றனவே என்று வியந்து கூறினானாம்!

ஏனென்றால், உணவு பெரும்பாலும் விருந்தாகவும், சமயத்தில் மருந்தாகவும் உதவ வேண்டுமேயன்றி, உபத்திரவம் தரக்கூடாது என்கிற வகையில், மருந்தாகவும் இருந்தாக வேண்டும் என்ற உணர்வுடன், உணவு முறையை நமது முன்னோர்கள் அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர்.

உட்கொள்ளுகின்ற உணவு வகைகளாலே ஒருவர் குணாதிசயங்களும், கொள்கைகளும், நடைமுறைகளும் மாறும் என்ற ஒரு கருத்தையும் நாம் எண்ணிப் பார்ப்பது நல்லதாகும்.

## உணவும் உபயோகமும்

நாம் உண்ணும் உணவைப் பற்றி நாம் முதலில் அறிந்துகொள்வோம்.

1. உடலுக்குச் சக்தி அளிக்க வேண்டும்.
2. உடலை உருவாக்கவும் செல்களைப் புதுப்பிக்கவும் உதவ வேண்டும்.
3. உள்ளுறுப்புக்களை இயல்பாக இயக்கி ஒழுங்குபடுத்த வேண்டும்.

உடல் இயக்க சக்தியானது இளமைக் காலங்களில் அதிகமாகச் செலவாகிறது. வயது ஆக ஆக, குழந்தைப் பருவம், இளமைப்பருவம் மாறி முதுமை வர வர செலவாகும் சக்தி குறைகிறது.

எனவே ஒரு சீராகச் சாப்பிடுதல் நல்லது என்று வல்லுநர்கள் அறிவிக்கின்றார்கள்.

இவ்வாறு உடல் இயக்க சக்தி செலவாவது ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவாகும். இந்தப் பகுதியில் நாம் குறிப்பாக அறிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயம் இதுதான்.

உணவு இரசாயன மாற்றம் பெற்று உருவாக்குகிற சக்தி, உடலுக்கு வெப்பம், இயக்கம் போன்ற சக்தியை அளிக்கிறது. இந்த இரசாயன மாற்றத்தால் எழும் அடிப்படை சக்தியை உடல் வெப்பத்திற்காகவும் வேலைக்காகவும் மாற்றிக்கொள்ளும் அற்புதப் பணியைத்தான் உடல் ஒப்பற்ற முறையில் நொடிக்கு நொடி செய்துகொள்கிறது என்பதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயமாகும்.

– முனைவர் எஸ். நவராஜ் செல்லையா

முனைவர் எஸ். நவராஜ் செல்லையா எழுதிய உடல் எடையும் உணவுக் கட்டுப்பாடும் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட 'உணவும் உடலும்' என்னும் கட்டுரை பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இவர் 1937 ஆம் ஆண்டு பிறந்தார். உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர். கடவுள் கைவிடமாட்டார், கால்ப்பந்தாட்டம், விளையாட்டு ஆத்திச்சூடி, விளையாட்டுத்துறை, ஆங்கிலம் தமிழ் அகராதி போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவரது நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

## செயல்பாடுகள்

- பசிக்கும்போது அளவோடு உண்ண வேண்டுமென ஆசிரியர் கூறுவதன் காரணத்தை வகுப்பில் கலந்துரையாடிக் குறிப்பு தயார்செய்யுங்கள்.

## திரிதோஷ உணவு

எதைத் தின்னால் இந்தப் 'பித்தம்' தெளியும்; ஒருவேளை 'வாதக்' குடைச்சலாய் இருக்குமோ!? நெஞ்சில் 'கபம்' கட்டியிருக்கு என்கிற வசனங்கள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக வழக்கொழிந்து வருகின்றன. ஆனால், நம் மூத்த தலைமுறையில் இந்த வரிகள் மிகவும் முக்கியமானவை. இன்னும்கூட பாட்டி தாத்தா இப்படிப் பேசிக்கொள்வதையும், கிராமங்களில் மருத்துவரிடம் தம் நோயை அவர்கள் இப்படிச் சொல்வதையும் பார்க்க முடியும்.

இன்றைய இளைய தலைமுறையான, 'கூகுள்' தலைமுறைக்கு, இது புதுசு. அவர்களுக்கு இந்த 'வாதம், பித்தம், கபம்' எனும் வார்த்தைகள் வரிவிலக்கு பெற்று வந்திருக்கும் தமிழ்ப்பட டைட்டிலோ என்று மட்டுமே யோசிக்க வைக்கும்.

'வாதம், பித்தம், கபம்' அல்லது 'வளி, அழல், ஐயம்' என்னும் மூன்று விஷயங்களும் பாரம்பரிய மருத்துவத்தின் அடித்தளங்கள்.

உடலின் ஒவ்வோர் அசைவையும் நகர்த்தும் உயிர்த் தாதுக்கள் அவை. 'அப்பா அதெல்லாம் சித்தா, ஆயுர்வேத டாக்டர்கள் சமாச்சாரமாச்சே.. நமக்கெதுக்கு?' என நகர வேண்டாம். இந்த வாதம், பித்தம், கபம் குறித்த அடிப்படை அறிவு நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். முன்பு இருந்தது. 'ஐயோ. ஐஸ்கிரீமா? த்ரோட் இன்ஃபெக்ஷனாயிடும்! ரோட்டோர பரோட்டாவா..அமீபியாஸிஸ் வந்துடப் போகுது' என்ற அறிவை வளர்க்கும் நாம், 'உருளைக்கிழங்கு போண்டா நமக்கு வேண்டா, அது வாயு கொடுக்கும். வாதக் குடைச்சல் வந்துடும். மழை நேரத்துல தர்பூசணி எதுக்கு 'கபம் கட்டிக்க போகுது..' என்கிற மாதிரியான நம் தினசரி உணவும் அது அதிகரிக்க அல்லது குறைக்க வைக்கும் உடலின் இந்த மூன்று முக்கிய விஷயங்கள் குறித்த அறிவும் தெரிந்திருக்க வேண்டும்.

'முத்தாது' என்று தமிழ்ச் சித்தத்திலும், 'த்ரீதோஷா' என்று ஆயுர்வேதத்திலும் பேசப்படும் இந்த மூன்று விஷயத்தைத்தான் "மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று" என்று நம் திருவள்ளுவர் நோயின் அடிப்படையைச் சொல்லியிருக்கிறார்.

**வாதம்**

இது, நம் உடலின் இயக்கத்தை, தசை, மூட்டுக்கள், எலும்பு இவற்றின் பணியை, சீரான சுவாசத்தை, சரியான மலம் கழிப்பதை எல்லாம் பார்த்துக்கொள்ளும். பித்தம், தன் வெப்பத்தால் உடலைக் காப்பது, ரத்த ஓட்டம், மன ஓட்டம், ஜீரணச் சுரப்பிகள், நாளமில்லாச் சுரப்பிகள் போன்ற அனைத்தையும் செய்வது. கபம், உடலெங்கும் தேவையான இடத்தில் நீர்த்துவத்தையும் நெய்ப்புத்தன்மையையும் கொடுத்து எல்லா பணியையும் தடையின்றி செய்ய உதவியாக இருப்பது. இந்த மூன்றும் சரியான கூட்டணியாகப் பணிபுரிந்தால்தான் 'உடல்' எனும் பார்லிமென்ட் ஒழுங்காக நடக்கும். ஒண்ணு 'காமன் வெல்த்திலும், இன்னொன்று அலைக்கற்றை ஒதுக்கீட்டிலும் சேட்டை செய்தால், நோய்களின் கூச்சலும் குழப்பமும்தான் உடல் எனும் பார்லிமென்ட்டில் மிஞ்சும்.

இந்தக் கூட்டணி ஒழுங்காக வேலை செய்ய உணவு ரொம்ப முக்கியம். மனமும் பணியும்கூட கூட்டணிப் பணிக்கு அவசியமானவை. ஒருவருக்கு மூட்டு வலி உள்ளது. கழுத்து வலி எனும் ஸ்பாண்டிலைஸிஸ் உள்ளதென்றால் வாதம் சீர்கெட்டு உள்ளது என்று பொருள். இந்த வியாதிக்காரர்கள் வாதத்தைக் குறைக்கும் உணவைச் சாப்பிட வேண்டும். புளி, உருளைக்கிழங்கு கொண்டைக் கடலை, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, வாழைக்காய், கொத்தவரை, காராமணி, குளிர்பானங்கள் செரிமானத்துக்குச் சிரமம் தரும். மாவுப்பண்டங்கள் வாயுவைத் தரும், வாதத்தைக் கூட்டும். மூட்டுவலிக்காரர், மலக்கட்டு உள்ளோர், ஆஸ்துமாவில் அதிகம் அவதிப்படுவோர் இந்த உணவைக் கூடியவரை தவிர்க்க வேண்டும். வாயுவை வெளியேற்றும் லவங்கப்பட்டை, மிளகு, புதினா, பூண்டு, சீரகம்,

### அடுக்குத்தொடர்

சில சொற்கள் அடுக்கி வருவதுண்டு. இவ்வாறு அடுக்கி வரும் சொற்கள் தனித்து நின்றாலும் பொருள் தருமானால் அது அடுக்குத்தொடர் எனப்படும்.

எ.டு. : விடு விடு.
பாம்பு பாம்பு.

வருக வருக / தீ தீ தீ / இத் தொடர்களில் வரும் சொற்கள் விடு, பாம்பு, வருக, தீ எனத் தனியாக நின்றாலும் பொருள் தருகின்றன.

### இரட்டைக்கிளவி

சில சொற்கள் அடுக்கி வந்தால் மட்டுமே பொருள் தரும்; தனித்து நின்றால் பொருள் தருவதில்லை.

இவ்வாறு வரும் தொடர்களை இரட்டைக் கிளவி என்பர்.

எ.டு. : வளவள, குளுகுளு, படபட, மளமள

இத்தொடர்களில் வரும் வள, குளு, பட, மள என்பவைத் தனித்து நின்றால் பொருள் தருவதில்லை. அடுக்கி வந்தால் மட்டுமே பொருள் தருகின்றன.

### உவமையணி

ஒன்றை அதன் தன்மை கொண்ட மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும். உவமையில் உவமானம், உவமேயம் என இரு பகுதிகள் அமையும். எது உவமிக்கப்படுகிறதோ அது உவமேயம்: எதனுடன் உவமிக்கப்படுகிறதோ அது உவமானம். உவமேயத்தையும் உவமானத்தையும் இணைக்க அவற்றின் இடையே ஓர் இணைப்புச் சொல் இடம்பெறும். இது உவமை உருபு எனப்படும். போல, அன்ன. ஒப்ப, புரைய, மான போன்றவை சில உவம உருபுகள்.

'பால் போன்ற நிலா' என்பதில் பால் – உவமானம்; நிலா உவமேயம்: போன்ற உவமை உருபு.

எ.டு.: "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை".

முடக்கறுத்தான் கீரை, வாய்விடங்கம் ஆகியவற்றை உணவில் சேர்ப்பது வாதத்தைக் குறைத்திட உதவும்.

**பித்தம்**

இது அதிகரித்தால் அஜீரணம் முதல் டிப்ரஷன் வரை பல பிரச்சினை வரக்கூடும். அல்சர், ரத்தக்கொதிப்பு, ஆரம்பநிலை மதுமேகம் என பித்த நோய் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இன்றைய (நவீன) வேகமான வாழ்வியலில் பெருகும் பல நோய்க்கு இந்தப் பித்தம் ஒரு முக்கியக் காரணம். நாம் இப்போது மனசைக் கல்லில் அடித்து துவைச்சுக் காயப்போடும் வேகத்தைத்தானே விரும்புகிறோம்! பித்தம் அதிலும் அதிகம் வளர்கிறது. பித்தத்தைக் குறைக்க உணவில் காரத்தை, எண்ணெயைக் குறைக்க வேண்டும். கோழிக்கறி கூடவே கூடாது. கோதுமைகூட அதிகம் சேர்த்தால் பித்தம் கூடும். அரிசி அந்த விஷயத்தில் சமத்து. (என்ன கொஞ்சம் அளவோடு) அரிசியின் சட்டையை அதிகம் கழட்டாமல் (கைக்குத்தல்) சாப்பிடணும். கரிசலாங்கண்ணிக் கீரை, கறிவேப்பிலை, சீரகம், தனியா, எலுமிச்சை, மஞ்சள், இஞ்சி என இவையெல்லாம் பித்தம் தணிக்கும். பித்தம் குறைக்க கிச்சன் கவனம் மட்டும் போதாது. மனம் குதூகலமாக இருப்பது

அவசியம். இன்றைக்கு, சர்க்கரை வியாதி பெருக பலரும் அதிக அரிசி உணவைக் காரணமாகச் சொல்கிறோம். அளவுக்கு அதிகமான மனப்பளு, மனஅழுத்தம்தான் அதைவிட முக்கியக் காரணங்களாகின்றன.

**கபம்**

சளி, இருமல், ஆஸ்துமா, மூக்கடைப்பில் இருந்து கபத்தால் வரும் நோய்கள் பல. பால், இனிப்பு, நீர்க்காய்கறிகளான தர்பூசணி, மஞ்சள் பூசணி, சுரைக்காய், பீர்க்கங்காய், வெள்ளரி, குளிர்பானம், மில்க் ஸ்வீட், சாக்லெட் இவையெல்லாம் கபம் வளர்க்கும் காரணிகள். இவற்றை மழைக்காலத்திலும் கோடைக்காலத்திலும் சுபநேரமான அதிகாலை மற்றும் இரவு நேரங்களிலும் தவிர்க்கலாம். மிளகு, சுக்கு, திப்பிலி, ஆடாதொடை, துளசி, கற்பூரவல்லி, தூதுவளை என இவையெல்லாம் கபம் போக்க உதவும். மாலையில் அலுவல் முடித்து தும்மிக்கொண்டே வரும் வீட்டுக்காரருக்கு, கற்பூரவல்லி பஜ்ஜியும் சுக்குக்காபியும் கொடுத்துப் பாருங்கள். தும்மல் அன்றிரவின் தூக்கத்தைக் கெடுக்காது.

வாதம், பித்தம், கபம் இந்த மூன்று வார்த்தை மந்திரக் கூட்டணியை அச்சுபிச்சு இல்லாமல் காப்பதில், சமையல் கூடத்துக்குச் சந்தேகமில்லாமல் பங்கு உண்டு. அதற்குப் பாரம்பரிய அனுபவம் அவசியம். பாரம்பரிய அனுபவங்கள், பாரம்பரிய சொத்தைக் காட்டிலும் பலம் பொருந்தியவை. அதனை 'மடமை' என்றோ 'பழசு' என்றோ ஒதுக்குவது முட்டாள்தனம். இதைப் புரிந்து பாரம்பரிய அறிவைக் கவனமாகப் பாதுகாப்போம். அது நம்மையும் நம் தலைமுறையையும் பாதுகாக்கும்!

– டாக்டர் கு. சிவராமன்

டாக்டர் கு. சிவராமன் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டம் சாத்தாங்குளத்தில் பிறந்தார். இவர் எழுதிய 'ஏழாம் சுவை' என்னும் நூலிலுள்ள திரிதோஷ உணவு என்னும் கட்டுரை பாடப்பகுதியாக வைக்கப்பட்டுள்ளது. பூவுலகின் நண்பர்கள், 'ஆறு சுவையும் அஞ்சறைப் பெட்டியும்' போன்றன இவரது சிறந்த நூல்கள். 'வாங்க வாழலாம்' என்னும் நூலுக்கு 2004 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த நூலுக்கான விருது கிடைத்துள்ளது.

## செயல்பாடுகள்

- வாதம், பித்தம், கபம் என்னும் உடல்நிலை தொடர்பாக கு. சிவராமன் கூறுவதைக் கலந்துரையாடி விளக்கி எழுதுங்கள்.
- உணவு தினத்தில் சொற்பொழிவாற்றுவதற்கு 'உணவே மருந்து' என்னும் பொருளில் உரை தயார்செய்யுங்கள்.

## திருவிளையாடற் புராணம்

**மணவிருந்து**

கன்னி யர்க்கர சரியினாள்
 கடிமனை புகுந்த
மின்னி யற்சடை மாதவர்
 வேதியர் ஏனோர்
எந்நி லத்துள மன்னவர்
 யாவர்க்கும் முறையே
பொன்னி யற்கலத்து அறுசுவைப்
 போனகம் அருந்தா.

பூசு கின்றவும் உடுப்பவும்
 பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை ஏனவும்
 அம்முறை வழங்காத்
தேச மன்னவர் ஏனையோர்
 செல்லுநர்ச் செலுத்தி
ஈசன் அன்புறு கற்பினாள்
 இருக்குமவ் வேளை

(ஐயா, விருந்துக்கு அமைத்த பெரும் போனகத்தில் பாதிக்கு மேல் உண்பாரற்றுக் கிடக்கின்றதே என் செய்வது என இயம்ப சிவபெருமான்)

சிறிது வாள்நகை செய்து மூ
 வேந்தரிற் சிறந்த
மறுவில் மீனவன் அரும் பெறல்
 மகள் உனக்கு அரிதிற்
பெறுவதேது? வான்தருவும் நின்
 பணி செயப் பெற்றிங்கு
உறைவ நேர்பிறர் திருவெலாம்
 உன்னதே அன்றோ?

அளவி லாதநின் செல்வத்தின்
 பெருக்கைநாம் அறிய
விளைவு செய்தனை போலும், நின்
 விருந்துணப் பசியாற்
களைய டைந்தவ ராகிங்கு
 கணத்தினுட் காணேம்.
தளவ மூரலாய் யாஞ் செயத்
 தக்கதேது? என்றான்.

**சிவபிரான் சிந்தனையும் குண்டோதரன் கூற்றும்**

அடுக்க நின்றகுண் டோதரன்
 அகட்டிடை வடவை

மங்கையர்க்கு அரசியாகிய தடாதகைப் பிராட்டியார், (திருமணத்தின் பொருட்டு) அரண்மனையில் வந்த மின் போலும் ஒளி பொருந்திய சடையையுடைய முனிவரும் மறையோரும் ஏனையரும் எந்நாட்டிலுமுள்ள மன்னவருமாகிய அனைவருக்கும் முறைப்படி பொன்னாலமைந்த கலங்களில் அறுசுவையுடன் கூடிய உணவை உண்பித்தார்.

பூசப்படும் சந்தனம் முதலியவைகளையும் உடுக்கப்படும் பொன்னாடை முதலியவைகளையும் பூணப்படும் இரத்தினாபரணம் முதலிய அணிகலன்களையும் பாக்கும் வாசமும் வெற்றிலையும் பிறவும் ஆகியவற்றையும் அந்த முறையே கொடுத்து பல நாட்டு மன்னர்களுள்ளும் பிறருள்ளும் போகும் குறிப்பினரைப் போக்கி, சோமசுந்தரக் கடவுளாகிய வேந்தனால் அன்பு செய்யப்பட்ட கற்பினையுடைய தடாதகைப் பிராட்டியார் இருக்கும் அப்பொழுதில்.

சிறிது ஒள்ளிய புன்முறுவல் செய்து மூவரசருள் மேம்பட்ட குற்றமற்ற மலையத்துவச பாண்டியனுக்கு அரும்பெரும் புதல்வியாகிய உனக்கு அரிதில் பெறும் பொருள் யாது? கற்பகத் தருவானது விரும்பியவற்றையெல்லாம் தருவது போன்று நீயும் உனது பணி செய்யும் பேற்றினைப் பெற்று இங்கு இருப்பதாயின் ஏனையோர் செல்வம் எல்லாம் உன்னுடையதே ஆகும் அல்லவா.

முல்லை அரும்பு போன்ற பல் வரிசையை உடையவளே! அளவில்லாத உனது செல்வத்தின் மிகுதியை நாம் அறியுமாறு இவ்வாறு செய்தனைப் போலும். உனது விருந்தை உண்ணுவதற்குப் பசியால் களைப்புற்று இருப்பவரை நம் கணத்தினுள் காணவில்லை. ஆகையால் எம்மால் செய்யத்தக்கது யாது எனக் கூறி அருளினான்.

மடுக்க உன்னினான்; அதுவந்து
வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க, ஆலமுண் டாங்குடல்
சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்று, "ஐய. பசியினால்
உயங்கினேன்." என்றான்.

**குண்டோதரன் உண்ட முறை**

படைக்கண் ஏவலர் இறைமகள்
பணியினாற் பசிநோய்
தொடுத்த வன்றனைக் கொண்டுபோய்ச்
சொன்றிமுன் விடுத்தார்;
அடுத்தி ருந்ததே கண்டனர்
அன்னமா மலையை
எடுத்து அயின்றதும் அடிசிலங்கு
இருந்ததுங் காணார்.

(சேடியர் சிலர் அதைக் கண்டு வியந்தனர். சிலர் அஞ்சினர் கண்களை மூடிக்கொண்டு ஓடினர்.)

முரவை போகிய முரிவில்லான்
மூரல், பால்வறையல்,
கருணை திம்பய றடுதுவை.
பல்வகைக் கறிகள்
விரவு தேம்படு பால், தயிர்
இழுது, தேன் வெள்ளம்
வரைவிலாதான மிடாவொடு
வாரிவாய் மடுத்தான்.

பல்ப ழக்குவை, வேற்றுருப்
பண்ணியம், கன்னல்,
மெல்சு வைத்தண்டு, தெங்கிவை
யன்றியும் வேவா
வல்சி, காய்களின் வருக்கமும்
நுகர்ந்துமா றாமல்,
எல்லை தீர்நவ பண்டமும்
எடுத்து வாய் மடுத்தான்.

**நாயகியின் தானம்**

அலங்கல் ஓதிகண் டதிசயம்
அடைந்து, தன் அன்பின்
நலங்கொள் நாயகன் முன்புபோய்
நாணமுட் கிடப்ப,
இலங்கு பூங்குழல் சுவல்மிசை
இறக்கியிட் டெநல்கி
நிலங்கி ளைத்துநின் றாள்நிலை
கண்டனன் நிருபன்.

– பரஞ்சோதி முனிவர்

அருகில் நின்ற குண்டோதரன் வயிற்றில் வடவை தீ புகுமாறு திருஉள்ளம் கொண்டான். அத்தீயானது வந்து வயிற்றிலே காந்துகின்ற பசியாய் தொடர நஞ்சுண்டவன் போல உடல் தளர்ந்து, உயிர் ஒடுங்கி பெருமானே பசியினால் வாடினேன் என்று கூறினான்.

வாள் படை போன்ற கண்களை உடைய ஏவல் மகளிர் தங்கள் இறைவியின் ஏவலால் பசி நோயால் பிடிக்கப்பட்ட குண்டோதரனை அழைத்துக்கொண்டுபோய் சோற்றின் முன் விட்டார்கள். கொண்டுபோய் விட்டவர்கள் குண்டோதரன் சோற்றின் முன் இருந்ததையே கண்டனர். அன்னமாகிய பெரிய மலையை எடுத்து உண்டதையும் அங்கு இருந்த அன்னத்தையும் காணவில்லை.

தவிடு நீங்கிய முதல் முரிதல் இல்லாத வெள்ளிய அரிசியால் ஆகிய அனைத்தையும் பால் பெய்து அட்டதும் வட்டலும் பொரிக்கறியும் இனிய பயற்றோடு கலந்து சமைத்த புளியங்கறியும் ஆகிய பலவகைக் கறிகளையும் பொருந்திய இனிமை பெற்ற பாலும் தயிரும் நெய்யும் தேனுமாகிய இவற்றின் பெருக்கினையும் மற்றும் அளவில்லாத பண்டங்களையும் மிடாக்களோடு வாரி வாரி உண்டான்.

பல கனிக்குவியல்கள், வெவ்வேறு வடிவ பணிகாரங்கள், சர்க்கரை , மெல்லுதற்குரிய சுவையினை உடைய கரும்பு, தேங்காய் ஆகிய இவை அன்றி அரிசியும் காய்களின் கூட்டமும் என்னும் இவற்றையெல்லாம் உண்டும் பசி தீராமையினால் அளவிறந்த நவ தானியங்களையும் வாரி உண்டான்.

மாலையை அணிந்த கூந்தலை உடைய பிராட்டியார் இதனைக் கண்டு தம் அன்பினது நலத்தைக் கொள்ளும் நாயகன் திருமுன் சென்று நாணம் உள்ளத்தில் கிடக்க விளங்குகின்ற பூவை அணிந்த கூந்தலைத் தோளிலே தாழ்த்தித் துவண்டு திருவடியைப் பெருவிரலால் நிலத்தைக் கிளறிக் கொண்டு நின்றார். அந்த நிலையை அரசனாகிய சுந்தரபாண்டியன் கண்டனன்.

## புணர்ச்சி

இரண்டு சொற்கள் சேரும்பொழுது அச்சொற்களில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிக் கூறும் இலக்கணம் புணர்ச்சி இலக்கணம் எனப்படும்.

இவ்வாறு இணையும் சொற்களில் முதலில் நிற்பதை 'நிலைமொழி' எனவும் இரண்டாவது வரும் சொல்லை 'வருமொழி' எனவும் குறிப்பிடுவர்.

வாழை + தண்டு = வாழைத்தண்டு
வாழை – நிலைமொழி
தண்டு – வருமொழி
வாழை – (ஐ) – நிலைமொழி ஈறு
தண்டு – (த்) – வருமொழி முதல்

புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி.

### இயல்பு புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் இணையும் பொழுது அவற்றினிடையே எவ்வித மாற்றமும் இல்லாமல் இயல்பாக இணைவது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

(எ.டு.) வாழை + மரம் = வாழைமரம்

### விகாரப்புணர்ச்சி

சொற்கள் இணையும்பொழுது இடையே மாற்றங்கள் உண்டானால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

விகாரப்புணர்ச்சி மூன்று நிலைகளில் அமையும். அவை, தோன்றல், திரிதல், கெடுதல்.

### தோன்றல்

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவது.

எ.டு. : வாழை + பழம் = வாழைப்பழம் (ப்)

### திரிதல்

நிலைமொழி வருமொழிகளுக்கு இடையே வரும் ஓர் எழுத்து வேறொரு எழுத்தாக மாறி வருவது.

எ.டு. : மண் + குடம் = மட்குடம் (ண் → ட்)
கல் + தாழை = கற்றாழை (ல் → ற்)

### கெடுதல்

நிலைமொழி, வருமொழிகளிலுள்ள எழுத்துகளில் ஒன்று விடுபட்டு வருவது.

எ.டு. : மரம் + வேர் = மரவேர் (ம் – விடுபட்டது)

திருவிளையாடற் புராணம் எழுதியவர் பரஞ்சோதி முனிவர். நம்பாடப்பகுதி மதுரைக் காண்டத்திலுள்ள குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- பாடலில் வரும் கதைப்பகுதியைச் சுருக்கமாக எழுதுங்கள்.
- 'அறுசுவை உணவு உடலுக்கு மிகவும் அவசியமானது' – இப்பாடலின் துணைகொண்டு சிறு குறிப்பு எழுதுங்கள்.
- 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' ஏன்? விளக்கம் எழுதுங்கள்.
- உணவு தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் பாரம்பரிய உணவு விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அது தொடர்பான வெளியீடுகளை எழுதிப் பிரசுரியுங்கள்.

# நாடும் நகரமும்



## சேரநாடு

நீர்வளமும் நிலவளமும் மலைவளமும் மிக்க நாடு சேரநாடு, "திரைசெய் கடலின் பெருவளமும் திருந்து நிலனின் செழுவளமும் வரைசெய் வளமும் உடன்பெருகி மல்குநாடு மலைநாடு" எனச் சேரநாட்டின் வளமையைப் புகழ்வர். கிழக்கே மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் மேற்கே அரபிக்கடலுக்கும் இடைப்பட்டுக்கிடந்த நாடே சேரநாடு. இதனால் இந்நாட்டை மலைநாடு எனவும் கடல்மலைநாடு எனவும் அழைத்துவந்தனர்.

தொண்டி, முசிறி முதலான துறைமுகங்கள் சேரநாட்டின் முக்கிய துறைமுகங்கள். அங்கிருந்து நல்லமிளகு, ஏலம், இஞ்சி போன்ற பொருட்கள் கிரேக்கம், உரோம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன. இந்நிலையில் உலகப் புகழ் வாய்ந்ததாக விளங்கின இத்துறைமுகங்கள்.

இயற்கை வளம் நிறைந்த சேரநாட்டின் தலைநகர் வஞ்சி மாநகரம்.

தலைநகர் வஞ்சியில் தம் அத்தாணி மண்டபத்தில் பட்டத்தரசியுடன் அழகுறக் கம்பீரமாக வீற்றிருந்தான் மூவேந்தர்களில் முதல் நிலையில் கருதப்படுகின்ற சேரமன்னன். அமைச்சர் முதலான அரசியல் சுற்றத்தார்களும் அரண்மனை அதிகாரிகளும் படைத்தளபதிகளும் பார்புகழும் புலவர் பெருமக்களும் அத்தாணி மண்டபத்தில் குறைவறக் கூடியிருந்தனர். அரண்மனை வட்டாரங்களில் பரிசிலர்களும் விருந்தினர்களும் நிறைந்து இருந்தனர். சேரமன்னனின் ஆட்சிச் சிறப்பினையும் வீரத்தினையும் கொடைத் திறனையும் அவனது நாட்டின் இயற்கை அழகினையும் வளத்தினையும் கேட்டறிந்த சோழ, பாண்டியநாட்டுப் புலவர்கள் அவற்றையெல்லாம் நேரில் கண்டறிய வந்திருந்தனர். அவர்களில் பெண்பாற் புலவர்களும் உட்பட்டிருந்தனர்.

"செந்தமிழ்க் காவலர்களே! அறுதொழில் அந்தணர்களே! அமைச்சர்களே! அதிகாரிகளே! என்னருமைக் குடிமக்களே! என அனைவரையும் வரவேற்றான் சேரமன்னன்.

"மன்னர் மன்னன் வாழ்க! மலைநாட்டுக் கோமான் வாழ்க!

சேரன் மாதேவி வாழ்க!" என அவையினர் ஒரே குரலில் சேர மன்னனையும் சேரன் மாதேவியையும் வாழ்த்தினர்.

விருந்தினர்களாக வந்தவர்களில் தமிழகத்தின் மிகவும் புகழ்வாய்ந்த புலவர் ஒருவர் சேரமன்னனின் சிறப்புகளையெல்லாம் புகழ்ந்து பாடினார்.

"மன்னனே! பனம்பூ மாலையையும் வேலைப்பாடுமிக்க கண்ணியையும் பொன்னால் செய்த வீரக்கழலையும் உடையவனே! உன்னை நாங்கள் வாழ்த்துகின்றோம், வணங்குகின்றோம். இமயத்தின் நெற்றியில் விற்குறி பொறித்து வரலாறு படைத்த சேரர் பரம்பரையில் வந்தவனே! பொருநைத் துறைவனே உன் புகழ் ஊரறியும் உலகறியும்.

கரிய பனந்தோட்டினால் கட்டப்பட்ட பனைமாலையினையும் பொன்னால் செய்த வீரக்கழலையும் உடையவர்கள் நின் படைவீரர்கள்.

நினது நாட்டில் கடல் தரும் பொருட்களான முத்தும் பவளமும் மலைதரு பொருட்களான மணி முதலானவையும் முல்லை மற்றும் மருத நிலப் பொருட்களும் மிகுந்து உள்ளன.

உன் நாட்டில் யானைகளுக்குப் பஞ்சமே இல்லை.

வணிகர் குடிகளையும் உழுதுண்ணும் வேளாளர் குடிகளையும் அவர்களைப் பாதுகாக்கும் மேற்குடிகளையும் தாய் தன் சேயைக் காப்பது போல் பாதுகாத்து வருகிறாய். நின் நாட்டில் தேவையான இடங்களிலெல்லாம் நன்றாக மழை பெய்கின்றது. இதனால் நின் நாட்டில் மக்களெல்லாம் பசியும் பிணியும் பகையும் இன்றி வாழ்வாங்கு வாழ்கின்றனர்.

பொன்னால் செய்த பசிய தாமரை மலரைப் பாணர்களுக்கும் அவர்தம் மகளிருக்கு நல்ல ஆபரணங்களையும் வாரி வழங்குகின்றவனே! பரிசில் பெற்று வாழும் பாணர்களுக்கு நீ செல்வமாக இருப்பவன்.

வள்ளலே! வானவர் அன்பனே! நின் அரண்மனையில் வந்து தங்கியவர்களுக்கெல்லாம் பசியை அடக்க, ஆட்டின் இறைச்சி கலந்து சமைக்கப்பட்ட வெண்ணெயில் அரிசியாலான வெண்சோற்றினை வேண்டிய அளவு கொடுக்கின்றாய். நனைந்தும் கிழிந்தும் அழுக்குப் படிந்தும் இருந்த அவர்களின் ஆடைகளை மாற்றி நூறக்கப்படாத நூலால் நெய்யப்பட்ட பட்டாடையை வழங்குகிறாய். அவர்களின் பெண்களுக்குப் பொன்னாலான பல்வேறு அணிகலன்களை அளிக்கின்றாய்.

உன் நாட்டில் வாத்திய இசை அடங்கும் நாட்களோ, விழாக்கள் நடைபெறாத நாட்களோ இல்லை.

மன்னனே! உன் நாட்டில் வாழும் குடிமக்கள் சமையலுக்காகக் கொளுத்தப்படும் தீயை அறிவார்களே தவிர, பகைநாட்டு மன்னர்கள்

கொளுத்தும் தீயை அறியமாட்டார்கள். உன் மக்கள் வண்ணமயமான வானவில்லை அறிவார்களே தவிர பகைவரின் கொலைவில்லை அறியார். உன் நாட்டார் உழுபடையாகிய கலப்பையை அறிவார்களே தவிர கொலைப்படை எதையும் அறியார். தலைவா! உன் நாட்டில் கருவுற்றிருக்கும் பெண்கள் வேட்கை நோயால் மண்ணை விரும்பி உண்பார்களே அன்றி பகைநாட்டு மன்னர்களால் உன் மண்ணைக் கவரமுடியாது. நீ வாழ்வாங்கு வாழ்வாயாக!

சொன்ன சொல் பொய்த்தலை அறியாதவனே! பல ஊழிகள் நீ வாழ்வாயாக!"

புலவரின் வாழ்த்துப் பாடலைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான் சேரமன்னன். தண்டமிழ்ப் புலவரே! தமிழகம் இத்தரணிக்குத் தந்த தன்னிகரற்ற பெரியோரே! உங்கள் தமிழுக்கு நான் தலைவணங்குகின்றேன்; உங்கள் வாழ்த்துக்கு நான் அடிபணிகின்றேன் என்றான் மாமன்னன்.

அமைச்சர் பெருமானே! நாம் எல்லோரும் இப்போது மலைவளம் காணச் செல்லப் போகிறோம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றான் சேரமன்னன். ஆகட்டும் மன்னவா! என்று சொல்லிக் கொண்டு அமைச்சர் புறப்பட்டார்.

அரண்மனை முற்றத்தில் கலைநிகழ்ச்சி ஆரம்பமானது. பலவிதமான வாத்தியக் கருவிகளை இசைத்துக் கொண்டு ஆடவும் பாடவும் செய்து காண்போரை மகிழ்வித்தனர் அக்கலைஞர்கள். எல்லோருக்கும் ஆடை ஆபரணங்களும் உணவும் வழங்கப்பட்டன.

சிறிது நேரத்தில் மணிகள் கட்டப்பட்டதும் அழகான பிடரிமயிரினைக் கொண்டதுமான வெள்ளைக்குதிரைப் பூட்டப்பட்ட மணித்தேர் ஒன்று விற்கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு அரண்மனை வாசலில் வந்து நின்றது. மன்னன் தன் கோப்பெருந்தேவியுடன் தேரில் ஏறினான். புலவர் பெருமக்கள் பின்னால் வந்த தேர்களில் ஏறிக்கொண்டனர். தொடர்ந்து அமைச்சர்கள், அதிகாரிகள், படைவீரர்கள் அனைவரும் சேர்ந்து மன்னன் வாழ்க! மாதேவி வாழ்க! மலைநாடு வாழ்க! என்று சொன்ன வாழ்த்தொலி விண்ணை எட்டியது. எல்லோரும் மலைவளம் காணப் புறப்பட்டனர்.

– மா. நயினார்

இக்கட்டுரையின் ஆசிரியர் மா. நயினார். இவர் பல்கலைக்கழகக் கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். திருவனந்தபுரத்தைச் சார்ந்தவர். இவரது குருதிப்பூ என்னும் சங்ககால வாழ்வியல் நூலிலிருந்து எடுக்கப்பட்டது இப்பாடப் பகுதி.

## செயல்பாடுகள்

- 'நாடென்ப நாடா வளத்தன' – விளக்கக்குறிப்பு எழுதுங்கள்.
- நாட்டு வளம் குறித்து கட்டுரை எழுதுங்கள்.

## கிராமம், நகரம், மாநகரம்

அன்புள்ள மாநகரத்திற்கு!

கிராமம் எழுதும் கடிதம். 'அன்புள்ள' என்று இந்தக் கடிதத்தைத் தொடங்குவதற்குத் தயக்கமாக இருக்கிறது. அடுத்த வீட்டில் வசிப்பவர்கள் பெயரைக்கூடத் தெரிந்துகொள்ளாத உன்னிடம், அன்பையும் மனித நேயத்தையும் எங்ஙனம் எதிர்பார்ப்பது? ஆயினும், அன்பைக் கொல்ல எந்த ஆயுதமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற நம்பிக்கையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். அப்போது நாம் இருவரும் காடாக இருந்தோம். நம்மிலிருந்து பறக்கும் ஒவ்வொரு பறவையும் தங்கள் சிறகுகளில் காட்டின் வாசத்தைச் சுமந்து சென்று மேகங்களில் அடைத்து வைத்தன. மேகங்கள் அவற்றில் நீர்மை தெளித்து, திரும்பவும் காட்டிற்கே அனுப்பி வைத்தன. லட்சோப லட்சம் தேனீக்களின் ரீங்காரங்களுடன், மலை தன் மௌனத்தைக் கலைத்து அருவியாக உரையாடியது. நதிகள் பூக்களின் மகரந்தங்களுடன் பள்ளத்தில் விழுந்து, அணில் குஞ்சுகளும் புள்ளி மான்களும் காட்டெருமைகளும் பாம்புகளும் கொஞ்சம் தள்ளி புலிக்குட்டிகளும் கால் நனைக்க, பொங்கிப் பெருக்கெடுத்துத் தூரங்களைத் தேடிக் காணாமல் போனது.

முதல் மனிதன் உருவானபோது காடு அவனைப் பயமுறுத்தியது.

இரண்டாம் மனிதன் உருவானபோது காடு அவனுக்குப் பழக்கமானது.

மூன்றாம் மனிதன் உருவானபோது காடு அவனுக்குக் கற்றுக்கொடுத்தது.

நான்காம் மனிதன் உருவானபோது, காடு அவனிடம் கட்டுப்பட்டது.

அடுத்தடுத்த மனிதர்கள் உருவானபோது, காடு அவர்களிடம் காயப்பட்டது.

மூச்சுத் திணறிய காட்டின் கடைசி சுவாசத்திலிருந்து நான் கிராமமானேன். தூரத்துக் காடுகளை மேடாக்கி, நீ நகரமானாய். நகரங்களின் சுவர்கள் விதைகளாய் விழுந்து கம்பிகளுடன் வளர்ந்தபோது, மாநகரமானாய். ஒரே மரத்திலிருந்து பிரிந்த வேரும் கிளைகளும் நாம் என்பதை, நீ அறிவாயா? என் வேர் மண்ணுக்குள் புதையப் புதைய, உன் கிளைகள் விண்வெளிகளில் அலைந்தன. ஒன்றை மட்டும் உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எத்தனை விஸ்வரூபமாய் விஞ்ஞானம் வளர்ந்தாலும், வேருடன் தொடர்பற்ற கிளைகள் அந்தரத்தில் அலைவது சாத்தியப்படாது.

எங்கள் பறவைகளின் சிறகுகளில், உன் பெட்ரோல் புகை கறுப்பு வண்ணமடிக்கிறது. வழி தப்பிய எங்கள் வண்ணத்துப்பூச்சிகள், உன் கல்லறைத் தோட்டங்களின் மஞ்சள் பூ மீது ஹாரன் சத்தத்துடன் இளைப்பாறுகின்றன.

எங்கள் நதிகளின் ஊற்றுக் கண்களில் உன் தொழிற்சாலையின் சாயக்கழிவுகள், நீரற்ற நதிகளின் அடி ஆழத்தில் மணல் லாரிகளும்... மண்வெட்டும் சத்தங்களும்...

எங்கள் காய்கறித் தோட்டங்களில் ரசாயன உரங்களின் உப்புக்காற்று, எங்களைச் சுற்றி ரசாயனக் காற்று, ரசாயன முத்தம், ரசாயன மனிதன்.

எஞ்சியிருக்கும் எங்கள் காற்று, எங்கள் கலாசாரம், கண்ணீர்த்துளி, எங்கள் களிப்புகள் இவற்றின் மேல் உன் கறுத்த நிழலின் தடயங்களை விட்டுச் செல்லாதிருப்பாயாக...

காட்டுப் பிரியத்துடன்,
கிராமம்

அன்புள்ள கிராமத்திற்கு,

மாநகரம் எழுதுவது, உன் கடிதம் இரண்டு நாட்கள் கழித்து கையில் கிடைத்தது. நான் உனக்கொரு இணையதளம் தயாரித்துள்ளேன். அதன் முகவரி www.கிராமம்.com இதன் வழியே அனுப்பப்படும் இந்தப் பதில் மின்னஞ்சல் அடுத்த பத்து நொடிகளில் உனக்குக் கிடைத்துவிடும். உனக்கும் எனக்கும் இப்படித்தான் இரண்டு நாட்கள், இரண்டு வாரங்கள், இரண்டு மாதங்கள், இரண்டு வருடங்கள், இரண்டு யுகங்கள் என இடைவெளி பெருகிக்கொண்டே இருக்கிறது.

நதி நகர்ந்து வந்தால்தான் கடலை அடைய முடியும். நாகரிகமும் நதியைப் போன்றது. ஒரு நாட்டின் முதுகெலும்பு கிராமம் என்றால், மாநகரமே அதன் மூளையாக இருக்கிறது. மாநகரங்கள் மனித குல வளர்ச்சியின் குறியீடு. 'இயற்கையின் அமானுஷ்யப் பெருவெளிக்கு முன், நான் அற்பமானவன் இல்லை. புள்ளிக்கும் புள்ளியாய் என இருப்பைச் சுருக்க முடியாது' என மனிதன் தன்னைக் காட்டிக்கொள்ள எழுந்தவையே மாநகரங்கள்.

காடு என்பது அமைதி மட்டுமல்ல. நீ காட்டின் அமைதியைப் பிரதிபலிக்கிறாய் என்றால், நான் காட்டின் பரபரப்பையும், போராட்டங்களையும் பிரதிபலிக்கிறேன். முதல் தீயின் தகிப்பும் முதல் மிருகத்திடம் பலியான உயிரிழப்பும் முதல் புயலின் அலைக்கழிப்பும் நம்மைக் குகைகளில் அடைத்தன. காடு ஏற்படுத்திய பயத்தில்தான் காட்டிலிருந்து நான் காணாமல் போனேன். காட்டிலிருந்து தொலைவது என்பதும் காட்டுடன் தொலைவது என்பதும் சாதாரணமானதல்ல. உன்னைப் போலவே எனக்குள்ளும் காட்டின் சுவடுகள் எஞ்சியுள்ளன. எங்கள் கான்கிரீட் வனங்களின் அறைகளில், கண்ணாடித் தொட்டிகளில் இன்னமும் மீன்கள் அலைந்துகொண்டிருக்கின்றன. மாநகரத்துக் குழந்தைகள் பால்யத்தைக் கடக்கையில் நாய்க்குட்டி வளர்ப்பதும், மீன் தொட்டி அமைப்பதும் வேட்டை சமூகத்தின் காட்டு நிழலன்றி வேறு என்ன?

ஓலைச்சுவடிகளின் மூலிகைகளை முன்னேற்றி, நுண் மருத்துவத்தின் நுழைவாயிலில் நிறுத்தியிருக்கிறேன். மாநகரத்தில் இருந்து கிளம்பும் ஒவ்வொரு புகைவண்டியும் கப்பலும் விமானமும் விண்கலமும் ஒளியின் வேகத்தை நெருங்கத் துடிக்கும் விஞ்ஞானத்தின் உக்கிரமான சவால் அல்லவா! சோடியம் விளக்குகளின் மஞ்சள் ஒளி கசிய, கருத்தரங்கங்களும் கலாசாரப் பரிமாற்றங்களும் என்னுள் நடக்கவில்லையெனில் உன் இருப்பு என்பது பூஜ்யங்களுக்கும் பின்னோக்கியே பயணப்பட நேரிடும். $E=mc^2$ எனும் இயற்பியல் சூத்திரத்திற்குப் பின்னால் இருப்பது அணுகுண்டு ஓசை

மட்டுமல்ல, ஐன்ஸ்டீனின் பியானோ இசையும்தான். கிராமம், நகரம், மாநகரம் என எல்லா இடங்களிலும் கடைசி மனிதனின் கண்ணீர்த்துளி இருக்கும் வரை, அன்பின் நதி வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கும்.

அதே காட்டுப் பிரியத்துடன்,
மாநகரம்

பின்புக்கும் பின்பு, காலமற்ற காலத்தில் கிராமமும் மாநகரமும் சந்தித்துக் கொண்டன. கிராமம் சொன்னது, "நான் தாழ்வு மனப்பான்மையையும் தூய அன்பையும் கொண்டு வந்திருக்கிறேன்." மாநகரம் சொன்னது, "நான் தன்னம்பிக்கையையும் தேடல்களின் பதற்றத்தையும் கொண்டு வந்திருக்கிறேன்". இரண்டும் தோளில் கை போட்டுக்கொண்டு, எதிர்காலத்தை நோக்கி நடந்தன.

– நா. முத்துக்குமார்

நா. முத்துக்குமார் 12 ஜூலை 1975 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் என்ற இடத்தில் பிறந்தார். இவர் பாடலாசிரியர், கவிஞர் மற்றும் எழுத்தாளர். 14, ஆகஸ்ட் 2016 இல் காலமானார். தேசிய திரைப்பட விருது, பிலிம் பேர் விருது, தமிழ்நாடு அரசு திரைப்பட விருது, சீமா விருது, தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருதுகள், விஜய் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர். இப்பாடப்பகுதி 'கிராமம், நகரம், மாநகரம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உங்கள் ஊரில் உள்ள கழிவு நீரினை அகற்றக்கோரி மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை மனு எழுதுங்கள்.

## இந்திரவிழா

கண்அகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதைஇருள் படாஅம் போக நீக்கி
உதைய மால்வரை உச்சித் தோன்றி
உலகு விளங்கு அவிர் ஒளிமலர் கதிர் பரப்பி.

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்,
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா

வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்.
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்,
காழியர் கூவியர் கள்நொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்உப்புப் பகருநர்

பாசவர் வாசவர் பல்நிண விலைஞரொடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்,
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்

பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல் பெருக்கிப்
பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்

வழுஇன்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்,
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்,
கோவியன் வீதியும், கொடித்தேர் வீதியும்,

பீடிகைத் தெருவும், பெருங்குடி வாணிகர்
மாட மறுகும், மறையோர் இருக்கையும்,
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்

மகதநன் நாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்துஓங்கு மரபின் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன ஆயினும்

நுண்வினைக் கம்மியர் காணா மரபின.
துயர்நீங்கு சிறப்பின்அவர் தொல்லோர் உதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின, இவைதாம்
ஒருங்குடன் புணர்ந்துஆங்கு உயர்ந்தோர் ஏத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம் அன்றியும்,

வலம்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்,
வஞ்சம் உண்டு மயல்பகை உற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத்து ஆர்எயிறு அழுந்தினர்
கழல்கண் கூளிக் கடுநவைப் பட்டோர்

### நகர்க் காட்சி

புகார் நகர் காலையில் கவின் மிக்கதாக விளங்கியது. காலை ஒளியில் அதன் மாடங்களும் கோபுரங்களும் கோயில் தலங்களும் மற்றும் மன்றங்களும் அழகு பெற்றுத் திகழ்ந்தன.

பட்டும் பொன்னும் அணிகலன்களும் விற்போர் தனிவீதியில் தங்கி இருந்தனர். பண்டங்கள் குவித்து விற்றவர் தெரு கூலவீதி எனப்பட்டது. அப்பம் விற்போர், கள் விற்போர், மீன் விலைபகர்வோர், வெற்றிலை வாசனைப் பொருள்கள் விற்போர், இறைச்சி, எண்ணெய் விற்போர், பொன் வெள்ளி செம்புப் பாத்திரக் கடைகள் வைத்திருப்போர், பொம்மைகள் விற்போர், சித்திரவேலைக்காரர், தச்சர், கம்மாளர், தோல் தொழிலாளர், விளையாட்டுக் கருவிகள் செய்வோர், இசை வல்லவர்கள், சிறு தொழில் செய்பவர்கள் இவர்கள் எல்லாம் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தனர். இந்தப் பகுதி மருவூர்ப் பாக்கம் எனப்பட்டது.

காவற்கணிகையர், ஆடற் கூத்தியர், பூவிலை மடந்தையர், ஏவல் பெண்கள், இசைக்கலைஞர்கள், கூத்தாடிகள் இவர்கள் எல்லாம் ஒருபகுதியில் வாழ்ந்தனர்.

**சித்திர மண்டபம்**

அவன் வடநாடு சென்று வெற்றிகொண்டு திரும்பி வருகையில் பேரரசர்கள் அவனுக்குத் திறைப் பொருளாக மூன்று பொருள்களைத் தந்தனர். ஒன்று 'கொற்றப் பந்தர்'; மற்றொன்று 'பட்டிமண்டபம்'; மற்றொன்று 'தோரண வாயில்'; வச்சிர நாட்டு அரசன் தந்தது கொற்றப்பந்தர், மகத நாட்டு அரசன் தந்தது பட்டிமண்டபம்; அவந்தி வேந்தன் அளித்தது தோரணவாயில். இவை மானுடரால் செய்யப்பட்டவை அல்ல; தேவதச்சன் மயன் செய்து தந்தவை.

மங்கல நெடுங்கொடி வான்உற எடுத்து,
மரகத மணியொடு வயிரம் குயிற்றிப்
பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத்து யாங்கணும்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத்து ஒழுக்கத்து

மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய தோம்அறு பசும்பொன்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொன் படாகை
தூமயிர்க் கவரி சுந்தரச் சுண்ணத்து

மேவிய கொள்கை வீதியில் செறிந்துஆங்கு,
ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்ப்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
இவர்ப்பரித் தேரினர் இயைந்துஒருங்கு ஈண்டி

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்

### ஐம்பெரும் மன்றங்கள்

அந்நகரில் காணத் தகுந்தவை ஐம்பெரும் மன்றங்கள். இவை பல்வேறு சோழர்கள் காலத்தில் இந்திரனால் அளிக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

களவு செய்வோரை அவர்கள் தலையில் களவாடிய பொதிகளை அடுக்கிவைத்துச் சுற்றிவரச் செய்வது 'வெள்ளிடை மன்றம்' எனப்பட்டது. நோய் நொடியால் வாடுவோர் குளத்து நீரில் முழுகி எழுந்தால் அவர்கள் நோய் தீர்ந்த குளம் உடைய மன்றம் 'இலஞ்சிமன்றம்' எனப்பட்டது. பித்தம் பிடித்தவர், நஞ்சு உண்டவர், அரவு தீண்டப் பெற்றவர் இவர்கள் துயர் நீங்கி உயர்வு பெற்ற பகுதி 'நெடுங்கல் நின்ற மண்டபம்' என்று கூறப்பட்டது. தீய ஒழுக்கத்தவர்களைப் புடைத்து உண்டு தண்டித்தது 'பூத சதுக்கம்' எனப்பட்டது. அரசன் நீதி தவறினாலும், மன்றங்கள் தவறான தீர்ப்புகள் வழங்கினாலும் கண்ணீர் உகுத்து அழுது காட்டி அநீதியை எடுத்து உரைத்தது. 'பாவை மன்றம்' எனப்பட்டது. இவை ஐம்பெரும் மன்றங்கள் எனப்பட்டன. இவையும் வியத்தகு காட்சிகள் ஆயின் இவ்விழாவுக்கு வந்தவர் இவற்றைக் கண்டு வியந்தனர்.

### விழா அழைப்பு

வச்சிரக் கோட்டம் என்பது இந்திரன் கோயில். அதில் இருந்த முரசத்தை எடுத்து யானையின் பிடரியில் ஏற்றி வைப்பர். அதன் மீது இருந்து விழாச் செய்தியை ஊருக்கு அறிவித்தனர்.

### நீராட்டு விழா

ஊர்த்திருவிழாக்கள் மற்றும் சிவன், முருகன், பலராமன், திருமால் போன்ற தெய்வங்களின் கோவில்களில் அவரவர் மரபுப்படி பூசைகள் நடத்தினர். தேவர்க்கும், பதினெண் பூத கணங்களுக்கும் அறச்சாலைகளில் அவர்கள் விழா எடுத்தனர். சிறைப்பட்ட பகை மன்னரை அரசன் விடுவித்தான்.

மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்,

நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந்து இருபால்,
அறவோர் பள்ளியும் அறன் ஓம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோர் உரைக்கும் செயல்சிறந்து ஒருபால்,

தமிழில் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயது சிலப்பதிகாரம். மேலும் இக் காப்பியத்திற்குத் தனித்தமிழ்க் காப்பியம் என்ற பெருமையும் உண்டு. இக்காப்பியத்தைப் படைத்தவர் சேரமன்னர் குலத்தைச் சார்ந்த இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் புகார் காண்டத்தில் ஐந்தாவது காதையாகிய இந்திரவிழவூரெடுத்த காதையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது இப்பகுதி.

## செயல்பாடுகள்

- சிலப்பதிகாரம் கூறும் நகரின் சிறப்பினை வருணனைக் குறிப்பாக எழுதுங்கள்.

# ஊரும் தெருவும்



## ஒரு தெருவின் ஆத்ம கதை

மனுஷங்க கதையைக்கூட கேட்க ஆளில்லே, நாதியில்லே, இந்த லட்சணத்தில் வெறும் ஜடப்பொருளான தெருவாவது, கதையாவது அப்படீன்னு மனிதாபிமானிக நெற்றியைச் சுளிப்பதை நான் பார்க்கிறேன்.

சத்தியமாச் சொல்றேன். இது தெருவாசிகளின் கதையல்ல, ஒரு தெருவான என் அசல் கதை; ஒரு தெருவின் சுயசரிதை.

இப்போதைய என் கிடப்பை – பரிதாப நிலையைப் பார்த்து நூற்றாண்டுகளைத் தாண்டி வந்த படுகிழமாய் என்னை நினைத்துக் கொண்டிருப்பீர்கள்.

என் உடம்பு முழுதும் உச்சி முதல் உள்ளங்கால்வரை ஊசி குத்தக்கூட இடம் இல்லாமல் குண்டும் குழிகளும்! சமீபத் தெருக்களில் உள்ள வீடுகள், கடைகள், ஓட்டல்கள், கல்யாண மண்டபங்கள், கசாப்புச் சாலைகள் இங்கெல்லாமிருந்து குப்பைக் கூளங்களின் வண்டிகள் அதிகாலையிலிருந்து ராத்திரி வரையிலும் இங்கே கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருப்பார்கள். தொலைதூரப் பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து பக்கத்துப் பம்பிங் ஸ்டேஷனுக்கு மலைவெள்ளமாய் இருபத்திநாலு மணிநேரமும் பாய்ந்து கொண்டிருக்கும் துர்கந்தக் கழிவு நீரை (நீருடன் அடிக்கடி மிதந்துவரும் சதைப் பிண்டங்களையும் கண்டவர்கள் உண்டு) பாதாளக் குழாய்கள் வழி இங்கே ஸ்லாப் ஒன்றும் இட்டு மூடாத நெடுநீள ஆழமுள்ள சாக்கடையில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். இப்போது வயல்கள் எல்லாம் வீடுகளாகிவிட்ட லட்சணத்தில் சாக்கடை மண்ணாலும் குப்பையாலும் நிரம்பிவிட்டது. முன்பைவிட அதிகமாய்ப் பாய்ந்துவரும் கழிவு நீர் இங்கே வந்ததும் தேங்கி நிற்கும் தடாகமாய் மாறிவிடுகிறது. ஒரு சிறு மழை பெய்துவிட்டால் பின் என்னை, தெருவென்று சொல்வதைவிட சாக்கடை என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

சுத்தத்திற்கும் சுகாதாரத்திற்கும் பெயர்போன இந்தப் பட்டிணத்தில் இப்படியொரு தெருவா? நம்பமுடியாமல் திகைக்கிறீங்களா? வந்தால் நேரிலேயே பார்த்துப் புரிந்துகொள்ளலாமே!

என் பெயர் என்ன தெரியுமா? புத்தன் தெரு...! பழம் பெருமை வாய்ந்த இந்தப் பட்டிணத்தில் என் பிறவி சம்பவித்து ஓர் ஐம்பது ஆண்டுகள்கூட ஆகியிருக்காது. எனவேதான் இந்தப் பெயர்.

எனக்கு இருக்கும் அகலத்தை மேலும் அதிகரிக்கச் செய்வது, தற்போது இருக்கும் வீடுகளை மேலும் அதிகரிக்கச் செய்வது, தற்போது இருக்கும் வீடுகளைக் காலி பண்ண வைத்து என்னுடன் சேர்ப்பது, புதுசாய் கடைகள் கட்டிக் கொடுத்து மார்க்கெட் காம்ப்ளக்ஸ் உருவாக்குவது, வாகனங்கள் பார்க் செய்து நிம்மதியாய் நகர மக்கள் அங்காடிப் பொருளை வாங்கிச் செல்வது மட்டுமல்ல, சாலை பைபாஸ் ரோடு என்று செல்லமாய் நாமகரணம் செய்யப்பட்ட என் விரிந்த நெஞ்சுவழி, நகரத்தின் சந்தடியிலும், வாகன நெரிசலிலும் அகப்படாமலேயே பக்கத்துச் சுற்றுலாமையம், விமானநிலையம், மேலும் வெளியூர்களுக்குச் செல்ல வசதி கொண்ட அருமையான திட்டம் ஒன்று ஏழாண்டுகளுக்கு முன் அந்தச் சுபமுகூர்த்தம், வரலாற்றுச் சிறப்புமிக்க அந்நாள், பொன்னெழுத்துக்கள் பதித்த அந்தப் பளிங்கு கல் நாட்டுவிழா என் சிரசில் கோலாகலமாய் நடந்தேறியது.

இப்போது அந்தக் கல்.

தெரு நாய்களுக்கு ஜல உபாதையைத் தீர்க்க வசதியளித்துச் சேவை செய்கிறது.

செங்கல், மணல் போன்றவைகளை என் நெஞ்சிலேயே குவித்து வியாபாரம் பண்ணும் வாணிபக்காரர்களுக்கும் பயன்படுகிறது.

என் தலைப் பக்கமிருந்து பாதி கழுத்துவரைகூட எட்ட முடியாத சிறிய பகுதியில் அமர்க்களமாய் இராப்பகலாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வைக்கோல் வியாபாரத்தோடு லாரி, பஸ், ஆட்டோ, ஸ்கூட்டர்களையும் பழுது பார்த்தார்கள்.

பக்கத்து மரக்கடைகளின் ராட்சஸ தடிகளை எல்லாம் இப்போ என் நெஞ்சில் சிலவேளைகளில் தீயிடும் வைபவமும் நடைபெறும். இப்படி தீயிட்ட ஒருநாளில்தான், அப்போது பட்டப் பகலில் பளிச்சென்று வெயில் உச்சிப்பொழுதில் கூட பக்கத்தில் நிற்பவர்களையும் கண்ணால் பார்க்க முடியாதவாறு துர்வாடை மிக்க கனமான புகை நீக்கமற நிறைந்திருக்கையில்தான், ஏகதேசம் என் பிறவியின் போதிருந்தே இங்கே வசிக்க விதிக்கப்பட்ட நடுவீட்டு முதியவரைப் பார்க்க சிலர் வந்தார்கள். இவரைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அவர்தான் என் பரிதாப நிலைக்கு ஒரு நல்ல முடிவு தேடி தெருவாசிகளின் கையொப்பங்கள் சேகரித்து, கூட்டுப் புகார் விண்ணப்பம், அதிகாரிகளைப் பார்த்து முறையிடல் எல்லாம் செய்து தோற்றுப் போனவர். அவரைப் பார்க்க வெளிமாகாணங்கள், வெளிநாடுகளிலிருந்துகூட சிலர் வருவதுண்டு. அப்படி அன்று வந்த ஒரு ரஷியப் பெண்மணி மூச்சைடைக்கும் இந்தப் புகை மண்டலத்தில் திக்கித் திணறி, அவர்களை வரவேற்கத் தெருநடையில் வந்து நின்ற இவரிடம் கேட்பதை நானும் கேட்டேன்.

இங்கே சுடுகாடு ஏதாவது இருக்குதா?

ஆமாம், மனிதத்தன்மையின், அரசியல் கண்ணியத்தின், சுத்தத்தின், சுகாதாரத்தின் சுடுகாடு என்று ஓங்கிக் கத்த வேண்டும் போலிருந்தது எனக்கு.

பாவம், இந்த விஷவாயுவில், கொசுக்கடியில் வாழ்ந்து ஆள் ஒன்றுக்குப் பாதியாக்கி, நோயாளியாக்கி விட்டிருந்த அந்த முதியவர் பலகீனமான குரலில் என்ன சொல்லி நம் நாட்டுப் பெருமையை அந்த வெளிநாட்டுப் பிரமுகர்களிடம் நிலை நாட்டினார் என்று எனக்குக் கேட்கவில்லை.

எது எப்படியோ, சில நாட்களுக்குப்பின் நிலைமையை நேரில் பார்வையிட வந்தார் ஒரு பிரமுகர். முதியவர் மீண்டும் புகார் செய்திருக்க வேண்டும்.

அந்த ஆள் போய்விட்டார், ஒன்றும் நடக்கவில்லை. பம்பிங் நடைபெறாத காரணத்தால் வீடுகளில் லாட்டரின் உட்பட்ட அனைத்துக் கழிவு நீரும் பூமிக்கடி குழாயில் போய்ச் சேர வழியின்றி சாக்கடையில் உடைத்துவிடப்பட்டு என் உடம்பிலேயே தேங்கி நிற்கும் கொடுமை. இதன் அடியில் புதைந்து கிடக்கும் மிகப் பழைய குடிநீர் குழாய்க்குள் சுத்தநீர் வருவதும் இப்போது அரிதாகிவிட்டதாம், இதில் சாக்கடை நீர் கலப்பதாகச் சொல்லிக்கிறாங்க. அதெல்லாம் என்னவோ இங்கே வசிக்கிறவங்க ஆண், பெண், குழந்தை குட்டிகள் வேற்றுமையின்றி எல்லோர் முகங்களிலும் ஜீவகளை வற்றி வறண்டுபோய் விட்டதை நித்தம் நித்தம் நான்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே..

நிஜமாகச் சொல்லப்போனால் இந்த ஆத்ம கதையை இங்கே முடிக்க வேண்டியதுதான், அப்படி முடித்துவிட்டால் என்னை இருள்மைவாதி என்று குற்றம் சாட்டி கூட்டிலடைத்து விடுவார்கள். ஆனால் நான் ஒரு சுபநோக்கியாகவே இருக்கப் பிரியப்படுகிறேன். எனவேதான் இதை வெறும் ஒரு புனைகதையாக இல்லாமல் சுயசரிதையாக, தன்வரலாறாகச் சொல்லியிருக்கிறேன். அப்படியாவது சம்பந்தப்பட்டவர்கள் யார் கண்ணிலாவது விழுந்து என்னையும் பாவம் என்னிடத்தில் வசிக்க விதிக்கப்பட்ட இந்த அப்பாவி மனிதர்களையும் பக்கத்து அகலம் குறைந்த என் மூத்த அண்ணா – சாலை பஜாரில் அன்றாட உபயோகச் சாமான்கள் வாங்க வந்த இடத்தில் மிதமிஞ்சிய வாகன நெரிசலில் அகப்பட்டு ஆயுசறாமல் அநியாயமாய் துர்மரணம் எய்திக்கொண்டிருப்பவர்களையும் கரையேற்ற மாட்டார்களா என்ற நப்பாசையில் இல்லையில்லை சுய நம்பிக்கையுடன். நம்பிக்கை? காப்பாற்றுமா?

காத்திருந்துதான் தெரிந்துகொள்ள வேண்டும்.

**– நீல பத்மநாபன்**

நீல பத்மநாபன் ஏப்ரல் 26, 1938 இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். தலைமுறைகள், பள்ளி கொண்டபுரம், பைல்கள், உறவுகள், தேரோடும் வீதி, வெள்ளம், யாத்திரை, இலையுதிர் காலம் போன்ற புதினங்களைப் படைத்துள்ளார். மேலும் நாகம்மாவா?, பிறவிப் பெருங்கடல், வானவீதியில், இரண்டாவது முகம் போன்ற சிறுகதைகளையும் நா காக்க, பெயரிலென்ன போன்ற கவிதை நூல்களையும் எழுதியுள்ளார். இலையுதிர் காலம் என்ற புதினத்திற்கு 2007 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. இப்பாடப்பகுதி 'தேரோடும் வீதி' என்னும் நாவலிலிருந்து எடுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- கதைப் பகுதியின் மையக்கரு, பாத்திரங்கள், மொழிநடை என்ற அடிப்படையில் திறனாய்வு செய்யுங்கள்.
- நாம் வாழும் பகுதியை எவ்வாறெல்லாம் தூய்மையாக வைக்கலாம் என உங்கள் பரிந்துரைகளைப் பட்டியலிடுங்கள்.

## சுத்தம்

இத்தரை மீதில் அத்தனை பேரும்
முத்தொளி வீசும் முழுநிலா போன்று
சுத்தம் ஒன்றை நித்தம் கொண்டு
சுகமாய் வாழ்வதில் சுவர்க்கம் காண்போம்.

உடம்பின் சுத்தம் குளித்தால் கிட்டும்
உளத்தின் சுத்தம் உண்மையால் கிட்டும்
திடமெய் உள்ளத் தூய்மை காத்துத்
தெய்வம் போன்றே தினமும் வாழ்வோம்.

சாலை யோரம் சாக்கடை யென்றே
சமயம் பார்த்து அவ்விடம் நின்றே
காலைக் கடனை முடித்திடல் ஒன்றைக்
கைவிட் டகல்தல் யார்க்கும் நன்றே!

வீட்டைத் துடைத்து வீதியில் எறிவதும்,
விரையும் ஆற்றின் தூய்மை கெடுப்பதும்,
நாட்டைச் சூழ்ந்த நல்வெளி யெல்லாம்
நச்சுப் பொருளால் நிரப்பலும் தவறே!

சாக்கடை யோரம் சகதியைக் கொட்டிச்
சலன நீரின் ஓட்டந் தடுத்து
ஈக்களும் கொசுவும் பெருகிடச் செய்தல்
இழிசெயல் என்று எண்ணிடத் தகுமே!

சருகும் சண்டும் சுள்ளியும் கந்தலும்
சைக்கிள் டயரும் பிளாஸ்டிக் பொருளும்
உருகும் பிறவும் தெருவில் இட்டு
உயிரைக் கெடுக்க எரிக்கா திருப்போம்!

நாசியைக் கெடுக்கத் தூசியைக் கிளப்பும்
நாசச் செயல்களை நாமே தடுப்போம்
ஓசையை எழுப்பி ஓடிடும் வாகன
ஒலியைக் குறைக்க வழிகள் அமைப்போம்.

பிடிப்பவர் கையில் புகைந்திடும் புகைப்பான்
அடுத்தவர் மூக்கை அடைக்கா திருக்கத்
தடுத்திடும் சட்டம் உடனடி இயற்றித்
தரணியை விட்டுப் புகைத்தலை ஒழிப்போம்.

வெற்றிலை மென்று வாயினைக் கொன்று
சுற்றம் முழுதும் துப்பிடல் கண்டும்
பற்றொடு அதன்மேல் பாசங் கொள்ளும்
பாழ்செயல் தடுக்கப் பாய்புலி யாவோம்!

சுற்றங் கெடுத்துத் தூய்மை யழித்தால்
பற்றுங் கிருமிகள் பலவகைப் பெருகித்
தொற்றும் நோய்கள் தோன்றிடச் செய்யுமால்
முற்றும் அசுத்தம் முறியடித் திடுவோம்.

குப்பையைக் கொட்டிக் குவித்திடுஞ் செயலால்
கொலைச்செயல் புரியும் கொசுக்களைப் பெருக்கும்
தப்பினைத் தவிர்த்துப் புவியினைக் காப்பது
தனியொரு மனிதனின் பொறுப்பென உணர்வோம்

உடலின் மாசும் உளத்தின் மறுவும்
ஒன்றாய் நீங்கி நன்றாய் வாழும்
திடனை மனதுள் கொண்டவன் வீட்டைத்
தேடி வருமே தெய்வந் தானே!

இக்கவிதையின் ஆசிரியர் ஞா. சேவியர் சுந்தரராஜ் ஆவார். சுத்தம் என்னும் கவிதை, 'விளையும் பயிர்' என்ற கவிதைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

– ஞா. சேவியர் சுந்தரராஜ்

## செயல்பாடுகள்

- புதுக்கவிதையினை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- கவிதை கூறும் கருத்துகளை விவாதித்துத் தொகுத்து எழுதுங்கள்.

## சுகாதாரச் சீர்திருத்தம்

சமூகத்தைச் சேர்ந்த எந்த ஊர் உறுப்பினரும் அந்தச் சமூகத்திற்குப் பயன்படாதவராக இருப்பதைச் சகித்துக் கொண்டிருக்க என்னால் எப்பொழுதுமே முடிவதில்லை. இருக்கும் குறைபாடுகளை மறைப்பதையோ உடந்தையாக இருப்பதையோ நான் எப்பொழுதுமே வெறுத்து வந்திருக்கிறேன். சமூகத்தில் குற்றங்குறைகளைப் போக்கிக்கொள்ளாமல் அதன் உரிமைகளைப் பெற மாத்திரம் போராடுவதும் எனக்குப் பிடிக்காது. இந்தியச் சமூகத்தின் ஒரு குறையைக் குறித்து அதன்மீது குற்றஞ்சாட்டப் பட்டு வந்தது. குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இல்லாமலும் இல்லை. ஆகையால் நான் நேட்டாலில் குடியேறியது முதல் அக்குற்றச்சாட்டிலிருந்து நம் சமூகத்தை விடுவிக்க முயன்று வந்தேன். இந்தியர் சுத்தத்தைக் குறித்துக் கவலைப்படாதவர்கள்; தங்கள் வீடுகளையும்

சுற்றுப்புறங்களையும் அவர்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதில்லை என்று இந்தியர்மீது குறை கூறப்பட்டது. சமூகத்தில் முக்கியமானவர்களான இந்தியர்கள், தங்கள் வீடு வாசல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முன்னமேயே ஆரம்பித்துவிட்டனர். ஆனால், டர்பனில் பிளேக் ஏற்படக் கூடும் என்று அறிவிக்கப்பட்ட போதுதான் வீடுதோறும் சென்று பார்க்க ஆரம்பித்தோம். இதில் எங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும் என்று நகரசபை உறுப்பினர்கள் விரும்பினர். ஆகவே, அவர்களைக் கலந்து ஆலோசித்து, அவர்கள் அங்கீகாரமும் கிடைத்த பின்னரே எங்கள் வேலையில் இறங்கினோம். ஒத்துழைப்பு, அவர்களுடைய வேலையை எளிதாக்கியதோடு, எங்களுடைய சிரமங்களையும் குறைத்தது. ஏனெனில், தொற்றுநோய்கள் பரவும்போதெல்லாம் நிர்வாக அதிகாரிகள் வெகு சீக்கிரத்தில் பொறுமையை இழந்துவிடுகிறார்கள். கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுகின்றனர். தங்களுக்குப் பிடிக்காதவர்களிடம் அவர்கள் அதிகக் கடுமையாக நடந்துகொள்ளுவதும் பொதுவான வழக்கம். இந்திய சமூகம், தானே வலியச் சுகாதார முறைகளை அனுசரிக்க முற்பட்டதால் இப்படிப்பட்ட கொடுமையில் சிக்காமல் மீண்டது.

ஆனால், எனக்கு வருந்தத்தக்க அனுபவங்கள் சில ஏற்படாது போகவில்லை. உரிமையைக் கோருவதில் சமூகத்தின் உதவியைப் பெறுவது எளிது. ஆனால், சமூகம் தன்னுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அதே சமூகத்தின் உதவியை நான் அவ்வளவு எளிதாகப் பெற்றுவிட முடியாது என்பதைக் கண்டேன். சில இடங்களில் அவமதிக்கப்பட்டேன்.

மற்ற இடங்களிலோ என்னிடம் மரியாதை காட்டினார்கள். ஆனால், நான் கூறிய யோசனைகளை அவர்கள் பொருட்படுத்தத் தங்களைச் சுற்றியுள்ள இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் முயற்சி எடுத்துக்கொள்ளுவது மக்களுக்கு அதிக கஷ்டமாகவே இருந்தது. இந்த வேலைக்கு அவர்கள் பணம் செலவு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கே இல்லை. அளவற்ற பொறுமையினாலன்றி இந்த மக்கள் எந்த வேலையும் செய்யும்படியாகச் செய்வது முடியாத காரியம் என்பதை, மற்றெல்லாவற்றையும்விட இந்த அனுபவங்கள், எனக்கு நன்றாகப் போதித்தன. சீர்திருத்த வேண்டும் என்ற கவலை, சீர்திருத்தக்காரருக்குத்தான் உண்டு. சமூகம் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால், அவர் சமூகத்தினிடமிருந்து எதிர்ப்பையும், வெறுப்பையும், உயிருக்கே அபாயமான கொடுமைகளையும் தவிர வேறு எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. தம் உயிரினும் முக்கியமானது என்று கருதும் ஒரு சீர்திருத்தத்தை மிகவும் பிற்போக்கானது என்றுகூடச் சமூகம் கருதிவிடலாம் அல்லவா?

என்றாலும், இந்தக் கிளர்ச்சியின் பயனாக இந்தியச் சமூகத்தினர் தங்கள் வீடு வாசல்களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை ஒருவாறு கற்றுக்கொண்டார்கள். அதிகாரிகளின் நன்மதிப்பும் எனக்கு ஏற்பட்டது. இருக்கும் குறைகளை எடுத்துக்கூறி உரிமைகளை வற்புறுத்துவதே என் வேலையாக இருந்தாலும், சுயத் தூய்மையைச் சமூகம்

### ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைக் குறித்து வருவது ஆகுபெயராகும். ஆகுபெயர் ஆறு வகைப்படும்

**பொருளாகுபெயர், முதலாகுபெயர்**

'தாமரை பூத்தது' இத்தொடரிலுள்ள தாமரை என்ற சொல், தாமரை என்னும் முழுச் செடியையும் (பொருள்) குறிக்காமல் தாமரை மலரை மட்டுமே குறிக்கிறது. எனவே தாமரை என்பது பொருளாகுபெயர், முதலாகுபெயர்.

**இடவாகுபெயர்**

'ஊர் சிரித்தது'. ஊர் என்பது இடத்தைக் குறிக்காமல் ஊரிலுள்ள மக்களைக் குறிப்பதால் இடவாகு பெயராயிற்று.

**காலவாகுபெயர்**

'கார் அறுத்தான்'. இச்சொல்லில் கார் என்பது காலப்பெயர். கார் காலத்தைக் குறிக்காமல் கார் காலத்தில் விளைந்த நெல்லைக் குறிப்பதால் காலவாகுபெயராகும்.

**சினையாகுபெயர்**

'வெற்றிலை நட்டான்'. வெற்றிலை என்னும் சொல் இலையைக் குறிக்காமல் அதன் கொடியை உணர்த்தியது. எனவே இது சினையாகுபெயராகும்.

**பண்பாகுபெயர்**

'வெள்ளை அடித்தான்'. வெள்ளை என்னும் பண்பின் பெயர் அந்நிறத்தையுடைய சுண்ணாம்பைக் குறிப்பதால் பண்பாகு பெயராயிற்று.

**தொழிலாகுபெயர்**

'வற்றல் உண்டான்'. வற்றல் என்ற தொழிற்பெயர் வற்றுதல் அடைந்த பொருளாகிய உணவைக் குறிப்பதால் தொழிலாகுபெயராயிற்று.

அடைய வேண்டும் என்பதிலும் நான் சிரத்தையுடன் விடாப்பிடியாகவும் இருந்ததை அவர்கள் கண்டார்கள்.

இவ்விதம், தென்னாப்பிரிக்க இந்தியரிடையே நான் செய்து வந்த சேவை, ஒவ்வொரு கட்டத்திலும், சத்தியத்தின் புதிய தன்மைகளை எப்பொழுதும் எனக்குக் காட்டி வந்தது. சத்தியம் என்பது ஒரு பெரிய மரத்தைப் போன்றது. அதை நீர் ஊற்றி நாம் வளர்க்க வளர்க்க அது மேலும் மேலும் கனிகளை அதிகமாகக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. சத்தியத்தின் சுரங்கத்தில் மேலும் ஆழத்தில் போய், நாம் தேடத் தேட அதில் பொதிந்து கிடக்கும், மேலும் மேலும் அதிக விலை மதிப்புள்ள இரத்தினங்களைக் காண்கிறோம். பல வகைகளிலும் சேவை செய்வதற்கு ஏற்படும் வாய்ப்புகளே அந்த இரத்தினங்களாகும்.

இப்பகுதி மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூலினைத் தமிழாக்கம் செய்தவர் ரா. வேங்கடராஜுலு.

## செயல்பாடுகள்

- சுய தூய்மை, சுற்றுப்புறத் தூய்மையின் இன்றியமையாமையைக் காந்தியடிகள் வலியுறுத்துவதற்கான காரணத்தைக் குறித்து குறிப்பு எழுதுங்கள்.
- 'பசுமைக் கேரளம் தூய்மைக் கேரளம்' என்ற தலைப்பில் அக்டோபர் 2 ஆம் தேதி பள்ளியில் நடைபெறும் விழாவில் பேசுவதற்கான சொற்பொழிவுரை தயார்செய்யுங்கள்.
- சுற்றுப்புறத்தூய்மை குறித்து விழிப்புணர்வு முகாம் நடத்துங்கள்.
- குப்பைகளால் அசுத்தமாக இருக்கும் உங்கள் பகுதியினைத் தூய்மை செய்யும் நோக்கில் விழிப்புணர்வு முகாம் நடத்துங்கள்.

## அலகு 4

# மின்னுலகு



அறிவியல் வளர்ச்சியும் ஆடம்பர வாழ்க்கையும் மேம்பட்ட வாழ்வியலுக்கு வழி வகுக்கின்றன என்றாலும் ஒரு விதமான வேகத்தன்மையும் பரபரப்பும் மனித குலத்தின் பாதுகாப்பிற்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன என்ற ஆதங்கம் இல்லாமலில்லை. எதையும் பாதுகாப்பாகக் கவனத்தோடு பயன்படுத்துவோம். இவ்வுலகை உயிர்க்காக்கும் காப்பகமாக மாற்றுவோம்.

# புதுவரவு



## பொய் எல்லாம் மெய்யென்று...

இராத்திரி பதினோரு மணி ஆனாலும் முகநூலில் மும்முரமாகத் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருந்த பைரவியைப் பார்த்துக் கோபத்துடன் அவள் கணவன் சண்முகம், "ஏண்டி எவ்வளவு நேரம் மொபைல் பாப்பே, தாமசம் பண்ணாம சீக்கிரம் வாடி" என்றான்.

"கொஞ்சம் நேரம் கழித்து வரேங்க" என்றாள் பைரவி யூடியூபில் பாட்டுக் கேட்டுக்கொண்டே. அவளுக்குச் சினிமா பாட்டுக் கேட்பது பிடிக்கும். பாடுவது மிகவும் பிடிக்கும். நாளை தன் மியூசிக் பார்ட்னர் ராகுலுடன் பாடுவதற்கு ஒரு பாட்டைத் தேர்ந்தெடுக்காமல் படுக்கைக்குச் செல்ல அவள் மனசு ஒப்பவில்லை.

பைரவிக்குச் சினிமா பாட்டு என்றால் உயிர் அவ்வளவுதான். அவளுடைய ஆருயிர் தோழி லதா ஒரு யோசனை சொன்னாள்.

"ஸ்முலே என்னும் ஒரு செயலி இருக்கிறது. அதை ஸ்மார்ட் போனில் பதிவிறக்கம் செய்த பிறகு பாட்டைப் பாடி ரெக்கார்ட் செய்துவிட்டால் போதும். நண்பர்கள், இசைப்பிரியர்கள் எந்த இடத்திலிருந்தாலும் உன் பாட்டைக் கேட்க முடியும்."

டூயட் சாங் தனியாகப் பாட முடியாது. யாராவது ஆண் கூடச் சேர்ந்து பாட வேண்டுமே. நான் யாரைத் தேடிண்டு போறது" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் பைரவி.

"உன் மனசிலே இருக்கிற ஆசை எனக்குப் புரிகிறது. அதுக்கு ஒரு வழி இருக்கு. என்னுடைய கசின் ராகுல் உன்னைப் போலவே பாட்டுப் பைத்தியம். அவனுக்குக் கல்யாணமாகி குழந்தை இருக்கிறது. அவன் உனக்குக் கம்பெனி

கொடுப்பான். அவனாலே ஒரு பிரச்சினையும் வராது" என்று கூறினாள் லதா.

அவர்கள் இருவரும் சேர்ந்து முதல் பாட்டை அருமையாகப் பாடி பதிவு செய்துவிட்டார்கள். பைரவி அந்தப் பாட்டைக் கேட்பதற்கான இணைப்பைத் தன் நண்பர்கள் அனைவருக்கும் அனுப்பி "நான் பாடிய பாட்டு; அனுபவியுங்கள்" என்று குறுஞ்செய்தி அனுப்பினாள். பாட்டு சுமார்தான். ஆனால் அதை வெளிப்படையாய் சொன்னால் நட்பில் விரிசல் வந்துவிடுமென்பதால் எல்லாரும் பைரவி "சூப்பர்! கீப் இட் அப்" என்று பதில் கொடுத்திருந்தார்கள். பைரவிக்குப் பெருமை தாங்கமுடியவில்லை. இசை உலகில் வெற்றிக் கனியைப் பறித்து விட்டது போல் சந்தோசப்பட்டாள்.

இரண்டாவது பாட்டாகப் பாட ஒரு நல்ல காதல் பாடலைத் தேர்ந்தெடுக்கத்தான் இப்போது யூடியூபில் பாட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறாள்.

கூப்பிட்ட உடனே வராத பைரவியை வெறித்துப் பார்த்தான் சண்முகம். அவளை அதட்டிக் கேட்கும் நிலையிலா அவன் இருக்கிறான்? தான் சம்பாதிப்பது போதாமல் பத்து கொடு நூறு கொடு என்று மனைவியிடம் கையேந்தி நிற்பவன் எப்படி அதட்டி வாழ முடியும்? பெயருக்குத்தான் அவன் குடும்பத் தலைவனே தவிர பைரவிதான் நிஜமாகக் குடும்பத் தலைவி. அவன் நினைவுச்சுழல் பின்னோக்கிச் சென்றது.

கல்லூரி முதல் வருடம் படிக்கும்போது இரண்டு பேரும் காதலித்து வீட்டை எதிர்த்து மணம் செய்தனர். அவனுக்கு ஆங்கிலம் வராது. படிப்பில் சுமார்தான். பைரவி அதிபுத்திசாலி. தன்னை அபிவிருத்தி செய்து கொண்டாள். பிரைவேட்டாக எம்.ஏ., எம்.பி.ஏ படித்து இப்போது தனியார் கம்பெனியில் வேலை செய்கிறாள். சண்முகம், சாப்பிடுவதற்கு ஓட்டலிலிருந்து வீட்டுக்குக் கொண்டுபோய் கொடுக்கும் மெசேஞ்சராக இப்போது வேலை செய்து கொண்டிருக்கிறான். ஆரஞ்சு டீ சர்ட்டைப் போட்டுக்கொண்டு ஓட்டல் வாசலில் காத்திருக்க வேண்டியது அவன் தலையெழுத்தாகிவிட்டது.

ஸ்முலேக்காக (Smule) நாளை பாட அவளால் தேர்ந்தெடுக்கப்பட்ட "சின்ன பெண்ணுதான் வெட்கப்படுது அம்மா அம்மாடி" என்னும் பாடலை முணுமுணுத்துக் கொண்டே கணவன் அருகில் வந்து கையால் அவனை மெதுவாக எழுப்பினாள். கண் விழித்த அவன் யாரடி சின்ன பெண்ணு? உனக்கா வெட்கம் என்று சிரித்தான்.

"பாட்டுங்க.." என்று அவள் சொன்னதைக் கேட்கும் மனநிலையில் அவனில்லை.

அடுத்த நாள் லதாவின் வீட்டுக்குப் பைரவி போகும்போது ராகுல் இருந்தான். "சின்ன பெண்ணுதான் வெட்கப்படுது அம்மா அம்மாடி" என்ற பாட்டைப் பாடி முடித்து விட்டார்கள்.

மெழுகு பொம்மை போல் இருந்த பைரவியை வைத்த கண் வாங்காமல் ஊடுருவிப் பார்த்தான் ராகுல்.

பைரவிக்கு ஒரு மாதிரியாக இருந்தது. "கொஞ்சம்கூட கண்ணியம் இல்லாமல் முறைக்கிறானே" என்று நினைத்தாள்.

### ட்விட்டர், முகநூல், மின்குழுமம்.

**ட்விட்டர் (Twitter)**

ட்விட்டர் என்பது ஓர் இலவச சமூக வலையமைப்பு இந்தச் சேவையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் ஏதுமில்லை.

2006–ஆம் ஆண்டில் ஜேக் டோர்சே என்பவரால் ட்விட்டர் உருவாக்கப்பட்டது.

மிகவும் பிரபலமான உலகளாவிய 50 வலைத்தளங்கள் பட்டியலின் தரவரிசையில் ட்விட்டரும் ஒன்றாக இருக்கிறது. வலைப்பதிவு தரவரிசையில், மாதம் 6 மில்லியன் தனிப்பட்ட பார்வையாளர்களும் மாதம் 55 மில்லியன் பார்வையாளர்களும் ட்விட்டரைப் பார்வையிடுகின்றனர். மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சமூக வலையமைப்பு என்ற தரவரிசையில் ட்விட்டர் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. (www.en.wikipedia.org)

**முகநூல் (Facebook)**

உலகம் உள்ளங்கையில் வந்துவிட்டது. அறிவியல் வளர்ச்சியில் எதிர்பாராத வகையில் இன்று உலகம் விரிந்து, பரந்து வளர்ந்துள்ளது. மனிதர்கள் இன்று செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள வசதிகள் இதனால் கிடைத்துள்ளது. அந்த வகையில் இன்று இணையத்தில் ஃபேஸ்புக் என்ற முகநூல் அறிமுகமாகியுள்ளது.

அமெரிக்காவைச் சார்ந்த மார்க் எலியட் ஜூக்கர் பெர்க் என்பவரால் (Mark Elliot zuckerberg) ஃபேஸ்புக் முதலில் தொடங்கப்பட்டது. இவர்தான் இதன் நிறுவனரும் ஆவார்.

நியூயார்க் நகரிலுள்ள ஒயிட் பிளைன்சினில்தான் மார்க் பிறந்தார். நியூயார்க்கில் உள்ள டாப்ஸ் பெர்ரியில் வளர்ந்தவர். நடுநிலைப்பள்ளியில் படிக்கும்போதே கணினி நிரல்களை உருவாக்குவதில் முனைப்புகாட்டி வெற்றியும் பெற்றுள்ளார். குறிப்பாகத் தகவல் தொடர்புக் கருவிகள் மற்றும் விளையாட்டுத் தொடர்பான நிரலாக்கம் செய்வதில் ஆர்வமாக இருந்துள்ளார். ரிஸ்க் என்ற விளையாட்டின் பதிப்பையும் உருவாக்கினார். மேலும் சினாப்சிஸ் என்ற இசை இயக்கியையும் உருவாக்கினார். பயனர்களின் கேட்கும் பழக்கங்களைக் கற்பதற்குச் செயற்கை நுண்ணறிவில் இது பயன்படுத்தப்பட்டன. மைக்ரோசாஃப்ட் மற்றும் ஏ.ஒ.எல். ஆகிய நிறுவனங்கள் சினாப்சிசை வாங்கி ஜூக்கர்பெர்க்கைப் பணியமர்த்த முயற்சித்தன. ஆனால் அவர் அதற்குப் பதிலாக ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முடிவெடுத்தார்.

திடீரென்று உணர்ச்சி வசப்பட்ட ராகுல் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "அன்பே என் அன்பே" என்றான்.

கையைச் சடக்கென்று உதறினாள் பைரவி. என்ன ஆச்சு உங்களுக்கு?' நீங்க பண்றது நல்லாயில்லை என்றாள்.

"உன் அழகிலே நான் தடுமாறிட்டேன். உன்னை எனக்கு மிகவும் பிடிச்சுப் போச்சு. நாம் ஏன் மிகவும் நெருங்கிய நண்பர்களாக ஆகக் கூடாது" என்றான்.

அர்த்தம் புரிந்த பைரவிக்குக் கோபம் பொங்கியது.

"ஒழுக்கமான வாழ்க்கையை வாழ ஆசைப்படுகிறேன். படிக்காவிட்டால்கூட நல்ல வேலையில் இல்லாவிட்டால்கூட என் கணவர் என் மேல் அன்பைப் பொழிகிறார். மனசில் கள்ளம் இல்லாதவர். அவருக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். நீங்கள் தயவு செய்து போயிடுங்க. இதுவே நம்முடைய கடைசி சந்திப்பாக இருக்கட்டும். இனிமேல் இந்த ஸ்முலே டூயட் பாடுவது என்பதெல்லாம் அறவே வேண்டாம் அதுக்கும் கும்பிடு, உங்களுக்கும் கும்பிடு என்று இருகைகளால் கும்பிட்டாள்.

அதிர்ச்சி அடைந்த ராகுல் வேறு வழியில்லாமல் அவ்விடத்தை விட்டு அவசர அவசரமாக நகர்ந்தான்.

பிப்ரவரி 4, 2004 அன்று பெர்க் அவரது ஹார்வேர்டு ஓய்வறையில் இருந்து ஃபேஸ்புக்கை நிறுவினார். கல்லூரிகள், தனியார் பள்ளிகள் போன்று அங்கும் அனைத்து மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உடைய குழு, ஒளிப்படங்களைக்கொண்டு ஆண்டுமலர் புத்தகத்தை வெளியிடும் நீண்டகால மரபுடைய வழக்கத்தைக் கொண்டிருந்தது. அது ஃபேஸ்புக் என அறியப்பட்டிருந்தது. கல்லூரியில் ஒருமுறை ஜூக்கர் பெர்க்கின் ஃபேஸ்புக்கானது ஹார்வேர்டு – நினைவு என்ற பெயரிலேயே தொடங்கியது. பின்னர் பெர்க் தனது ஃபேஸ்புக்கை மற்ற பள்ளிகளுக்குப் பரப்ப முடிவெடுத்தார். இதை அவரது அறைத் தோழர் டஸ்டின் மோஸ்கோவிட்ச் உதவியுடன் செய்து முடித்தார்.

**நியூஸ்பீடு**

செப்டம்பர் 5, 2006 அன்று ஃபேஸ்புக்கில் நியூஸ் ஃபீடு அறிமுகமாகிறது. நியூஸ் ஃபீடு என்பது வலைதளத்தில் உங்களது நண்பர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் காண்பிக்கும் ஒரு தயாரிப்பு ஆகும். நியூஸ் ஃபீடு தேவையற்றதாகச் சிலர் பார்த்ததற்காகவும் சைபர்ஸ்டால்கிங்கிற்கான கருவிக்காகவும் பெர்க் விமர்சிக்கப்பட்டார்.

**ஃபேஸ்புக் பீகான்**

நவம்பர் 6, 2007 அன்று லாஸ் ஏஞ்சலில் ஒரு நிகழ்ச்சியில் ஒரு புதிய சமுதாய விளம்பர அமைப்பைப் பெர்க் அறிவித்தார். இந்தப் புதிய நிரலின் ஒரு பகுதி பீக்கான் எனப்பட்டது. இது பிற வலைதளங்களில் உலாவி ஃபேஸ்புக் நண்பர்களுக்குத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் இடமளித்தது. இதன் மூலம் ஃபேஸ்புக் நியூஸ் ஃபீடின் வழியாகப் பயனர்களின் நண்பர்கள் பட்டியலிட்ட பொருள்களில் எதையெல்லாம் விற்றார்கள் என்பதைத் தானாகவே அறிய முடிந்தது.

இவ்வாறு வேடிக்கையாக உருவாக்கப்பட்ட முகநூல் இன்று உலகில் இணையம் பயன்படுத்துபவர்களில் 90% நபர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு விரிவடைந்தது. இவ்வாறாக நாம் பயன்படுத்தும் மின்னஞ்சல், வலைப்பதிவு மற்றும் சமூகத்தளங்கள் எவையாக இருந்தாலும் ஒருங்குறி எழுத்துரு நாம் பயன்படுத்தும் கணினியில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

துரை, மணிகண்டன்
தமிழ் இணையப் பயன்பாடுகள்

ஸ்முலேயில் பாடினா நண்பர்கள் உறவினர் மத்தியில் பேரும் புகழும் கிடைக்கும் என்று நம்பினேன். அதனால் கணவனைக்கூட அலட்சியம் செய்தேன். என் கண் திறந்து விட்டது. இனிமேல் ஒழுங்காய் இருப்பேன்" என்று சண்முகம் வருவதற்கு முன்னாலே அவனுக்காகக் காத்திருந்த பைரவியைப் பார்த்து "என்ன ஆச்சரியம்! எனக்காக நீ முன்னே வந்து காத்திருக்கிறாய். இன்று முகநூல் பார்க்கலையா ? என்று வியந்தவனிடம்" பொய்யெல்லாம் மெய்யென்று நினைச்சுட்டேன். இப்போ உண்மையை உணர்ந்திட்டேன். இனிமேல் நீங்கள்தான் எனக்கு முக்கியம். முகநூல், பாட்டுக் கேட்பதெல்லாம் எனக்கு இரண்டாம் பட்சம்தான் என்று பைரவி சொன்னதைக் கேட்டு இன்ப அதிர்ச்சியில் சிலையாகிப் போனான்.

– என். ஸ்ரீதரன்

என். ஸ்ரீதரன் தனியார் கம்பெனியிலிருந்து ஓய்வு பெற்றுத் தற்பொழுது சென்னையில் வசித்து வருகிறார். இவர் எழுதிய, வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது இச்சிறுகதை. இவர் எதிர்வீடு, வாழ்க வளமுடன் என்னும் சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- சிறுகதையிலுள்ள வட்டார வழக்குச் சொற்களைக் கண்டுபிடித்து அவற்றிற்கான தூய தமிழ்ச் சொற்களைக் குறிப்பிடுங்கள்.
- சிறுகதையின் மையக்கரு, மொழிநடை போன்றவை குறித்து விமர்சனம் செய்யுங்கள்.
- சிறுகதையின் சிறப்புகளை விளக்கி ஆசிரியருக்கு வாசகர் கடிதம் எழுதி அனுப்புங்கள்.

## பார்வையிழந்த பயணங்கள்

அதிகாலை ஆரம்பித்து,
நாள் முழுதும் நீளும்
ஒரு கோடைகால
சன்னலோரப் பேருந்துப் பயணம்
அத்தனை சுவாரஸ்யம் நிறைந்தது....

சூரியனின் கூடே,
வழியெங்கும்
சாலையோர மரங்களினூடே,
அடர்ந்த காடுகளினூடே,
பசுமை வயல்வெளிகளினூடே,
வறண்ட தரிசு நிலங்களினூடே, பயணிக்கும் பேருந்து,
ஊர்களின் ஊடே
கடந்து செல்கையில்
உணர்வுகள் ஊற்றெடுக்கும்
மனதினில்........

கடந்து செல்லும் ஒவ்வோர் ஊரும் கொண்டிருக்கும்
தனக்கென ஒரு முகம்....
தனக்கென ஒரு வாசம்...
தனக்கென ஒரு குணம்...

சில நேரங்களில்,
இரயில் பாதை கடக்க நேரிடும்
காத்திருப்பில் விற்கப்படும் வெள்ளரிகளும் பலாக்களும்
கொய்யாக்களும் திராட்சைகளும்
சப்போட்டாக்களும்
சுவை கூட்டும் நம் பயணத்தை

இரயில் பயணத்தின் சுவாரஸ்யம்
கூடவே பயணிக்கும் சக பயணிகள் .....
பேருந்து பயணத்தின் சுவாரஸ்யம்
கடந்து போகும் ஊர்கள்....

எல்லாம் கடந்து மாலையில்
பயணம் முடிகையில்
கண்ட காட்சிகளும்,
கொண்ட உணர்வுகளும்
அள்ளிக் கொடுக்கும்

ஒரு நல்ல புத்தகம் வாசித்த
அனுபவத்தை

அலைபேசிகளுடன்
அடிமைப்பட்டு அடைந்து கிடக்கும்
பயணிகளின் பார்வைகள் புறக்கணிக்கின்றன
கடந்து போகும் காடுகளை
வயல்வெளிகளை,
தரிசு நிலங்களை,
ஊர்களை.....

புறநகர் வழிச்சாலை கொண்ட
ஊர்களெல்லாம்.
இழந்து கொண்டிருக்கின்றன...
தங்களுக்கென்றுள்ள
முகங்களையும்
வாசங்களையும்
குணங்களையும் நினைவுகளையும்.....!

– ம. கிருஷ்ணகுமார்

ம. கிருஷ்ணகுமார் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் 1972 இல் பிறந்தார். கேரளாவில் கண்ணூரிலுள்ள தேசிய ஆடை புனைவியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். குமரிக்கண்டமும் தொல் திராவிடமும் ஆரியமும் 'பல்லவர்கள் மூதாதையர் மரபு', 'அரியும் சிவனும் ஒன்று' போன்ற நூல்களை எழுதியுள்ளார். பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கவிதை 'வெளியிடை பொழுதுகள்' என்ற கவிதை நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- "அலைபேசிகளுடன்
  அடிமைப்பட்டு
  அடைந்து கிடக்கும்
  பயணிகளின் பார்வைகள்
  புறக்கணிக்கின்றன
  கடந்து போகும் காடுகளை
  வயல் வெளிகளை" என்ற கவிதை அடிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- பார்வையிழந்த பயணங்கள் என்ற கவிதை விளக்கும் கருத்துகளை வரிசைப்படுத்துங்கள்.

## நெடிலனும் நுட்பாவும்

கற்போம்.காம் மூலம் கற்றறிந்த யூடியூப் (youtube) இன் பாம்பு விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்த நுட்பா கவலையோடு இருந்தாள். தனது கவலைக்குக் காரணம் அவள் பதிவேற்றியிருந்த யூடியூப் காணொளியை யூடியூப் நீக்கியதோடு மட்டுமல்லாமல், மீண்டும் அதே யூடியூப் கணக்குத் திரும்ப வரவேண்டுமெனில் குறிப்பிட்ட காணொளியைக் கண்டு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என்று கூறியதே.

ஆகையால் அவள் வேறொரு யூடியூப் கணக்கினைத் தொடங்கிவிட்டாள். மாத இறுதியாதலால் அனைத்துப் பதிவிறக்கங்களும் தீர்ந்து இணைய இணைப்பு மெதுவாய்ப் போனது. மெதுவான இணைய இணைப்பில் காணொளி தோன்றுவதற்கு முன் வரும் ஏற்றுவட்டத்தில் அம்புக்குறி விசைகளைத் தட்ட வரும் பாம்பு விளையாட்டுத்தான் அது.

அம்புக்குறி விசைகளைத் தட்டிக் கொண்டே தனது தோழன் நெடிலனுக்குக் கைபேசி அழைப்புவிடுத்தாள் அந்த யூடியூப் நங்கை.

"சொல்லு நுட்பா..." என்று சரியாகப் பதினொரு நொடிகளில் கைபேசியை எடுத்தான் நெடிலன்.

"நெடில் என்னோட யூடியூப் கணக்கு முடங்கிப் போச்சு, எதாவது செஞ்சு சரி பண்ணிக் குடுங்க." அச்சம் கலந்த கெஞ்சலில் கேட்டாள் நுட்பா.

"ஏன் என்னாச்சு..." என்றான் நெடிலன்

"என்னன்னு தெரியல. நீங்கதான் கண்டுபிடிக்கணும்." மீண்டும் கெஞ்சினாள்.

"சரியா... மாலை அஞ்சு மணிக்கு ஒங்க வீட்டுக்கு வர்றேன். அப்போ சரி பண்ணிடலாம்." அலுவலகத்தில் தனது வேலையைப் பார்த்துக்கொண்டே பேசினான் அந்த மென்பொருளன்.

மாலை அஞ்சு மணி.

நுட்பாவின் வீட்டிற்குள் தனது வெஸ்பாவை முடுக்கி நுழைந்தான் நெடிலன்.

"வாங்க நெடில்... " என்று கூட்டிச் சென்றாள் நுட்பா.

"இத மொதல்ல பாருங்க" தனது மடிக்கணினியைக் கொடுத்துவிட்டுக் கட்டளையிட்டாள் நுட்பா சிறுமுறுவலோடு.

"யே... என்ன வந்தவங்களுக்குத் தேநீர் ஏதும் குடுக்காம... ஒடனே வேல பாக்கச் சொல்றீங்களேப்பா?" தனது முழுக்கைச் சட்டையை மடக்கி விட்டுக்கொண்டே அவளது மடிக்கணினியை வாங்கினான் நெடிலன்.

"இதோ... தேநீர் சூடா கொண்டு வர்றேன். என்னோட யூடியூப் கணக்குத் திரும்ப வரணும் அவ்ளோதான்." அவனது மறுமொழிக்குக் காத்திராமல்,

தேநீர் செய்யச் சென்றாள் நுட்பா.

சிரித்துக் கொண்டே அவனுக்குத் தெரிந்த அவளது கடவுச்சொல் கொடுத்து யூடியூப் கணக்கினுள் நுழைந்தான் நெடிலன். அவள் சொன்னது போலவே வந்த காணொளியைப் பார்த்துக் கேள்விகளுக்கு விடையளித்தான்.

ஐந்து மணித்துளிகளில் தேநீர் கொணர்ந்தாள் நுட்பா.

தேநீரும் மடிக்கணினியும் கைகள் மாறின.

"அபாரம்... என்னோட யூடியூப் கணக்குத் திரும்ப வந்திருச்சே..." மகிழ்ச்சியில் கொஞ்சினாள் கொஞ்சலழகி.

மீண்டும் சிரித்துக்கொண்டே, தனது மீசையில் படாமல் தேநீர் அருந்தத் தொடங்கினான் நெடிலன்.

"என்ன பண்ணிங்க நெடில், ம்ம்... சொல்லுங்க" மீண்டும் கேட்டாள் நுட்பா.

"யூடியூப்ல காணொளி பதிவேத்தம் செய்யணும்னா அதுக்குச் சில விதிமுறைகள் உண்டு." தேநீர் உறிஞ்சியபடியே பேசினான் நெடிலன்.

"என்னென்ன?" ஆர்வமுடன் கேட்டாள் நுட்பா.

நீ பதிவேத்தினது ஒரு திரைப்படம். அது தனியார் தொலைக்காட்சியோட காப்புரிமைச் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டது. அத அந்தக் காணொளியோட water hark logo வச்சு தானாகவே யூடியூப் கண்டுபிடிச்சுடும். சில காப்புரிமைச் சட்டங்கள் நெகிழ்தன்மையோட (flexibility) இருக்கும். அப்டி இருந்துச்சுன்னா நம்ம மின்னஞ்சலுக்கு ஒரு செய்தி வரும். அவ்வளவே, அந்தக் காணொளி நம்ம கணக்குலர்ந்து நீக்கப்படாது. "தேநீர்க் குவளையை முன்னால் இருந்த கண்ணாடி மேசையில் வைத்தவாறே செப்பினான்.

"ஆனா ஒங்கணக்குல இருந்தது காப்புரிமைய மீறின செயல். அதுமில்லாம மூணு காணொளியும் ஒரே தனியார் அலைவரிசையோடது. அதுனால காணொளி நீக்கப்பட்ட ஒடனே நீ சரியா யூடியூப் காப்புரிமைச் சட்டத்த தெரிஞ்சுக்கிட்டியான்னு பாக்கறதுக்கு ஒரு காணொளி வரும். அந்தக் காணொளியப் பாத்து அதுக்குக் கீழ அவங்க கேக்கற கேள்விக்கெல்லாம் விடை சொல்லணும். நீ 80 விழுக்காடு மதிப்பெண் எடுத்தாதான் ஒன்னோட யூடியூப் கணக்குத் திரும்பக் கெடைக்கும். இது யூடியூப் விதி. நீ தப்புத்தப்பா விட சொன்னா அது மறுபடியும் மறுபடியும் கேள்வி கேக்கும். இதுதான் ஒங்கணக்குல நடந்தது. புருவமுயர்த்திப் பேசினான் அந்த யூட்யூப் மன்னன்.

"ம்..." தனது உதடுகளைக் கீழேயிறக்கி வாய் பிளந்தாள் நுட்பா.

"இன்னோரு முக்கியமான சேதி. கணக்குத் திரும்ப வந்துட்டதுன்னு மறுபடியும் எதாவது நமது காப்புரிமை இல்லாத காணொளிய ஏத்துனா, நம்ம கணக்கையே யூடியூப் நீக்கிடும்." அவளுக்கு வந்த மின்னஞ்சலைக் காட்டி விளக்கினான் நெடிலன்.

"இப்ப என்னாச்சு?" நுட்பா மையமாக விழித்தபடி கேட்டாள்.

"ஒன்னுமில்ல. அந்தக் குறிப்பிட்ட காணொளி மட்டும் ஒங்கணக்கிலருந்து யூடியூப் நீக்கிடுச்சு. அப்பறம்... ஒன்ன எச்சரிக்க பண்ணியிருக்கு." விடை பகன்றான் தேநீர் அருந்தியவன்.

"அப்ப எதத்தான் நா பதிவேத்தறது. ஏற்கனவே என்னோட 1 டிபி வன்வட்டு தீரப்போகுது" அடுத்த கேள்வி கேட்டாள்.

"ஒன்னோட சொந்த காணொளியெல்லாம் பதிவேத்தம் செஞ்சு வைக்கறதுக்கு நீ எதாவது cloud service பயன்படுத்தலாம். 4shared.com, skydrive அந்த மாதிரி. அவை ஒரு தனி ஆளின் சொந்தத் தரவுகளின் காப்புரிமைய பெறல" என விளக்கினான் நெடிலன்.

"அப்ப நா, யூடியூப்ல எதுவுமே பதிவேத்தம் செய்ய முடியாதா?" தனது மடிக் கணினியைப் பார்த்தவாறே கேட்டாள் நுட்பா.

ம்.. சிரித்துக் கொண்டே தொடர்ந்தான் நெடிலன். "யூடியூப் காணொளிகள் தனித்தன்மை வாய்ந்ததா இருக்கணும். காப்புரிமை இல்லாத பழைய காணொளிகளா இருக்கலாம். காப்புரிமை பெற்ற புதிய காணொளிகளா இருக்கலாம். பயனாளரோட சொந்தச் சரக்காகவும் இருக்கலாம். இங்க சொந்தச் சரக்குங்கறது நம்மோட வன்வட்ல இருக்கறது இல்ல. நாமளே தயாரிச்ச காணொளி.

http://www.youtube.com/t/community guidelines தளத்தில் வந்த செய்திகளைத் தொகுத்து விளக்கினான் தன் தோழியிடம்.

"அப்பாடா.. என்னோட கணக்கை எப்படியோ திருப்பிக் குடுத்துட்டிங்க நன்றி நெடில்." "நம்மளோட சொந்தச் சரக்குக்கும் எதாவது காப்புரிமை இருக்கா?" நன்றி சொன்னவள் திரும்பக் கேட்டாள்.

"ஆமா நம்மளோட காணொளி தனிப்பயனாக (private viewing) இருந்தால் அதை யாரும் சுட்டுவிட (copy) முடியாது. பொதுப்பயனாக இருந்துச்சுன்னா (public viewing). அதை வேறு யாராவது பயன்படுத்தினால் அது காப்புரிமைச் சட்டப்படி குற்றம். சில காணொளிச் சொந்தக்காரர்கள் காப்புரிமைபற்றி கவலைப்படுவது கெடயாது. அதனால அவங்க காணொளிய நாம வணிக நோக்கில்லாம பதிவிறக்கிப் பயன்படுத்தலாம். பொதுவா, காணொளிகளைச் சுட்டு (copy) பதிவேத்தறது தப்பு. "தன் பட்டறிவிலிருந்து சொன்னான் அந்த யூடியூப் வேந்தன்." இன்னும் சேதி வேணும்னா இணையதளத்தில் பாரு என பரிந்துரைத்தான். "ஒனக்கு இதெல்லாம் நல்லாப் புரிஞ்சிருச்சுன்னா, நீயும்கூட யூடியூப்க்கு வேலைக்குப் போகலாம். யூடியூப் பற்றி புதுப்புது செய்திகளை அறிந்தும், தனது யூடியூப் கணக்கினைத் திரும்பப் பெற்றும் பெருமகிழ்ச்சி கொண்ட நுட்பா தனது தோழன் நெடிலனுக்கு விடை கொடுத்தாள்.

– பணியா பிரசன்னா

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பகுதி 'கணினிக் கதைகள் 10 தொகுதி 1' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதைப் பணியா பிரசன்னா அவர்கள் எழுதியுள்ளார். இவர் திண்டுக்கல் மாவட்டம் நி. பஞ்சப்பட்டியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் பால் ஜெயசீலன் நிர்மல் ஆரோக்கியப் பிரசன்னா என்பதாகும். பெங்களூரில் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

## செயல்பாடுகள்

- யூடியூப் குறித்து நெடிலனும் நுட்பாவும் உரையாடிய கருத்தினை விளக்கி எழுதுங்கள்.
- வலையொளி காப்புரிமைகள் குறித்து வகுப்பறையில் விவாதம் நடத்தி பெட்டிச்செய்தி தயாரித்து வெளியிடுங்கள்.
- கீழ்க்காணும் தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
  - பதிவேற்றம்
  - பதிவிறக்கம்
  - காணொளி
  - இணையம்
  - இணைப்பு
  - கைபேசி
  - அலுவலகம்
  - மடிக்கணினி
  - தேநீர்
  - கடவுச்சொல்
  - அலைவரிசை
  - மின்னஞ்சல்
  - வன்வட்டு
  - முகநூல்
- கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
  - Youtube
  - Logo
  - Cloud Service
  - Copy
  - Private Viewing
  - Public Viewing
- மாணவர்களின் கல்விக்கு யூடியூப் வளர்ச்சியா? வீழ்ச்சியா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துங்கள்.
- 'அன்றாட வாழ்க்கையில் சமூக ஊடகங்களின் தாக்கம்' என்னும் தலைப்பில் வானொலியில் உரையாற்ற வானொலி உரை தயாரித்து வகுப்பறையில் வெளியிடுங்கள்.

# புணர்வாழ்வு



## குடித்த கழுதை!

குடி, மனிதரைச் சீரழிக்கும் மிக மோசமான நோய். மதுவுக்கு எதிரான தொடர் போராட்டங்கள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், பாத யாத்திரைகள் ஒரு பக்கம் நடைபெறுகின்றன. மறுபக்கம் பெண்கள் மதுக்கடைகளின் முன்பு திரண்டு போராடுகிறார்கள். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால், யார் என்னவிதமான எதிர்ப்பைக் காட்டியும் ஒரு பலனும் இல்லை என்பதுதான் நிஜம்!

மதுவுக்கு எதிராகப் போராடுகிறவர்களைப் பொதுமக்களே கேலி செய்கிறார்கள். முட்டாள்களாகக் கருதுகிறார்கள். பள்ளி மாணவன் தொடங்கி 80 வயது கிழவர்வரை போதை அடிமைகளாக மாறிய நிலையில், குற்றமும் வன்முறையும் மோசடிகளும்தான் பெருகி வருகின்றன.

புகழ்பெற்ற அமெரிக்க விண்வெளி வீரரும் நிலவில் இறங்கிய இரண்டாவது மனிதருமான ஆல்ட்ரின் மிக மோசமான குடிகாரர். நிலாவுக்குச் சென்று திரும்பிய பின்பு, தன் வாழ்நாளில் பெரும்பகுதியை அவர் குடியிலேயே கழித்தார். குடி அவரை மிக மோசமான மனச்சோர்வுக்கு உள்ளாக்கியது. தனது வாழ்வைக் குடித்தே அழித்துக்கொண்டவர் ஆல்ட்ரின்.

உலகெங்கும் குடிக்கு எதிராக நிறைய கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒரு கதை குடிகாரக் கழுதையைப் பற்றியது. உக்ரேனில் சொல்லப்படும் கதை இது.

வான்கோழி ஒன்றும் கழுதையும் நண்பர்களாக இருந்தன. கழுதை எப்போதுமே தன்னை ஒருவரும் மதிப்பதில்லை; ஓயாமல் வேலை செய்யச்

### எண், இடம், பால்

எண், இடம், பால் என்பது எழுவாயுடன் தொடர்புடையது. தமிழில் ஒரு வினைமுற்றிலிருந்து எண், இடம், பால் இவற்றை அறிய முடியும்.

எ.டு. : வந்தான் – வினைமுற்று
எண் – ஒருமை
இடம் – படர்க்கை
பால் – ஆண்பால்

**எண்**

எண் என்பது ஒருமை, பன்மையைக் குறிக்கும்

அவன் படித்தான் – ஒருமை
அவர்கள் படித்தனர் – பன்மை

**இடம்**

இடம் என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றையும் குறிக்கும்

நான் பாடினேன்,
நான் படிக்கிறேன்,
நான் படிப்பேன் – தன்மை

நீ பாடினாய்,
நீ பாடுகிறாய்,
நீ பாடுவாய் – முன்னிலை

அவன் பாடினான்,
அவன் பாடுகிறான்,
அவன் பாடுவான் – படர்க்கை

இங்கு, ஏன், ஆய், ஆன் என்பன முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை ஒருமை விகுதிகளாக வந்துள்ளன. பன்மைக்கு ஓம், ஈர்/ ஈர்கள், ஆர்கள் என்பன விகுதிகளாக வரும்.

எ.டு.: நாங்கள் வந்தோம்
நீங்கள் வந்தீர்கள்
அவர்கள் வந்தார்கள்

சொல்கிறார்கள். வாழ்க்கையில் எந்த இன்பத்தையும் அனுபவித்ததே இல்லை எனப் புலம்பிக்கொண்டே இருந்தது. ஆனால், வான்கோழியோ எப்போதும் சந்தோஷத்துடன் ஆடிப் பாடியபடி உற்சாகமாக இருந்தது.

கழுதைக்கு நீண்டநாட்களாக விருந்து சாப்பாடு சாப்பிட வேண்டும் என்று ஓர் ஆசை. ஒருமுறை ஒரு பண்ணை வீட்டில் பெரிய விருந்து. கழுதையின் ஆசையை நிறைவேற்றி வைக்க நினைத்த வான்கோழி, அந்த விருந்துக்கு அழைத்துச் சென்றது.

விதவிதமான உணவு வகைகளைக் கண்ட கழுதை, ஆசை ஆசையாகச் சாப்பிடத் தொடங்கியது. அப்போது பண்ணை முதலாளி ஒரு கோப்பையில் மது அருந்திக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் கழுதைக்கும் மது அருந்தும் ஆசை உண்டானது. உடனே, மதுப் போத்தல் ஒன்றை எடுத்து முழுவதையும் குடித்து முடித்தது. போதை தலைக்கேறிய கழுதை, தன்னுடைய உடலைச் சிலிர்த்துக்கொண்டு பாடத் தொடங்கிவிட்டது. பயந்துபோன வான்கோழியோ, "ஏய் கழுதை ! வாயை மூடு" என சத்தமிட்டது.

ஆனாலும் கழுதை அடங்க மறுத்தது. அது இன்னும் கூடுதல் உற்சாகத்தில் தனது கால்களை உதைத்துக்கொண்டு, வாலை ஆட்டியபடி ஆடத் தொடங்கியது. கழுதையின் ஆட்டம்பாட்டத்தில் விருந்துக்கான உணவுப் பாத்திரங்கள் எல்லாம் கவிழ்ந்தன.

போதையில் ஆர்ப்பாட்டம் செய்கிற கழுதையைக் கட்டுப்படுத்த வான்கோழி முயன்றபோது, கழுதை அதை ஓங்கி உதைத்து தள்ளிவிட்டது. அதுமட்டுமல்ல; விருந்துக்கு வந்திருந்த இளம்பெண் ஒருத்தியைக் கட்டிக்கொண்டு ஆடுவதற்கும் கழுதை முயற்சி செய்தது.

அந்தப் பெண் வீறிட்டு அலறினாள். இதைப் பார்த்த பண்ணை ஆட்கள் கழுதையை அடித்து உதைத்து வெளியே துரத்திவிட்டார்கள். அப்படியும் கழுதைக்குப் போதை தெளியவே இல்லை. அது இரவெல்லாம் கத்திக்கொண்டேயிருந்தது. மறுநாள் கழுதையை விருந்துக்கு அழைத்து வந்த காரணத்துக்காக வான்கோழியைப் பண்ணையில் இருந்தே துரத்திவிட்டார்கள்.

போக்கிடம் இல்லாத வான்கோழி காட்டை நோக்கிச் சென்றது. வழியில் அடிபட்டுக் கிடந்த கழுதையைக் கண்டது. காயத்துடன் இருந்த கழுதை,

"நேற்றிரவு எனக்கு என்ன நடந்தது? எதற்காக என்னை இப்படி அடித்திருக்கிறார்கள்?" எனக் கேட்டது.

"நடந்த எதுவுமே உனக்கு நினைவில்லையா...?" என வான்கோழி கேட்டது.

"என்ன செய்தேன் என்று எனக்குத் துளியும் ஞாபகமில்லை!" என்றது கழுதை.

அதைக் கேட்ட வான்கோழி,

"குடியால் நீ கெட்டதோடு, உன்னைப் பண்ணை வீட்டு விருந்துக்கு அழைத்துப்போன என்னையும் வெளியே துரத்தும்படி செய்துவிட்டாய். உன்னோடு நட்பு கொண்டதற்காக உதை வாங்கியதுதான் மிச்சம். இனி, நமக்குள் நட்பு வேண்டாம்!" என விலகிப்போனது வான்கோழி.

உக்ரேனியக் கதையில் 'குடிப்பவனுடன் நட்பே வேண்டாம்' என விலகிப் போகிறது வான்கோழி.

– எஸ். ராமகிருஷ்ணன்

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு என்னும் ஊரில் ஏப்ரல் 13, 1966 ஆம் ஆண்டு எஸ். ராமகிருஷ்ணன் பிறந்தார். உபபாண்டவம், நெடுங்குருதி, உறுபசி, யாமம், துயில், நிமித்தம், மண்டியிடுங்கள் தந்தையே போன்ற புதினங்களையும் வெளியில் ஒருவன், நடந்து செல்லும் நீரூற்று, புத்தனாவது சுலபம், பால்ய நதி, காந்தியோடு பேசுவேன் போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு போன்ற பலதுறை நூல்களையும் எழுதியுள்ளார். சஞ்சாரம் என்ற நாவலுக்காக 2018 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றார். குடித்த கழுதை என்ற பகுதி கடவுளின் நாக்கு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- போதைப் பழக்கத்தால் மனித சமூகம் எவ்வாறெல்லாம் சீரழிகின்றது என்பதை விளக்கும் வகையில் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.
- 'குடித்த கழுதை'. என்னும் கதையினை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

## தீபங்கள் தீ வைக்கலாமா?

நகரங்கள்
நாகரிகமடைந்து விட்டன
தெருவெல்லாம்
அன்றாடம்
அனுமதிக்கப்பட்ட அடிதடிகள்!

சுதந்திர பூமியில்
அவர்கள்
மதுவின் அடிமைகள்!

மதுவுண்டு தள்ளாடும்
அவர்களுடைய
கால்களின் கீழே
மிதிபடுவது
பூமியல்ல –
அவர்களுடைய சொந்த வாழ்க்கை!

மதுக்குவளையை
அவர்கள் காலி செய்கிறார்கள்........

அதற்குப் பதிலாக
அவர்கள் குடும்பத்தாரின்
கண்ணீரை
அது நிரப்பிக்கொள்கிறது.

இந்த மதுக்கடல்
திசைதெரியாமல் தவிக்கின்றன
சில
மனித கப்பல்கள்

எவ்வளவு
பெரிய மனிதர்களெல்லாம்
இவ்வளவு
சிறிய பாட்டில்களுக்குள்
சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள்.......!

புறப்படுவோம் –இவர்களைப்
புட்டிகளிடமிருந்து
விடுதலை செய்வோம்

– மு. மேத்தா

கவிஞரும் எழுத்தாளருமான மு. மேத்தாவின் இயற்பெயர் முகமது மேத்தா என்பதாகும். 1945 ஆம் ஆண்டு பெரியகுளத்தில் பிறந்தார். இவர் வானம்பாடி கவிதை இயக்கம் உருவாக்கிய கவிஞராவார். கண்ணீர் பூக்கள், ஊர்வலம், ஒரு வானம் இரு சிறகு, மனச்சிறகு, கனவுக் குதிரைகள், ஆகாயத்துக்கு அடுத்த வீடு, கனவுகளின் கையெழுத்து போன்ற கவிதைகளையும் கிழித்த கோடு, பக்கம் பார்த்து பேசுகிறேன் என்ற சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்ற கவிதை நூலுக்காக 2006 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. ஊர்வலம் என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து இக்கவிதை எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- மேத்தாவின் கவிதை கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- "புறப்படுவோம் – இவர்களைப்
  புட்டிகளிடமிருந்து
  விடுதலை செய்வோம்" – என்ற கவிதை அடிகளை விமர்சனம் செய்யுங்கள்.
- சர்வதேசப் போதை ஒழிப்புத் தினமான ஜூன் 26 ஆம் தேதி உங்கள் பள்ளியில் போதை ஒழிப்பு உறுதிமொழி எடுப்பதற்கு உறுதிமொழி தயார்செய்யுங்கள்.
- போதைக்கு அடிமையானவர்களுக்கு எவ்வாறு மறுவாழ்வு அளிக்கலாம் என்பது குறித்த கலந்துரையாடல் ஒன்றை வகுப்பறையில் நடத்துங்கள்.
- போதை ஒழிப்பு குறித்த கருத்தரங்கம் உங்கள் பள்ளியில் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் வாசிக்க கருத்தரங்கக் கட்டுரை தயார்செய்யுங்கள்.

## சுஜாதாவின் காதல்கள்

சிகரெட்டாகிய என்னை அடுத்தடுத்து காதல் செய்த எழுத்தாளர் சுஜாதா அவர்கள். என்னைப் பிரேக் அப், அதாங்க கழட்டி விட்டதன் இரகசியம் பற்றி என்ன கூறி இருக்கிறார் எனப் பாருங்கள். அவரது பதிவைப் படித்தால் என்னை விட்டுவிட உங்களுக்கு மிகவும் உதவிகரமாய் இருக்கும்.

"மூச்சு ஆராய்ச்சி நிறுவனம், சென்னை வடகிழக்கு ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில், டாக்டர் நரசிம்மன் அவர்கள் கிரானிக் அப்ஸ்ட்ரக்டிவ் பல்மனரி டிசீஸ் (C.O.P.D – பிடிவாதமான சுவாசத்தடை வியாதி) மனிதனைக் கொல்வதில் மூன்றாவது இடத்திற்கு வந்திருக்கிறது என்று சொன்னார். இதய நோய், புற்றுநோய் போன்றவை மெல்ல மெல்ல குறைந்து வரும்போது ஸி.ஓ.பி.டி முதலிடத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறதாம்.

இந்தக் கூட்டத்தில் புகைப்பதைக் கைவிடுவது எப்படி என்கிற தலைப்பில் உரையாற்ற அழைத்திருந்தார்கள். இதற்கு நான் தகுதியான ஆள்தான். 1986 வரை ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் சிகரெட் பிடித்தவன். அதை ஒரே நாளில் கைவிட்டவன்.

சிகரெட் பழக்கம் தற்செயலாகத்தான் ஏற்படுகிறது. குறிப்பாக வீட்டில் கட்டுப்பாடாக வளர்ந்த இளைஞர்கள் அதை ஒருவிதமான எதிர்ப்புக் காட்டும் மனப்பான்மையாகப் பழகிக்கொள்கிறார்கள்.

இக்கால இளைஞர்கள் பெண் சிநேகிதிகள் முன்னால் ஸ்டைலாகச் சிகரெட் பற்றவைத்து ஒரு இழு இழுத்து விட்டுப் பேசிக்கொண்டே வார்த்தை வார்த்தையாகப் புகையை வெளிவிடுவது ரொம்ப ஸ்டைலாக இருக்கும் என நினைக்கின்றனர்.

என் சிகரெட் பழக்கம் எம்.ஐ.டி (MIT) ஹாஸ்டலில் வெள்ளிக்கிழமை மெஸ்ஸில் டின்னர் கொடுக்கும்போது ஒரு சிகரெட் தருவார்கள். அப்போதெல்லாம் அதன் விலை நாலணா. அதை நண்பனிடம் கொடுத்து அவன் புகை வளையம் விடுவதை வேடிக்கை பார்ப்பேன். ஒரு நாள் நாமே குடித்துப் பார்க்கலாமே என்று தோன்றியதில் பழக்கம் 'பச்சக்' என்று ஒட்டிக்கொண்டது.

சிகரெட் பழக்கம் ஒரு சனியன். லேசில் நம்மை விடாது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் என்னுடன் அது இருந்தது. சில சமயம் சிகரெட் பிடிப்பதற்காகவே எதையாவது சாப்பிடுவேன். கொல்லைப்புறம் போகும்போது சிகரெட் பிடித்தாக வேண்டும்.

சாப்பிட்டவுடன் கட்டாயம் பிடிப்பேன். சிந்தனா சக்தி வேண்டும் என்று வெத்து காரணம் சொல்லி பற்றவைத்து விரலிடுக்கில் வைத்துச் சாம்பலை

சொடுக்குவேன். இதனால் பல சுவைகளை, வாசனைகளை இழந்தேன். இவ்வாறு அது என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தபோது அவ்வப்போது 'சே' என்று தோன்றி நிறுத்திவிடத் தீர்மானிப்பேன். ஒவ்வொரு புதுவருஷமும் தவறாமல் வைராக்கியமாகச் சிகரெட்டை நிறுத்துவேன். அது சில சமயம் பிப்ரவரி வரை நீடிக்கும். சில சமயம் ஜனவரி 2 ஆம் தேதி வரை.

பெங்களூரில் ஒரு முறை செக்கப்புக்குப் போனபோது டாக்டர் பரமேஸ்வரன் "ரங்கராஜன், நீ சிகரெட் பழக்கத்தைக் கைவிட வேண்டும்" என்றார்.

"ஏன்?" என்றேன். "உன் ஹார்ட் சரியில்லை" என்றார்

"எப்போதிலிருந்து விட வேண்டும்?" என்று கேட்டதற்கு "நேற்றிலிருந்து" என்றார்.

"கை விடாவிட்டால் என்ன ஆகும்?" என்றேன். "ஹார்ட் அட்டாக்..., லங் கேன்சர்..., யூ... சூஸ்... நீதான் எத்தனையோ படிக்கிறாயே... உனக்குச் சொல்ல வேண்டுமா" என்றார்.

இந்த முறை பயம் வந்துவிட்டது. ஞாபகம் வைத்துக் கொள்வதற்குத் தோதாக ஆகஸ்ட் பதினைந்தைத் தேர்ந்தெடுத்து பால்காலனி, தெருநாய், ஜிம்மி உள்பட அனைத்து நண்பர்களிடமும், "நான் சிகரெட்டை நிறுத்திவிட்டேன்" என்று அறிவித்தேன்.

இருபது சிகரெட்டிலிருந்து பத்து, பத்திலிருந்து எட்டு என்று குறைப்பதெல்லாம் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வது. முதல் தினம் நரகம், முதல் வாரம் உபநரகம், சிகரெட் இல்லாமல் உலகமே பாழாகி இருக்கும். இந்த இம்சை தேவையா என்ற ஏக்கத்தைச் சமாளிக்க நிறைய ஐஸ்வாட்டர் குடிக்கவேண்டும். சிகரெட்டுக்குப் பதிலாகப் பாக்கு, பான்பராக் என்று புகையிலையின் எந்த வடிவமும் கூடாது. வேறு ஏதாவது வேலையில் கவனம் செலுத்துவது உத்தமமானது. நீங்கள் விட்டுவைத்த புல்புல்தாரா வாசிப்பது, இயற்கை காட்சிகளை வரைவது, கவிதை எழுதுவது போன்ற பயனுள்ள பொழுதுபோக்குகளைத் தொடரலாம்.

உதடுகளில் லேசாக நடுக்கம் ஏற்படும் போதெல்லாம் குளிர்ந்த தண்ணீர் குடித்துவிட்டு "யார் தெச்ச சட்டை.... எங்க தாத்தா தெச்ச சட்டை.... தாத்த தெச்ச சட்டைப் பைல பாத்தா ரெண்டு முட்டை" என்று தொடர்ந்து சொல்ல வேண்டும். ஒரு வாரமானதும் பழக்கம் லேசாக வாலைச் சுருட்டிக் கொள்ளும். நாட்களை எண்ணத் துவங்கலாம். தமிழ்ப்படங்கள் போல வெற்றிகரமான பத்தாவது நாள்... இன்று பதினைந்தாவது நாள்... சூப்பர்ஹிட் ஐந்தாவது வாரம்... இப்படி, மெல்ல மெல்ல நண்பர்களிடம், மனைவியிடம்

பீற்றிக் கொள்ளத் துவங்கலாம். போஸ்டர் கூட ஒட்டலாம். ஆனால், இந்தக் கட்டத்தில் சிகரெட் குடிக்கும் நண்பர்கள் அருகே செல்வதும் மிதப்புக்காகப் பையில் குடிக்காமல் சிகரெட் வைத்துக் கொள்வதும் விஷப் பரீட்சைகள்.

பழக்கத்தை விட்ட நாற்பத்தெட்டாவது நாள் முதல் மைல்கல் தாண்டி விட்டீர்கள். ஒரு சிக்ரெட்டை எடுத்து அதைப் பற்ற வைக்காமல் மூக்கில் ஒட்டிப்பார்த்து விட்டு 'ச்சீ நாயே' என்று சொல்ல முடிந்து, அழுகை வராவிட்டால் பரீட்சையில் பாஸ். இனியெல்லாம் சுகமே.

– சுஜாதா

சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன் ஆகும். 03/05/1935 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தில் பிறந்தார். இவரின் முதல் நாவல் '14 வது மாடி'. என் இனிய இயந்திரா, கரையெல்லாம் செண்பகப்பூ, 24 ரூபாய்த் தீவு, கனவுத் தொழிற்சாலை, கொலையுதிர் காலம், நைலான் கயிறு, நில் கவனி தாக்கு, 14 நாட்கள், ஜன்னல் மலர் போன்ற பல நாவல்களையும் வடிவங்கள், தேவன் வருகை போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். கலைமாமணி விருது, மின்னணு வாக்குப் பதிவுப் பொறியை உருவாக்கிய குழுவில் இருந்ததற்காக வாஸ்விக் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். சுஜாதாவின் இக்கட்டுரை திரு. இராம. கார்த்திக் லெட்சுமணன் எழுதிய புகைப் 'பிடிப்பதை விட்டுவிடுவது சாத்தியமே' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- புகைப்பழக்கத்தை எழுத்தாளர் சுஜாதா எவ்வாறு கைவிட்டார் என்பதை வகுப்பறையில் கலந்துரையாடல் செய்து குறிப்பு எழுதுங்கள்.

# புத்துணர்வு



## பாட்டியார் பெற்ற பரிசில்

ஔவை மூதாட்டியாரின் பெயரை இந்நாளில் அறியாத தமிழர் இரார். ஆனால், செய்திகள் பரவ முடியாத அந்தப் பழைய நாளிற்கூட அப்பெருமாட்டியார் பெயர் தமிழ்நாடு முழுவதும் அறிந்த பெயராகவே இருந்து வந்தது. இப்பெயர் தாங்கிய பெருமாட்டியர் பலர் பல காலத்தில் இருந்திருக்கின்றனர். இங்கு நாம் குறிப்பது சங்க காலம் என்று வழங்கப்படும் காலத்தில் (இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்) வாழ்ந்தவரைப் பற்றியேயாகும். இவரது பெருமை காரணமாகப் பிற்காலத்தில் பலருக்கு ஔவை என்றே பெயரிட்டனர் போலும்! பெயர் வைத்துக்கொண்டவர் அனைவரும் ஔவையாரைப் போலக் கற்றறிவுடையவரும் கவிஞரும் ஆகிவிட முடியுமா? எனவே, பிற்காலத்தில் அப்பெயர் தாங்கிய பலருள்ளும் சிலரே உண்மையில் கவி பாடும் திறம் பெற்றுத் திகழ்ந்தனர். நல்வழி போன்ற நூல்களை இயற்றிய ஔவையார் ஒருவரும் உண்டு.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவை மூதாட்டியார் போக்குவரத்து வாய்ப்பு ஒன்றும் இல்லாத அந்நாளிற்கூடத் தமிழ்நாடு முழுவதையும் சுற்றித் திரிந்துள்ளார். சிற்றரசர், பேரரசர் ஆகிய அனைவருடைய அவைகளிலும் இவர் சென்று வந்துள்ளார்; பலரைப் பற்றியும் பாடியுள்ளார். அகநானூற்றில் நான்கும், குறுந்தொகையில் பதினைந்தும், நற்றிணையில் ஏழும், புறநானூற்றில் முப்பத்து மூன்றும், இவர் பாடிய பாடல்களாகக் காணப் படுகின்றன. சங்க இலக்கியத் தொகுதியாகிய எட்டுத்தொகையில் இவர் பாடல்கள் ஐம்பத்தொன்று. அளவால் அதிகமான பாடல்கள் மட்டும் இவருடையன என்பதற்கில்லை; மிகச் சிறந்த கருத்தமைந்தனவும்,

கற்பனை வளஞ் செறிந்தனவும் உணர்ச்சிப் பெருக்குடையனவும் ஆகும் இவருடைய பாடல்கள். 'நாடாகு ஒன்றோ, காடாகு ஒன்றோ, அவலாகு ஒன்றோ, மிசையாகு ஒன்றோ, எவ்வழி நல்லவர் ஆடவர்? அவ்வழி நல்லை வாழிய நிலனே!' (புறம். 187)

"நாடே, நீ நாடாய் இருந்தாலும், காடாய் இருந்தாலும், பள்ளமாய் இருந்தாலும், மேடாய் இருந்தாலும் சரி! எங்கே நல்லவர்கள் வாழ்கிறார்களோ, அங்கேதான் நீ நல்ல நாடென்று கூறப்படுவாய்!" என்பதே இப்பாடலின் பொருள். இது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்ப் பாடியதுதான். ஆனாலும், இன்று வரை, ஏன் நாளையுங்கூட இதனை மறுக்கவோ, இல்லையென்று கூறவோ இயலுமா? அதியமான் நெடுமான் அஞ்சி என்ற ஒரு சிற்றரசனிடம் பாட்டியாருக்கு அலாதியான பற்று உண்டு.

அதியமான் ஒரு சிறிய நிலப்பரப்பின் அரசனேயாயினும் வள்ளல் தன்மையுடையவன். கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரி வள்ளலைப் போன்ற பரந்த மனப்பண்பு உடையவன். எனவே, ஔவைப் பாட்டியாருக்கு அச்சிற்றரசன்மேல் தனிப்பற்று ஏற்பட்டது.

பல முறை அவனைக் காணச் சென்றுள்ளார் ஔவையார். ஒரு முறை இவரைக் கண்டவுடன் பரிந்து வந்து பெரிதும் உபசரித்தான் அதியமான். நீண்ட தூரம் நடந்து வந்தமையின், பாட்டியார் மிகவும் களைப்படைந்து காணப்பட்டார். உடனே தன் மடியில் மிகவும் பாதுகாப்புடன் வைத்திருந்த நெல்லிக்கனியை எடுத்து, 'இதனை உண்க!' எனக் கொடுத்தான் மன்னன். தமிழ்நாட்டில் நெல்லிக்கனிக்குத்தானா –பஞ்சமா?

உடனே பாட்டியார் அப்பழத்தை வாங்கி உண்டார்; நன்றாகச் சுவைத்து உண்டார்: நாவைச் சப்புக் கொட்டினார். இவரையும் அறியாமல் ஓர் ஐயம் பிறந்தது.

ஔவை : அதியா, நீ தந்த பழம் யாது?

அதியமான் : ஏன், பாட்டியீர் ! நெல்லிப் பழந்தான். சுவைகூடவா தெரியவில்லை?

ஔவை : உலகில் இதுபோல் சுவையைக் கண்டதே இல்லை. அதனாலேதான் சந்தேகப்பட்டுக் கேட்டேன். இது என்ன? சாதாரண நெல்லிப் பழந்தானா?

அதியமான் : நெல்லிப்பழந்தான். ஆனால், சாதாரணப் பழமன்று இது! இப்பழம் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறைதான் பழுக்கும். அதுவும், ஒரே பழந்தான் பழுக்கும். பெரிய இரண்டு மலைகளின் நடுவே உள்ள ஓர் ஆழமான பள்ளத்தில் பழுக்கிறது இது. இதைப் பறிப்பதற்குப் பெரு முயற்சி செய்ய வேண்டும்!

ஔவை : அவ்வளவு பாடுபட்டு, ஏனப்பா இதனைப் பறிக்கவேண்டும்? ஊரிலே எவ்வளவோ நெல்லிப்பழங்கள் கிடைக்குமே?

அதியமான் : கிடைக்கலாம்! ஆனால், இப்பழத்தை உண்பதனால் கிடைக்கும் பயன் அப்பழங்களால் கிடைக்குமா?

ஔவை : நெல்லிப்பழம் உடம்புக்கு மிகவும் நன்மை செய்யும். இப்பழமும் அவற்றுள் ஒன்றுதானே?

அதியமான் : அன்று அன்று ! இப்பழத்தை உண்டவர்கள் மிக நீண்ட காலம் நோய் நொடியின்றி உயிருடன் வாழ்வர். சுருங்கக் கூறினால் ......

ஔவை : ஔவை சொல்லு சொல்லு ! விரைவிற்கூறு !

சுருங்கக் கூறினால்......

அதியமான் : இவ்வுலகிற்குக் கிடைக்கக்கூடிய அமிழ்தமாகும் இது. அமிழ்தம் உண்பவர் அடையும் பயனை இது அடைவிக்கும்.

ஔவை : ஆ! அதியா, நீ என்ன காரியஞ் செய்து விட்டாய்! இவ்வாறு செய்யலாமா ? இவ்வளவு நன்மை செய்யும் பழத்தை நீயல்லவா உண்ண வேண்டும் ? அரசனாகிய நீ இதனை உண்டு நெடுங்காலம் வாழ்ந்தால் குடிகட்கு நன்மை உண்டாகும். கிழவியாகிய யான் உண்டு யாது பயன் விளையப் போகிறது?

அதியமான் : பாட்டியீர், நான் போனால், எத்தனையோ அரசர்கள் உண்டு இவ்வுலகில். நீங்கள் உயிர் வாழ்வதால் தமிழும் தமிழர்களும் ஒருங்கே வாழ முடியும். ஆதலாலேதான் உங்கட்கு இதனைத் தந்து உண்ணச் செய்தேன்.

ஔவை : அதியா, இது என்ன காரியம் ! இதன் தன்மையை என்னிடம் முதலிலேயே கூறியிருந்தால் யான் மறந்துகூட இதனை உண்ணத் துணியேனே ! இன்னது என்று கூறாமல் தந்து என்னை வாழ வைத்தாய்! ஆம் நீல மணிமிடற்று போல நீ வாழ்வாயாக ! என

வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவில் பொலந்தார் அஞ்சி !
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட

சிறுஇலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிக்
காதல் நீங்க எமக்குஈந் தனையே !' (புறம். 91)
என வாழ்த்தினார்.

"வெற்றி பொருந்திய வாட்படையை ஏந்திப் பகைவரைப் போர்க்களத்தில் வெல்லும் வீரக்கழலை அணிந்த நீண்ட கையையுடைய மதுவை உண்ணும் அதியர் தலைவனே, போரிடும் அழகிய வில்லை ஏந்திய அஞ்சியே, பால் போன்ற பிறைச் சந்திரனை நெற்றியில் கொண்ட நீலகண்டனைப் போன்று நீயும் வாழ்வாயாக ! பழைய பெரிய மலையில் ஆழ்ந்த பள்ளத்தில் சிறிய இலையை உடைய நெல்லிப் பழத்தின் இயல்பைப் பற்றி ஒன்றுங் கூறாமல் உன் மனத்துள் அடக்கிக்கொண்டு, சாவு நீங்க எனக்குத் தந்தாய்" என்பது மேல்தரப்பட்ட பாடலின் பொருளாகும்.

– அ. ச. ஞானசம்பந்தன்

அ.ச. ஞானசம்பந்தன் 10 நவம்பர் 1916 ஆம் ஆண்டு திருச்சியிலுள்ள அரசன்குடி என்ற ஊரில் பிறந்தார். தமிழறிஞர், எழுத்தாளர் மட்டுமல்ல இலக்கிய விமர்சகரும் ஆவார். அ.ம.சரவணன், சிவகாமி இவரின் பெற்றோர் ஆவார். இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், இலக்கியக்கலை, அரசியர் மூவர், குறள் கண்ட வாழ்வு, தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார். 1985 ஆம் ஆண்டு கம்பன் புதிய பார்வை என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. இவர் ஆகஸ்ட் 7, 2002 இல் மறைந்தார். இப்பகுதி இவர் எழுதிய 'மகளிர் வளர்த்த தமிழ்' என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

### செயல்பாடுகள்

- தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த அதியமான் நெடுமானஞ்சியின் உயர்ந்த மனநிலையை எடுத்துக்கூறி உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.
- "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற ஔவையின் கருத்துகளை விளக்கி எழுதுங்கள்.

## மனவலிமை வேண்டும்

நம் வாழ்க்கையில் மூன்று கூறுகள் உள்ளன. ஒன்று, உலகத்தால் – சுற்றுப்புறத்தால் அமையும் வாழ்க்கைப் பகுதி. மற்றொன்று, உடம்பால் அமையும் பகுதி. இன்னொன்று மனத்தால் அமையும் பகுதி.

பெரும்பாலோர் உலகத்தை – சுற்றுப்புறத்தை – திருத்துவதில் முனைந்திருக்கிறார்கள். உடம்பைத் திருத்துவதில் சிறு முயற்சியே செய்கிறார்கள். மனத்தைத் திருத்துவதற்கு முயற்சி செய்வதில்லை. இது தலைகீழான நிலை. எப்படி என்று பார்ப்போம்.

இந்த உலகம் – சுற்றுப்புறம் – மிகப் பெரியது. தனி மனிதன் அதில் மிகச் சிறு கூறு. ஆகவே ஒருவன் எண்ணியபடி உலகத்தைத் திருத்திவிட முடியாது. மனிதனுடைய சக்தியைவிடக் காற்று, மழை, வெள்ளம், கடல், எரிமலை

முதலிய இயற்கைக் கூறுகளின் சக்தி மிகப் பெரிது. புயலோ, பூகம்பமோ நிகழும்போது, இயற்கையின் முன் மனிதன் எவ்வளவு சிறியவன் என்று எண்ணத் தோன்றுகிறது. நோய்க்கிருமிகளை எதிர்த்து மனிதன் எவ்வளவோ போராட வேண்டியுள்ளது. பலர் உலகத்தைத் திருத்தும் அரிய செயலை எளியது என்று தவறாக எண்ணிவிடுகிறார்கள். செய்யத்தக்க மற்ற நல்ல கடமைகளைக் கைவிடுகிறார்கள்.

உலகத்தைத் திருத்த முயலக்கூடாது என்று சொல்லவில்லை. அஃது எளியது என்று தப்புக்கணக்கு இட்டு ஏமாறக்கூடாது.

உலகத்தைத் திருத்துவதைவிட உடம்பைத் திருத்துவது எளியது. எவ்வாறு என்றால், உடம்பு ஓரளவு நம்முடைய கையில் உள்ளது. தகுந்த உணவு, நல்ல பயிற்சி, புலனடக்கம், தக்க மருத்துவம் முதலியவற்றால் ஓரளவு உடம்பு திருந்துவதைக் காண்கிறோம். ஆகையால் உடம்பைக் காக்கும் கடமையை ஒருவகை நம்பிக்கையோடு மேற்கொள்ள வேண்டும். ஆனால், இவ்வகையில் முயற்சி எடுத்துக் கொள்வார் ஒரு சிலரே. உலகத்தைத் திருத்த வரிந்து கட்டி ஓடுகின்றவர்களும் உடம்பைத் திருத்த முயல்வதில்லை.

மூன்றாவதாக உள்ளது மனம். அதைச் செம்மைப் படுத்திக்கொள்ள முயல்வது மிகமிகக் குறைவு. எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும் ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பியபடி மனத்தை வைத்துக்கொள்ள முடியும். காந்தியடிகள் இளமையில் எவ்வளவு பயங்கொள்ளியாக இருந்தார்! பிறகு அஞ்சாமையின் திருவுருவாக விளங்கினார். தன்னலம் நிறைந்த மனம், தியாகம் நிரம்பிய மனமாக, ஆக முடியும். ஒழுக்கத்தில் நம்பிக்கை அற்ற மனம், ஒழுக்கத்தில் உறுதி பெற முடியும். கண்டபடி அலையும் மனம் புத்தர் மனம் போல் அமைதி பெற முடியும். ஆசை நிரம்பிய மனம், பற்றற்ற மனம் ஆக முடியும். சோம்பலுக்கு இடம் தரும் மனம், விடாமுயற்சியைப் போற்றும் மனம் ஆக முடியும். எண்ணிய எண்ணியாங்கு எய்துப என்பது மனத்தைப் பொறுத்தவரையில் முழுவதும் நடக்கக் கூடியது.

மனம்போல வாழ்வு என்றால் வாழ்வே மனத்தின் தன்மையை ஒட்டியதுதான். இன்பமும் துன்பமும் மனநிலைக்கு ஏற்றவாறு அமையும். இவ்வளவெல்லாம் மனம் அடிப்படையாக இருந்தும் மனத்தைப் பண்படுத்துவதற்குப் பலர் முயல்வதில்லை. அதனாலேயே உத்தமர்களின் அறவுரைகள் பலர்க்குப் பயன்படுவதில்லை.

மனம் பண்படுவதற்கு வழி என்ன? நமக்கு முன் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளைப் படிக்க வேண்டும். அவர்கள் சொன்ன சொற்களை அல்லது, எழுதிவைத்த எழுத்துகளைத் திரும்பத் திரும்பப் படித்து உணர வேண்டும். கெட்ட காற்றிலும் நீரிலும் உள்ள நோய்க்கிருமிகள் நம் உடம்பில் புகாமல் ஊசி போட்டும் மருந்து உண்டும் காத்துக்கொள்வது போலவே, கெட்ட நூல்களிலும் கெட்ட கலைகளிலும் மனத்தின் பண்பாட்டுக்கு ஆகாத நோய்க் கருத்துகள் உள்ளன. அவை மனத்தில் புகாமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காப்போமானால் கட்டாயம் குறிக்கோளை அடைய முடியும். உலகத்தையும் உடம்பையும்

**பால்**

பால் ஐந்தாகும். அவையாவன ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.

ஓடினான் – ஆண்பால்
ஓடினாள் – பெண்பால்
ஓடினார் – பலர்பால்
ஓடியது – ஒன்றன்பால்
ஓடின – பலவின்பால்

**பால் விகுதிகள்**

அன், ஆன் – ஆண்பால்
(சென்றனன், சென்றான்)

அள், ஆள் – பெண்பால்
(சென்றனள், சென்றாள்)

அர், ஆர் – பலர்பால்
(சென்றனர், சென்றார்)

அது – ஒன்றன்பால்
(சென்றது)

அன – பலவின்பால்
(சென்றன)

**மதிப்புறு விகுதி**

ஆண்பால் அல்லது பெண்பால் ஒருமையை மதிப்புக் கொடுத்துச் சொல்லும்போது பலர்பாலுக்குரிய அர்/ஆர் விகுதி கொடுப்பதுண்டு.

ஆசிரியர் வந்தார்

அமைச்சர் பேசினார்

திருத்துவதைவிட இவ்வாறு மனத்தைப் பண்படுத்துவதுதான் கருதியபடி கைகூடுவது என்பதை உணர வேண்டும்.

பரிபாடலில் "ஐயனே ! உன்னிடம் யான் வேண்டிக் கேட்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் அறமுமாகிய இந்த மூன்றையுமே கேட்கின்றேன்" என்கின்றார்.

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே."

இவ்வாறு அவர் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் மேற்சொன்ன உண்மை உள்ளது. அதாவது, உலகத்தொடர்பான பொன், பொருள், போகம் இவற்றை நாம் நினைத்தபடி அடைய முடியாது. ஆனால் மனத்தின் தொடர்பான அன்பு, அருள், அற உணர்வு இவற்றை விரும்பி முயன்றால் முயற்சிக்கு ஏற்ப அடைய முடியும் என்ற உண்மையை உணர்ந்தே அவ்வாறு வேண்டினார்.

இந்த நம்பிக்கை ஏற்பட்டால், நமக்குப் பொறுமை இயல்பாக அமையும். பொறுமை என்றால், பிறர் கூறும் கொடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறுத்தலும், பிறர் செய்யும் துன்பத்தைத் தாங்கிப் பொறுத்தலும் மட்டும் அல்ல ; உடனடியாக விளையும் சிறு பயனை நாடி அவசரப்படாமல், நாளடைவில் விளையும் பெரும் பயனை விரும்பிப் பொறுத்திருக்கும் பொறுமையும் நமக்கு இயல்பாக அமையும்.

**திணை**

உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் உயர்திணை, அஃறிணை என இரு திணைகளாகப் பகுத்துள்ளனர்.

**உயர்திணை**

மனித இனமும் இறைவனும் உயர்திணை

**அஃறிணை**

மனிதன், இறைவன் அல்லாத பிற யாவும் அஃறிணை எனப்படும்.

எ.டு.: விலங்கு, பறவை, மரம், செடி, மலை, நீர், ஆகாயம், சூரியன், சந்திரன், கல், மண்.

**சிலேடை**

ஒரே கருத்து அல்லது விளக்கம் இருவேறு பொருள்களுக்குப் பொருத்தமாக அமைவது சிலேடை எனப்படும்.

முத்திருக்கும் கொம்பசைக்கும்
மூரித்தண்டேந்திவரும்
கொத்திருக்கும் நேரே குலைசாய்க்கும் –
எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைராயன்
வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்.

– காளமேகப் புலவர்

ஆமணக்குச் செடியில் ஆமணக்கின் விதை முத்துபோல் காணப்படும். ஊன்றுகோல் போன்ற தன் கொம்பை அசைக்கும். உள்ளே துளை உள்ள மூரித்தண்டு ஏந்தி வளரும். கொத்தாக இருக்கும் ஆமணக்குக் குலையை நேரே உயர்த்தித் தலையைச் சாய்க்கும். யானை முத்துப்போன்ற தன் வெண்ணிற தந்தத்தை அசைக்கும். உள்ளே துளை உள்ள தன் துதிக்கையை ஏந்திக்கொண்டு வரும். கொத்தாகப் பழுத்திருக்கும் வாழைக்குலையைச் சாய்க்கும்.

திருவள்ளுவர் இதை எவ்வளவு அழகாகச் சொல்கிறார்;

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

பழிக்குப் பழி என்று ஒறுத்தவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பது ஒரு நாள் இன்பம்தானாம். அவ்வாறு அன்றிப் பொறுமையுடன் இருப்பதற்கு எவ்வளவோ மனவலிமை வேண்டும். அந்த மனவலிமை பாடுபட்டால் பெறக் கூடியது. துறவிகளின் மனவலிமையைவிட இந்த மனவலிமை சிறந்தது என்பது திருவள்ளுவரின் கருத்து. "உணவு உண்ணாமல் நோன்பு நோற்பவர்களைவிட பிறருடைய கடுஞ்சொற்களைப் பொறுத்திருப்பவர்கள் பெரியவர்கள்" என்கிறார் அவர்.

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்"

அவ்வாறே, கோபம் கொள்வதற்கு மன வலிமை தேவையில்லை: கோபம் வராமல் தடுத்துக்கொள்வதற்கே மனவலிமை வேண்டும். பொய் சொல்வதற்கு மனவலிமை தேவையில்லை; யார் வேண்டுமானாலும் எப்போதும் பொய் சொல்ல முடியும். ஆனால் என்ன காரணத்திற்காகவும் பொய்சொல்லாமல் உண்மையே பேசி உண்மையாக நடப்பதற்கு மனவலிமை வேண்டும்.

– மு. வரதராசனார்

மு. வரதராசனார் ஏப்ரல் 25, 1912 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திருப்பத்தூரில் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் இருந்துள்ளார். அகல் விளக்கு, கள்ளோ? காவியமோ? பெற்ற மனம், கயமை, கரித்துண்டு, வாடாமலர் போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். 1961 ஆம் ஆண்டு 'அகல் விளக்கு' என்ற புதினத்திற்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளது.

## செயல்பாடுகள்

- கோபம் கொள்வதற்கு மனவலிமை தேவையில்லை, கோபம் வராமல் தடுத்துக் கொள்வதற்கே மனவலிமை வேண்டும் என்ற மு.வ.வின் கருத்தை விளக்கி எழுதுங்கள்.
- மனிதனுக்கு மனவலிமை வேண்டும் என்பதை விளக்கும் வகையில் செய்தி தயாரியுங்கள்.

## தெளிவு பிறந்தது!

சேகர் மிகுந்த கவலையுடன் மருத்துவ மனையுள் புகுந்தான். அங்குமிங்கும் அவன் கண்கள் எதையோ தேடின. ஆபரேசன் தியேட்டர் அருகே கவலையுடன் நின்று கொண்டிருந்த சிறு கூட்டத்தின் மீது அவனது பார்வை நிலைகுத்தி நின்றது. அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து இன்னும் முரளியை ஆபரேசன் தியேட்டரிலிருந்து வெளிக்கொண்டு வரவில்லை என்பது புரிந்தது.

மிகுந்த மனத்தளர்வுடன் அங்கிருந்து நகர்ந்து வாசற்படியை நோக்கி நடந்தான். ஏதோ இனம் புரியாத கவலைகள் அவன் மனதைக் கவ்விக் கொண்டிருந்தன. வாசற்படியை அடைந்தும்கூட வெளியேற மனமில்லாதவனாக அருகே கிடந்த பெஞ்சில் சிறிதுநேரம் அமர்ந்தான்.

அங்கே கவலை தோய்ந்த முகத்துடன் முரளியின் அப்பா, அம்மா, தங்கை அமலா, பள்ளித் தலைமையாசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் ஆகியோர் ஒரு சிறு கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். தங்கள் கவலையையும் மன ஆதங்கத்தையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர்.

சேகர் அவர்களை நெருங்கி நின்ற போதிலும் யாரும் அவனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

சேகரின் மனத் தவிப்பை மற்றவர்கள் பொருட்படுத்தாவிட்டாலும் மாமாவால் அவ்வாறு இருக்க, அவர் மனம் இடம்தரவில்லை.

முரளியின் கால் உடைந்ததற்கு நிச்சயம் சேகர் காரணமில்லை என்பது மாமாவுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அந்தச் சம்பவம் நடக்கும் போது உன்னிப்பாகக் கவனித்தவர்களில் அவரும் ஒருவர்.

முரளியின் மாமா அவன் மீது அளவு கடந்த அன்பு காட்டியவர். படிப்பில் 'ஓகோ' என்று இல்லாவிட்டாலும் நல்ல விளையாட்டு வீரனாக விளங்கியது அவருக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்தது.

முரளி விளையாட்டில் மேலும் மேலும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்பதில் அவனைவிட ஆர்வம் உடையவராக இருந்தார். இதற்காக அவன் விரும்பிக் கேட்ட விளையாட்டுக் கருவிகளையெல்லாம் வாங்கிக் கொடுத்திருந்தார். விளையாட்டைப் பொறுத்தவரை முரளியிடமிருந்த ஒரு கெட்டப் பழக்கத்தைமட்டும் அவர் அறவே வெறுத்தார். அதுதான் அவன் விளையாட்டில் தோற்போம் என்று தெரிந்தால் எதிரிகளிடம் முரட்டுத்தனமாக நடந்து, குறுக்கு வழியில் வெற்றி பெற முயல்வது. இதைப்பற்றி மாமா எத்தனையோ தடவை எடுத்துக் கூறியும் எச்சரித்தும் பயன் இல்லை. அவன் கடைப்பிடித்த அந்த முரட்டுத்தனம்தான் இன்றைக்கு முரளியை ஆபரேசன் தியேட்டர்வரை கொண்டு வந்து சேர்த்துள்ளது.

அங்கு நிசப்தம் நிலவியது. சேகரின் மனம் மீண்டும் ஒரு முறை அந்தச் சம்பவத்தை அசைபோடத் தொடங்கியது.

பள்ளியின் பல்வேறு விளையாட்டுகளில் முரளி பங்கேற்றாலும், பள்ளி கால்பந்துக் குழுவின் 'கேப்டன்' என்ற பெருமையைத்தான் அதிகம் விரும்பினான். இது சேகருக்கும் தெரிந்ததுதான்.

சேகர் வேறொரு பள்ளியின் கால்பந்துக் குழுவின் கேப்டன். பல போட்டிகளில் முரளியுடன் விளையாடிய அனுபவம் உண்டு.

வழக்கம்போல 'சுதந்திர தின' விளையாட்டுப் போட்டிகள் மாநகராட்சிப் பள்ளி மைதானத்தில் தொடங்கின. அன்று காலையில் இறுதியாகத் தேர்வுபெற்ற கால்பந்தாட்டக் குழுவின் இரு அணிகளும் மோதின. ஒரு அணிக்கு முரளி கேப்டன். மற்றொரு அணிக்குச் சேகர் கேப்டன். பல மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் ஆர்வமுள்ள பெற்றோர்களும் மைதானத்தைச் சுற்றிலும் குழுமியிருந்தனர். முரளியின் வெற்றியை எதிர்நோக்கியவராக அவன் மாமா கழுகுபோல் விளையாட்டைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

முரளி அணியினர் மிகுந்த துடிப்புடன் விளையாடத் தொடங்கினர். ஆனால், போகப் போக சேகர் அணியின் கையே ஓங்கிக் கொண்டிருந்தது. முதலாவது கோலை சேகர் போட்டான். குழுமியிருந்தோர் அனைவரும் ஆரவார ஒலியோடு கைதட்டி உற்சாகமூட்டினர்.

இரண்டாவது ஆட்டம் தொடங்கியது. பந்தை லாவகமாகவும் தந்திரமாகவும் போக்குக்காட்டி நகர்த்திக் கொண்டிருந்தனர் சேகர் அணியினர். மீண்டும் மீண்டும் கைதட்டல்களும் உற்சாக ஒலிகளும் பார்வையாளர் பகுதியிலிருந்து ஒலித்துக்கொண்டே இருந்தன. இதைச் சிறிதும் பொருட்படுத்தாதவன்போல் சேகர் சுறுசுறுப்பாகவும் விதிமுறையோடும் விளையாடிக்கொண்டிருந்தான்.

ஆனால், முரளியின் மனநிலையில் மாறுதல் ஏற்பட்டது. 'இம்முறையும் சேகர் கோல்போட்டுவிட்டால்' நினைக்கும்போதே முரளியின் நெஞ்சு படபடத்தது. அதுவரை முறையாக ஆடிவந்த முரளி எப்படியாவது பந்து தன் பகுதி கோலை நோக்கிப் போகாமல் தடுக்கத் தாறுமாறாக ஓடித் தடுக்கலானான். இதைக் கண்ட பார்வையாளர்கள் கூச்சலிட்டு ஆட்சேபிக்கத் தொடங்கினர். இது மேலும் முரளிக்கு எரிச்சலூட்டியது.

முரளியின் ஆட்டப்போக்கு அவன் மாமாவுக்குப் பிடிக்கவில்லை. அவனை நன்றாகத் தெரிந்தவர் ஆதலால் அடுத்து என்ன நடக்குமோ என்ற கவலையுடன் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

பார்வையாளர் பகுதியிலிருந்து எதிர்ப்புக்குரல்கள் முரளியை மேலும் மேலும் தவறு செய்யத் தூண்டின. அவனுள் உறங்கிக் கொண்டிருந்த முரட்டுத்தனம் தலைதூக்கியது. அவன் மனதில் மட்டுமல்ல; ஆட்டத்திலும் தடுமாற்றம் ஏற்பட்டிருந்தது.

அதே சமயம் சேகர் பொறுமையாகவும் முறையாகவும் விதிமுறை பிறழாமல் விளையாடிக்கொண்டிருந்தான். லாவகமாக அவன் காலுக்குப் பந்து கிடைத்தது. அவன் சாதுரியமாகப் பந்தைக் கோலை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தான். இரண்டாவது கோலையும் சேகரே போட்டு விடுவானோ என்ற அச்சத்துடன் முரளி அவனை நெருங்கிப் பந்தைத் தன் வசமாக்க வெறித்தனமாக முயற்சி மேற்கொண்டான். முரட்டுத்தனமாகப் பந்தை இழுக்க முயன்றான். முரளியின் முரட்டுத் தாக்குதலிலிருந்து இருமுறை பந்தைக் 'கட்' செய்து நகர்த்திச் சென்றான் சேகர். இதே போக்கில் இன்னும் சில விநாடிகள் பந்தை நகர்த்திச் சென்று பந்தை ஓங்கி உதைத்தால் அது கோலுக்குள் சென்றுவிடும். கூட்டம் பரபரப்போடு அந்தக் காட்சியைக் காணத் துடித்துக்கொண்டிருந்தது. இன்னுமொரு வெற்றி சேகருக்குக் கிடைப்பதை முரளியால் நினைத்தே பார்க்க முடியவில்லை.

முரளி திடீரென ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப்போல் சேகரை நெருங்கினான். தொடர்ந்து பந்தை மட்டுமல்ல சேகரையே முன்னேற விடாமல் தடுக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபடலானான். பந்தைத் தன்பால் இழுப்பதற்கு மாறாகச் சேகரின் காலை ஓங்கி உதைத்துத் தன் காலைக் கொக்கிபோல் மாட்டி இழுத்துவிட முயன்றான். தன் காலைச் சேகர் லாவகமாக உதறி இழுத்துக் கொண்டான். இதைச் சிறிதும் எதிர்பாராத முரளி நிலை குலைந்து சமநிலை பெற முடியாமல் தடுமாறி, மடக்கிய காலோடு கீழே விழுந்தான். சேகரின் பந்தைக் கவர்ந்து இழுக்க முனைப்போடு ஓடிவந்த இருவர் வேகமாக முரளிமீது தடுமாறி விழுந்தனர். விழுந்த இருவரும் கனத்த சரீரமுடையவர்கள். அவர்கள் இருவரின் உடல் பாரமும் ஒரே சமயத்தில் மடக்கிய கால் எலும்பின் மீதே விழுந்தது. அவன் கால் எலும்பு நொறுங்கவே வலி தாங்காமல் முரளி கத்தினான்.

ஆம்புலன்ஸ் வண்டி முரளியை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

இந்தக் காட்சி சேகரின் மனத்திரையில் படமாக ஓடி மறைந்தது.

நீண்ட சிந்தனையிலிருந்த சேகரின் கவனத்தைத் திருப்பியது ஆபரேசன் தியேட்டரிலிருந்து வெளிவந்த டாக்டரின் வருகை; டாக்டர் பேசத் தொடங்கினார்:

"முரளிக்கு இனி எந்த ஆபத்தும் இல்லை. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சும்பாங்களே" அதுபோல அவனுக்கு ஏற்பட இருந்த ஆபத்து வெறும் கால் எலும்பு முறிவோடு நின்னுடுச்சு. எலும்பு முறிவைச் சரிப்படுத்தி மாவுக்கட்டுப் போட்டிருக்கோம். மயக்கம் தெளிய இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். வேண்டுமானால் சற்று தூரத்தில் நின்று பார்த்துவிட்டுச் செல்லுங்கள். யாராவது ஓரிருவர் பக்கத்தில் இருந்தால் போதும். மற்றவர்கள் போகலாம்."

டாக்டர் கூறியதை ஏற்றவர்களாக முரளியைச் சற்றுத் தூரத்தில் பார்த்துவிட்டு அவன் குடும்பத்தார் வெளியேறினார்கள். அவன் மாமா மட்டும் அங்கேயே தங்கிவிட்டார். சேகரும் தயங்கியபடியே அங்கே பெஞ்சில் அமர்ந்திருந்தான். முரளியின் மயக்கம் தீர்ந்த பின்னர், அவனை நேரில் பார்த்த பிறகே செல்வது எனத் தீர்மானமாக இருந்தான்.

நேரம் செல்லச்செல்ல லேசாக உடல் அசைவு ஏற்பட்டது. பெரிதாக மாவுகட்டுப் போடப்பட்ட காலைத் தவிர மற்ற அவயவங்கள் அசைந்தன.இதைக் கண்டபோது மாமாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அவர் முகத்தில் பிரதிபலித்தது.

முரளி மெதுவாகக் கண்களைத் திறந்தபோது மாமா லேசாகச் சிரித்தார். அவரது சிரித்த முகம் முரளிக்கு ஆறுதலாக இருந்தது.

தன் காலில் ஒன்றை அசைக்க முடியாமலிருப்பதை விரைவிலேயே உணர்ந்தான். தன் கையைக் கொண்டு தடவிப் பார்த்தபோது கட்டுப் போடப்பட்டிருந்ததை அறிந்தான். அவன் கண்கள் நீரைச் சொரிந்தன.

"முரளி! நீ பயப்படுவதுபோல் எதுவும் நடந்துவிடவில்லை. லேசான எலும்பு முறிவுதான். கட்டுப்போட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு வாரத்தில் எல்லாமே சரியாகிவிடும். தெம்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். நீ ஒரு விளையாட்டு வீரன் என்பதை மறந்துவிடாதே!"

இவ்வாறு அவன் மாமா ஆறுதல் கூறி அன்போடு தட்டிக்கொடுத்தார். இதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த சேகர் மெதுவாக அந்த அறைக்குள் நுழைந்தான்.

மாமா சைகை காட்டி சேகரை அழைத்தார். படுக்கையருகே வந்த சேகர், கனிவோடும் பரிவோடும் முரளியை நோக்கிப் புன்முறுவல் பூத்தான். தன் கைகளை நீட்டினான். நீட்டிய சேகரின் கரங்களை முரளி இறுகப் பற்றினான். அவன் பேச நாவெடுத்தான். குரல் தழதழத்தது. 'என்னை

**தமிழ் எண்கள்**

க = 1

உ = 2

ங = 3

ச = 4

ரு = 5

சு = 6

எ = 7

அ = 8

கூ = 9

கo = 10

கoo = 100

மன்னித்துவிடு சேகர்!' என்று அரைகுறையாகப் பேசி முடித்தான் முரளி. தன் கைகளால் முரளியின் வாயை லேசாகப் பொத்தியபடி "முரளி! நீ எந்தத் தவறும் செய்யவில்லை. எதேச்சையாக நடந்துவிட்ட விபத்துக்கு யாரும் பொறுப்பில்லை. பேரபாயம் ஏதும் ஏற்படாமல் காத்த கடவுளுக்குத்தான் நாம் எல்லோரும் நன்றி சொல்ல வேண்டும்" என ஆறுதல் வார்த்தைகளைப் பேசினான்.

தன் முரட்டுத்தனமான போக்கும் தவறான எண்ணமும் தனக்கே தண்டனையாக அமைந்து விட்டதை முரளி உணரவே செய்தான். 'நினைக்கும் கெடுதி தனக்கே' என்பது எவ்வளவு பெரிய உண்மை என்பது மின்னல் வெட்டுப் போல் அவன் மனதில் பளிச்சிட்டு மறைந்தது.

– மணவை முஸ்தபா

மணவை முஸ்தபா அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் பிலாத்து என்ற ஊரில் 1935 இல் பிறந்தார். எழுத்தாளர், இதழியலாளர் போன்ற நிலைகளில் செயல்பட்டவர். அறிவியல் தமிழில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். சிறுவர் கலைக்களஞ்சியம், மருந்து கலைச்சொல் களஞ்சியம், அறிவியல் தமிழின் விடிவெள்ளி, காலம் தேடும் தமிழ் போன்ற நூல்களை எழுதியுள்ளார். செம்மொழிக் காவலர் விருது, கலைமாமணி விருது, திரு.வி.க விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இப்பாடப்பகுதி 'தெளிவு பிறந்தது' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- 'தெளிவு பிறந்தது' என்ற கதையைக் குறுநாடகமாக மாற்றி எழுதுங்கள்.
- 'மனவலிமையே வாழ்க்கையின் வெற்றி' என்பதை அடிப்படையாகக் கொண்டு பள்ளி இதழில் வெளியிட கட்டுரை தயாரியுங்கள்.
- 'பாதுகாப்பு' என்ற கருத்தின் அடிப்படையில் கவியரங்கம் நடத்துங்கள்.
- வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவைப்படுவது மனவலிமையா, உடல் வலிமையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துங்கள்.
- உங்கள் பள்ளியின் சார்பாக மதுவிற்கு அடிமையாகும் இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடத்துங்கள்.

# அகராதி

அக்னி – தீ
அகடு – வயிறு
அடிசில் – உணவு
அப்பட்டமாக – ஒளிவு மறைவில்லாமல், நேரடியாக, வெளிப்படையாக
அபிவிருத்தி – முன்னேற்றம்
அயின்ற – உண்ட
அரண் – மதில், கோட்டை
அலங்காரம் – அழகுபடுத்துதல், ஒப்பனை
அலாதி – அளவற்ற
அவயவங்கள் – உடல் உறுப்புகள்
அவல் – பள்ளமான நிலம்
அழல் – நெருப்பு
ஆக்ரோஷம் – கடுங்கோபம், ஆவேசம்
ஆடவர் – மக்கள்
ஆர்கலி – மிகுந்த ஒலியுள்ள கடல்
இயமநியமம் – வாழ்வியல் சார்ந்த நல்லொழுக்கம்
இழுது – நெய், வெண்ணெய்
இன்னா – துன்பம்
ஈ – கொடு
உதாசீனம் – அலட்சியம்
உதிர்தல் – சிந்துதல்
ஊழிக்காலம் – பேரழிவு நிகழும் காலம்
எட்டி – ஒருவகை மரம்
எடுகோள் – கருதுகோள்
எயிறு – பல்
எழில் – அழகு
எழிலி – மேகம்
ஏகாரவல்லி – பலா
ஏகுதி – செல்வாயாக
ஐயம் – கபம், சந்தேகம், தயக்கம்
ஒறுத்தார் – துன்பம் செய்தவரைப் பொறுத்துக் கொள்ளாதவர்
ஒன்னார் – பகைவர்
ஒசுனர் – எண்ணெய் விற்பவர்
கந்தல் – கிழிந்த ஆடை
கமழ்தல் – மணம் வீசுதல்
கருணை – கருணைக்கிழங்கு
கழல் – காலில் அணியும் அணி
களம் – நிலம்
களிப்பு – மகிழ்ச்சி
கன்னல் – கரும்பு
கனி – பழம், இனிமை
காருகர் – ஆடை நெய்பவர்
குழவி – குழந்தை
கேதகை – தாழை மலர்
கோங்கு – ஒருவகை மரம்
சித்திரம் – ஓவியம்
சீராக – ஒழுங்காக , சமமாக
சுனை – நீரூற்று
சென்னி – தலை
சொன்றி – சோறு
சௌந்தர்யம் – அழகு
தடக்கை – பெரிய கை
தண் – குளிர்ச்சி
தயக்கம் – தடுமாற்றம்
தரிசு நிலம் – பயிரிடப்படாத நிலம்
தரு – மரம்
தளிர் – இளந்தழை
திங்கள் – சந்திரன், நாள்

| | | |
|---|---|---|
| திண் | – | திடமான |
| திரை | – | அலை |
| தினை | – | ஒரு தானியம் |
| தீம்பழம் | – | இனிய பழம் |
| தீம்பிழைக்கும் | – | தீமைதரும் |
| துகள் | – | சிறு பகுதி |
| துன்று | – | நெருங்கிய, அடர்ந்த |
| தூறு | – | புதர், குறுங்காடு |
| தொடி | – | வளையல் |
| தோரை | – | மலைகளில் பயிரிடப்படும் ஒரு நெல் வகை |
| நகை | – | சிரிப்பு |
| நாதாந்தன் | – | சிவன் |
| நியதி | – | ஒழுக்கவிதி |
| நீல மணிமிடற்றான் | – | சிவபெருமான் |
| நுதல் | – | நெற்றி |
| படாகை | – | கொடி |
| பண் | – | இசை |
| பண்டிதன் | – | அறிஞர், புலமை உடையவர் |
| பண்ணியம் | – | பண்டம் |
| பணி | – | வேலை |
| பதி | – | ஊர் |
| பழுது | – | சீர்கேடு, சிதைவு |
| பா | – | பாடல் |
| பாலிகை | – | தாழி, தானியங்களை முளைக்க வைக்கும் மண்பானை |
| பாறுகழுகு | – | பிணம்தின்னிக் கழுகு |
| பிணி | – | நோய் |
| பூரணம் | – | முழுமை |
| பொதிகை | – | தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள மலையின் பெயர் |
| பொய்கை | – | குளம் |
| பொலந்தார் | – | பொன்னால் செய்யப்பட்ட மாலை |
| பொழில் | – | சோலை |
| போகம் | – | இன்பம் |
| போத்தல் | – | குடுவை |
| போனகம் | – | உணவு |
| மடந்தை | – | பெண் |
| மடு | – | சிறுகுளம் |
| மடுத்தல் | – | உண்டல் |
| மதகு | – | மடை, நீரை திருப்பிட உதவும் வாயில் |
| மதி | – | நிலவு, அறிவு |
| மாசற்ற | – | குற்றமற்ற |
| மாரி | – | மழை |
| மிசை | – | உயர்ச்சி, மேடான நிலம் |
| மிடறு | – | கழுத்து |
| மிடா | – | மண்பானை |
| முகில் | – | மேகம் |
| முரல் | – | பல், புன்சிரிப்பு |
| மூசு | – | மொய்த்தல் |
| வடு | – | தழும்பு, பிஞ்சு |
| வர்ணங்கள் | – | வண்ணங்கள் |
| வரகு | – | ஒரு தானியம் |
| வருக்கம் | – | பொருளின் கூட்டம் |
| வரை | – | மலை |
| வலம் | – | வெற்றி |
| வன்மை | – | வலிமை, உறுதி |
| வாசிகை | – | மாலை |
| வாடை | – | வடக்கு இருந்து வீசும் காற்று |
| வாய்மை | – | உண்மை |
| விடர் | – | மலைப்பிளப்பு, குகை |
| வீறிட்டு | – | சத்தமாக |
| வெறுக்கை | – | செல்வம் |
| வெஸ்பா | – | ஸ்கூட்டர் நிறுவனம் |
| ஸ்முலே | – | செயலி |